கல்கி

ஸ்வீடா...ஸ்டைலா...ஸ்மார்டா...



KALKI ○ 11.04.2010 ○ ரூ.10.[illegible] ○ 96 பக்கங்கள்



திருவிழா ஸ்பெஷல்

மிக பிரம்மாண்டமான

மஹாருத்ர ஹோமம்

(சென்னையில்)

"உலக நன்மைக்காக"

இந்தியாவிலேயே முதன் முறையாக
அனைத்து தரப்பு மக்களும்
பங்கேற்கும் வகையில்

"15 லட்சம் ருத்ராக்ஷங்கள்

கொண்ட பந்தலின் கீழ்

1. ஹோமங்களிலேயே தலையாய ஹோமமாக கருதப்படுவது மகாருத்ரஹோமம்
2. இது 150க்கும் மேற்பட்ட வேத விற்பன்னர்கள் கூடி 3 நாட்கள் (6 வேளை நடத்தும் மாபெரும் ஹோமம்)
3. இது அனைத்து தரப்பு மக்களும் கலந்து நடத்தும் வகையில் (சாங்கல்பம்) எங்களது ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட் மூலம் நடைபெற இருக்கிறது.
4. இந்த மஹா ருத்ர ஹோமத்தைப் பற்றி யஜுர் வேதம் குறிப்பிடுகையில் சமகம் (ஒரு மனிதனின் தன்னுடைய தேவைகளாக எதை நினைக்கிறானோ) அதை அனைத்தையும் கொடுக்க வல்லது என கூறுகிறது.
5. ருத்ராக்ஷமானது "முத்து, பவழம், ஸ்படிகம், தாமரை போன்ற மாலைகளை கொண்டு உச்சரிக்கும் மந்திரங்கள் பல மடங்கு பலன்களை அளித்தாலும் அதை விட கோடி மடங்கான பலனை அளிக்க வல்லது என நடராச சதகம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.
6. இந்த ஹோமம் 15 லட்சத்திற்கு மேற்பட்ட ருத்ராட்சங்கள் கொண்ட பிரமாண்ட பந்தலின் கீழ் இந்தியாவிலேயே முதன் முறையாக நடத்த திட்டமிட்டுள்ளது.
7. இவ்வகையில் நடத்தப்படும் இந்த ஹோமம் இதில் பங்குபெறும் 150 வேத விற்பன்னர்களால் கிட்டத்தட்ட 4 ஆயிரம் முறை உச்சரிக்கப்படும் ருத்ர ஜபமானது 15 லட்சம் ருத்ராக்ஷங்கள் மூலம் கணக்கிலடங்கா மடங்கு பலனை தரும் என்பது உறுதி.
8. இதில் கலந்து கொள்வதன் மூலம் திருமணத்தடை, கல்வி, வேலைவாய்ப்பு, நல்வாழ்க்கை, கடன் பிணி நீங்க, மன அமைதி போன்ற மனிதனின் பலவிதமான நியாயமான தேவைகள் இறையருளால் நிறைவேறும் என்பது நிச்சயம்.
9. இதில் பல்வேறு ஆதீனங்களும், ஆன்மிகவாதிகளும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்கள் அனைவரையும் ஒரு சேர தரிசிக்கும் சந்தர்ப்பமாக இந்த ஹோமம் அமையும்.
10. பல வருடங்களாக தொடர்ந்து செய்யும் ஹோமம் மூலம் பெறப்படும் பலன்களை இந்த 3 நாட்கள் ருத்ராக்ஷ பந்தலின் **கீழ் நடைபெறும் ஹோமம் தருவதால்**, தாங்கள் இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் கலந்து கொள்ள அன்புடன் **அழைக்கிறோம்.**



நாள்: மே 14, 15, 16 (அட்சய திருதியை)

150 வேத விற்பன்னர்களால்
3 நாட்கள் நடைபெறும்
ஹோமத்தில் பங்குபெற அரிய வாய்ப்பு...!

சிறப்பு பங்களிப்பை அளிக்க உழவாரப் பணி,
திருப்பணி குழுவினரையும் வரவேற்கிறோம்...

நடைபெறும் இடம்

ஸ்ரீராமச்சந்திரா ஹாஸ்பிடல், சிட்டி சென்டர், எண்: 24, டாக்டர் வாசுதேவ் நகர்,
(பஸ் நிலையம் பின்புறம்), திருவான்மியூர், சென்னை - 600 041.

மேலும் விபரங்களுக்கு

ஆருத்ரா சேவா சாரிடபிள் டிரஸ்ட்® - சென்னை - 20.

போன்: 044-4550 4330, 91763 62022, 95000 40195, 98401 05060

தீராத ARTHRITIS வலியிலிருந்து விடுதலை

அறுவை இல்லா நவீன சிகிச்சை


- ✲ வலி இல்லை
- ✲ அறுவை சிகிச்சை இல்லை
- ✲ நீண்ட நாட்கள் மருந்து இல்லை
- ✲ குறைந்த கால சிகிச்சை
- ✲ பக்கவிளைவுகள் இல்லை
- ✲ மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.



PEMF treatment



works to stop the pain ..



NEOMED HOSPITAL

SPECIALITY & RESEARCH CENTER

Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Ph : 044-2620 1147 / 2620 0882. Fax : 2620 0831

Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Ph : 0452-2581414, 2581515.

Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Ph : 0427-2311818, 2311819.

Trichy : No. 52, Central Bazaar Street, Tennur, Trichy. Ph : 0431-2791051, 2791052.

www.neomedhospitals.com

● புதுவை கிருஷ்ணன், புதுச்சேரி

பட்டினத்தார் கரும்பு, மன்மதன் கரும்பு... ஒப்பிடுக?

மன்மதன் கரும்பு மயக்கும் வில்... பட்டினத்தார் கரும்பு எதற்கும் மயங்காத Will Power இரும்பு... மன்மதன் கரும்பு இகம்... பட்டினத்தார் கரும்பு பரம்.. முன்னதில் ரதி ஆட்சி... பின்னதில் கதி மோட்சம்... முளைவிடும் மன்மதக் கரும்பு இனிக்கும் விருந்து... முதிர்ந்த பட்டினத்தார் கரும்பு பிறவிப் பிணிக்கு மருந்து!



காதலன் வாட்ச்மேன்-கணவன் செக்யூரிட்டி!

● பா.அசோக், விருதுநகர்

சேலை கட்டும் பெண்ணுக்கு வாசம் உண்டா?

வேட்டி கட்டும் ஆணின் சக'வாசம்'!

● சரஸ்வதி, வேலூர்

எழுத்துக்களை உச்சரிப்பது நாக்கா, வாயா?

சரஸ்வதிக்கே இந்த சந்தேகம் வரலாமா...! அனா, ஆவன்னா, இனா, ஈயன்னா... இப்படி எல்லா எழுத்துக்களும் ''நா''வில் தான் முடிகிறது!

● மா.சுந்தரமூர்த்தி, செய்யாறு

கடவுளைக் ''கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்'' என்பதன் பொருள் விளங்கவில்லையே...?

பொரிவிளங்காய் உருண்டை போல, கடவுள் ஒரு பரம்பொருள் விளங்கா உருண்டை... அதைக் கண்டவர் உடைத்து விண்டிலர்... விண்டவர் வாயால் உண்டிலர்!

● ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி

விதி, வீதி ஒப்பிட முடியுமா?

விதிக்கு கொம்பு முளைத்தால் நம்மை நடுவீதியில் நிறுத்தும்!

● வே.ஈஸ்வரன், இராஜபாளையம்

காலை எழுந்தவுடன் படிப்பு... பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு... நீங்க எப்படி?

காலை எழுந்திருக்க Lazy அதனால்
காலை நீட்டிப் படு Easy
மாலையில் மேடை ராசி -என்று
வழக்கப்படுத்திக் கொண்ட Crazy!

● எஸ். அமிர்தா, சென்னை

சூர்ப்பனகைக்கு ரன்னிங்-நோஸ் பிரச்னை வந்தால் எப்படி சமாளிப்பாள்?

லக்ஷ்மணனால் மூக்கு சீவப்பட்ட சூர்ப்பனகை, Sharpபனகை ஆவாள்... ரன்னிங் நோஸுடன் ராவணனை நோக்கி மூக்கால் அழுதபடி ரன்னிங்-ரேஸ் ஓடுவாள்!

● எம்.மிக்கேல் ராஜ், சாத்தூர்

உங்களுக்குப் பிடித்த குறள்?

வெற்றிலை சீவல் போடும் எனக்கு பிடித்த குறள் ''துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித்...'' என்று துவங்கும் குறள். கேட்டதால் வந்த குறள்...

''துப்பாதான் தொப்பைக்கு தப்பாம் புகையிலை-
துப்புரவாய் துப்பித் தொலை!''

● ம.ஜானகிராணி, சென்னை

மீன் தூங்குமா? பகலிலா இரவிலா?

பகலில் தூங்கும் விண்மீன்... இரவில் தூங்கும் விழிமீன்... வேலை செய்யாமல் இரவும் பகலும் தூங்கினால் "SelFISH"!

- த.புகழேந்தி, கூகூர்

வாட்ச்மேன், செக்யூரிட்டி என்ன வித்தியாசம்?

காதலன் வாட்ச்மேன்... கணவன் செக்யூரிட்டி!

- எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

காந்தி மீண்டும் பிறந்தால்?

ஆட்டுப் பாலைத் தவிர்ப்பார்... காரணம் GOAT-லே!



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

தூக்குங்கய்யா தேரு... சுத்துங்கய்யா ஊரு!

மின்வாரிய ஊழியர்கள் இருபது பேர், அந்தக் கிராமத்துக்கு வருகிறார்கள். வீடுகள், கடைகள் மற்றும் தெரு விளக்குகள் என எல்லா மின் இணைப்புகளையும் விட்டு விடாமல் அனைத்தையும் துண்டிக்கிறார்கள். அதன் பின்னரே, தூக்குத் தேர்த் திருவிழா நடைபெறத் துவங்குகிறது. காரணம், தூக்குத் தேர் என்பது சுமார் எழுபது அடி உயரம் கொண்டது. ஒவ்வொரு வீதியையும் தூக்குத் தேர் கடந்து சென்ற பின்பே, ஒவ்வொரு வீட்டுக்கும் மறுபடி மின் இணைப்பு தரப்படுகிறது.

தஞ்சை மாவட்டம் திருச்சேறை அருகே நாகரசம்பேட்டை கிராமம். அங்கு அமைந்திருப்பது அழகு நாச்சியம்மன் கோயில். அந்தக் கோயிலின் மிக முக்கியத் திருவிழா, தூக்குத் தேர்த் திருவிழா. நாகப்பாம்பும் அரச மரமும் சேர்ந்து சிவனுக்கு அர்ச்சனை செய்த தலமாம். அதனால், ஊர் பெயர் நாகரசம்பேட்டை.



* தூக்குத் தேர்

"தூக்குத் தேரைக் கட்டி முடிக்கவே, மூணு நாளு ஆவும். கோயில் வாசல்ல வெச்சுத்தான் கட்டுவாங்க. சுமார் எழுபது - எம்பதடி உயரத்துக்கு தேரு பிரமாண்டமா தரையில உட்கார்ந்து இருக்கும். எப்படியும் பத்து டன் எடை வரும். சக்கரம் ஏதும் கிடையாது. சக்கரம் பொருத்திட்டா அது தேராயிடும். ஆனால் சக்கரம் மட்டும் செய்யாம விட்டுட்டு, இந்தப் பக்கம் நூறு பேரு அந்தப் பக்கம் நூறு பேர்ன்னு மொத்தம் கொறைஞ்சது இருநூறு பேராவது, தேரைச் சுமந்து தூக்கி வருவோம். அதுதான் தூக்குத் தேர்!'' எனச் சொல்கிறார் கிராமவாசி ஒருவர்.

''சித்திரை மாதம் காப்பு கட்டுவாங்க. எங்க ஊர்ல இது பதினாறு நாள் திருவிழா. கடைசி நாளன்னைக்கு தூக்குத் தேர்த் திருவிழா. ஒவ்வொரு வருசமும் சித்திரை மாதம் வளர்பிறையில வர்ற மொதல் செவ்வாய் அன்னைக்கி தூக்குத் தேர்!'' எனக் குறிப்பிடுகிறார் அழகு நாச்சியம்மன் கோயில் பூசாரி.

தூக்குத் தேரைக் கட்றதைப் பார்க்கறதுக்கே அப்பப்ப பெரிய கும்பல் திரண்டு நிக்கும். கட்டி முடிச்சாச்சா? மறுநாள் செவ்வாய்க்கிழமை தூக்குத் தேரு! மொதல் நாளு திங்கட்கிழமை ராவு பன்னெண்டு மணிக்கே, அழகு நாச்சியம்மன் உற்சவரை அலங்காரம் செஞ்சு, தூக்குத் தேரின் உள் மேடைக்குக் கொண்டு வந்து சேர்த்துடுவாங்க.

தூக்குத்தேர் திருவிழா




ராவு ரெண்டு மணிக்கு, அந்தத் தூக்கு தேரை ஒரு ஒத்திகை மாதிரி, ஐம்பதடி தூரத்துக்கு தூக்கிட்டுப் போயி கொண்டாந்து வைப்பாங்க. மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை நாலே முக்கால் மணி சுமாருக்கு தூக்குத் தேர் வீதியுலா கிளம்பிடும். வடக்குத் தெரு, தெற்குத் தெரு, மேலத்தெரு, அக்ரஹாரம், கிளார் தெரு... அப்பிடினு ஒவ்வொரு வீதியிலும் உலாவரும். பூசாரிங்க ரெண்டு பேரு, தேர்ல இருப்பாங்க. ஒவ்வொரு வீட்டுக்காரருக்கும் தேங்காய் உடைச்சு, அம்மனுக்கு தீபாராதனை காட்னதுக்கு அப்புறமே தூக்குத் தேரு அந்தந்த எடத்தை விட்டு நகரும்.

அடுத்து, தூக்குத் தேரு பக்கத்து ஊரான கீழ விசலூருக்குப் போவும். இடையில ரெண்டு கி.மீ. தூரத்துக்கு வயல்காட்டு உள்ளேதான் எறங்கிப் போவும்.

அழகு நாச்சியம்மன் பொறந்த ஊரு கீழ விசலூர். தான் பொறந்த ஊரை, தெருக்களைச் சுத்தி வந்ததுக்கப்புறம், நாகரசம்பேட்டை கோயில் வாசலுக்கு வந்து சேர்வாள், தேருக்குள் அமர்ந்திருக்கும் அழகு நாச்சியம்மன். ஒரு தடவை இந்தத் திருவிழாவை வந்து பார்த்தவங்க, மறு வருஷம் யாரும் கூப்பிடாமலே அவுங்களாகவே கிளம்பி வந்துடுவாங்க!'' எனச் சொல்கிறார் நாகரசம்பேட்டை கிராம ஊராட்சி மன்றத் தலைவர் சரவணன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





வயல்காட்டுக்குள்ள எறங்கி தான் பொறந்த ஊரை, அழகு நாச்சியம்மன் பார்த்துட்டு வருவாங்க...

அமிர்தம் சூர்யா

சூழலும் நகர சக்கரத்தின் விளிம்பிலுள்ள அந்தக் குடிசைக்காட்டில்தான், என்னுடைய வசந்தகாலம் ஒரு காலத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தது. அந்தச் சேரிக்கு கல்யாணபுரம் என்று பெயர். தெருவில் ஒரு புறம்... யாரைப் பற்றியும் கவலைப்படாமல் வாலிபனோடு காதல் சொட்டச் சொட்டப் பேசிக் கொண்டிருப்பாள் பெருஞ்சுதந்திரத்துடன் ஒருத்தி. இன்னொருபுறம் ''எம் புருஷன வளைச்சி போடப் பாக்கிறியாடி சிறுக்கி மவளே''ன்னு துவங்கி தணிக்கைச் செய்யப்பட்ட தமிழ் வார்த்தைகளால் ஏசிக் கொண்டிருப்பாள் இன்னொருத்தி. அமைச்சரிடம் மனுக் கொடுக்க மொய்க்கும் கட்சிக்கார வண்டுகளைப் போல, அந்த ஒற்றை மெட்ரோவாட்டர் பம்பைச் சுற்றிக் கனவின் குறியீடாய் பல்வேறு கலரில் பிளாஸ்டிக் குடங்களோடு பெண்டிர் கும்பல். ''மாதா வயிறெரிய வாழா ஒரு காலம்... காக்கா கூட்டை கோலால கலைக்காதடா''ன்னு ஸ்பீக்கர் இல்லாமலேயே கலை



ஊருக்குக் கேட்கும்படி போதையில் கத்தும் ஒருவன் (மாதா - ஜெயலலிதாவாம்). ''எதையதையோ சலுகையின்னு அறிவிக்கிறீங்க! நாங்க எரியும்போது எவன்... ...போனீங்க'' இன்குலாப் பாடலை கானாவுக்கு எதிராகப் பாடிக்கொண்டிருக்கும் தோழர்கள் ஒருபுறம்.

இரவு பதினொன்றையும் பகலாகவே மாற்றி மாயம் காட்டும் அந்தச் சேரித் தெருக்களில், அடிக்கடி வந்து கலவர விதைகளைக் களை எடுத்தபடி உலா வரும் மாநகரக் காவல் வண்டி. அரவானி அக்கா, கரகாட்டகாரி அம்புஜம், கூத்து குருப் இன்சார்ஜ் சோமசுந்தரம், பொய்க்கால் குதிரை முனுசாமி, எல்லோர் வீடும் உள்ள இந்த அம்மன் கோயில் தெருவில்தான், எப்போதும் என்னை நோட்டம் விடும் சாயாதேவி.

ஆதரவு இன்றி சொந்தங்களால் ஏமாற்றப்பட்டு இங்கு டீக்கடை வைக்க வந்த குடும்பம். எப்போதும் டீ கடையிலிருக்கும் அவளுக்கு விஜயலட்சுமி என்ற பெயர் இருந்தாலும், சாயாதேவின்னு இந்த ஜனங்க வெச்ச பேருதான் நிலைச்சுடுச்சு. (மலையாளத்துல சாயான்னா டீதானே?) எல்லோரையும் போல சாந்த சொரூபியான எங்க ஃப்ரெண்ட்ஸ்ங்க ஒன்பது பேரு கூடுற இடம் அம்மன் கோயிலுக்கு எதிரேதான்! ரெண்டு கோரை பாயப் போட்டுப் பேச ஆரம்பிச்சா, வேப்பமரத்து காக்காங்ககூட விழுந்து விழுந்து சிரிக்கும் இருட்டுன்னு பாக்காம. எல்லாரும் சேர்ந்து வாழும் இடத்துக்கு சேரின்னு பேரு வெச்சது எவ்வளவு பொருத்தம்! இலக்கியத்தில்கூட 'பார்ப்பன சேரி'ன்னு குறிப்பிட்டு இருக்காங்க. இந்த வருஷமும் நாங்க சேரியில் திருவிழாவுக்குத் தயாராயிட்டோம்.

ஒவ்வொருத்தருக்கும் ஒருவேலையை நாங்களே பிரிச்சுப்போம். முதல் கட்டமாக வசூல்தான். கூலிக்காரங்க கூடு வந்து சேரும் நேரம் ஏழு மணிதான். அப்போதான் ஆரம்பிப்போம். வசூலுக்குப் போனா ஒவ்வொரு குடிசையும் ஒரு கதையை அடைகாக்கும் பறவை போல குந்தியிருக்கும்.

''அம்மா! வீட்ல யாரு? திருவிழாவுக்கு வசூலுக்கு வந்திருக்கோம்.'' - இது என் குரல். அதுக்குப் பிறகு, ஒவ்வொரு குடிசையும் ஒவ்வொரு குரலில் பேசும்.

கூத்துரசிகனின் டைரிக் குறிப்புகள்

''பத்து ரூபா கொடுத்தேனே எம் பேர ஏன் பிட் நோட்டீசில போடல? பத்து ரூபானா கேவலமா?''

''போன வருஷ கணக்க இப்பவே காட்டு. எம்.ஜி.ஆரு பிரிஞ்சதும் கணக்காலதான்.''

''இவனுங்க செஞ்ச செலை இவன்களைக் காப்பாத்தல... அதுக்கு விழா எடுக்குறாங்களாம்.''

''கறி குழம்புல ஒரு புடி சாப்புட்டுப் போ கவிஞரே!''


''தனியா இருக்கிற பொம்பளக்கிட்ட என்ன வசூலு? பேசிக்கிட்டுத் தட்டிக்கினு போலான்னு பாக்கிறியா..?''

இப்படி ஒவ்வொரு குரலும் ஓர் அத்தியாயம். சாயாதேவி வீட்டருகே வந்ததும்... எல்லோருக்கும் சாயா கொடுத்தாள். போகும்போது, ''ஏய் சூர்யா, நாளைக்கு கூத்து நடக்கிறப்ப உனக்கு ஒரு சர்ப்ரைஸ்'' என்றாள். எனக்குப் பயத்தில் இப்பவே வயிறு கலக்க ஆரம்பிச்சிடுச்சு. நல்ல புள்ளைங்கிற பேரைக் கெடுத்

துடுவானோ?

அந்த நாளும் வந்தது. கிராமியக் கலை களைக் கை கழுவி விட்டிருந்த நகரத்துக்கு எதிராக, சேரிதான் திருவிழாக்களை சாக் காகக் கொண்டு கலைகளுக்கு உயிரூட்டிக் கொண்டிருந்தது. மாட்டு வண்டியில் சாமி ஊர்வலம் முடிந்து பாஞ்சாலி சபதம் தெருக் கூத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தது முச்சந்தி. முத்துசாமி மாமா. பஃபூனுக்குப் போட முறுக்கு மாலையோடு. தூங்குற வங்களை எழுப்ப மூக்குப் பொடியோடு கோவிந்தன்னு களைகட்டி இருந்தது.

சோமசுந்தர சித்தப்பா, துரியோதன வேஷத்தில பாஞ்சாலியை இழுத்துக்கிட்டு



வான்னு சொல்ற சீனு அப்போ, 'இழுக்கா மலே வருவேன்னு' பக்கத்துல வந்து உட்கார்ந்தபடி சட்டென என் கையைப் பிரிச்சு உள்ளங்கையில் வைத்தான் சாயா தேவி. எனக்குப் புரிஞ்சு போச்சு!

கூட்டம் நம்பளைப் பார்க்கறதுக்குள்ள எழுந்துருவோம்னு படபடப்புல அவளை வெறுப்பா மொறைச்சிட்டு, ஒதுக்குப்புறமா இருக்கும் அண்ணா சங்கத்து வாசல்ல எரியும் நாற்பது வாட்ஸ் பல்புக்குக் கீழே கையைப் பிரிச்சுப் பார்த்தேன். நாலா மடிச்சு இருந்த அந்த லெட்டரில் ஒரு மடிப்பில் அவளின் மார்பக வேர்வை நனைந்திருந் தது. பிரிச்சு படிச்ச பின் என் மனசின் மடிப் பெல்லாம் வேர்த்துக் கொட்டியது.

முதல் கடிதம். முதல் பயம். என்னை விட ரெண்டு வயசு பெரியவ. வேற சாதி. 'உன்னைவிட அதிகமான வயசு பொண் ணோட உறவு வெச்சா ஆனந்தத்தை அடகு வெச்சா மாதிரின்னு' எங்கோ படிச்சது ஞாபகத்துக்கு வந்தது. (இது ஒரு சாக்கு - கோழைத்தனத்துக்கு) என்ன பண்றது? லெட்டரைச் சுக்கு நூறாகக் கிழிச்சு தரை யெல்லாம் எறிஞ்சேன் - யாரும் ஒட்ட வைத்துப் படித்து விடாதபடி. வீட்டுக்குப் போய்ப் படுத்துட்டேன்.

சங்கத்தாண்ட திரும்பவும் ஓடிவந்து பார்த்தேன். யாராவது அந்தக் கடிதத் துண்டுகளை ஒட்ட வெச்சுப் படிச்சிருப் பாங்களோன்னு பயத்தோட... இந்தியா

துரியோதன வேஷம் போட்ட சோமசு

முழுக்க நேருவின் அஸ்தியைத் தூவி யது போல் இருந்தது அந்த காதல் கடிதத் துண்டுகள். விளக்கு அணைத்திருந்தாலும், ரொம்ப நேரம் இருளில் இருந்ததால் வெளுத்துப் போய் பளிச்சென்று கிடந்தன அந்தக் காதல் துண்டுகள். அவளுக்குத் தெரிஞ்சுப் போச்சு, நான் அவளைக் கிழிச் சுப் போட்டது.

திருவிழாவுக்கு அடுத்தநாள் ரெளடி ரங்கனை போலீஸ் ஸ்டேஷனில் வெச்சு அடிச்சுக் கொன்னுட்டான்னு கலவரம், துப்பாக்கிச் சூடு. சேரியே சவ ஊர்வலத்தில் தார் ரோட்ல கிடக்கும் ரோஜா இதழாட்டம் இரைஞ்சுப் போச்சு. அப்போ கிளம்பிப் போனதுதான் ஹைதராபாத்துக்கு. ஆயிடுச்சு பத்து வருஷம். அங்கேயே கல்யாணம் - வேலைன்னு அப்பா செட்டிலாக்கிட்டார். எனக்குக் கல்யாணம் ஆன பிறகும், பொண்டாட்டி இல்லாதப்ப அந்த லெட்டரை ஒண்ணா சேத்துப் படிச்சுப் பாப்பேன் மனசுக்குள்ளேயே... ப்ளஸ் டூ-வில வந்த அந்தப் பழைய பயம் இன்னமும் கர்ண கவசமாக அப்படியே கவ்விக்கிட்டு இருக்கு. ரொம்ப நாளைக்குப் பிறகு சேரி வீட்டை வித்துடலாம்னு இந்தத் திருவிழாவுக்கு வந்தோம்.


இப்போ வீட்டு வசூல் ஏதும் இல்லையாம். முதலாளிங்ககிட்டதான் வசூலாம். மெல்லிசை கச்சேரி உபயம்; தொழிலதிபர் மணி, அலங்கார பொறுப்பு: வள்ளல் வைத்தின்னு... போஸ்டர் தெருவெல்லாம். இளைஞர் கூடி மாட்டு வண்டித் தேர் இழுக்கிறதில்லையாம். டிராக்டரில் ஜெனரேட்டரோடு சாமி ஊர்வலம். முத்துசாமி மாமா வாட்ச்மேன் வேலை பார்க்கிறாராம். இன்று தெருக்கூத்துக்கு

ந்தப்பா பணியாரம் விற்றபடி படையப்பா படத்தைப் பார்க்கத் தயாரானார்.

பதிலாக முச்சந்தியில் பெரிய திரை கட்டியிருந்தார்கள். தலை கீழ் மாற்றம். துரியோதன வேஷம் போட்ட சோமசுந்தர சித்தப்பா அடுப்பு மூட்டித் தெரு வோரம் பணியாரம் சுட்டபடி கவலை தோய்ந்த முகத்தோடு, ரஜினியின் படையப்பா படத்தை மூணாவது முறையாகப் பார்க்கத் தயாராகிக் கொண்டிருந்தார்.

நான் எனது மகள் காவ்யாவைத் தூக்கிக் கொண்டு கூட்டத்தினூடே எட்டுத் திக்கும் கண்களால் துழாவிக் கொண்டிருந்தேன் சாயாதேவியை. ''தேடி வந்த மாப்பிள்ளைங்களையெல்லாம் வேண்டாம்னு சொல்லிட்டா சூர்யா. கல்யாணமே பண்ணிக்கமாட்டேன்னு கட் அண்ட் ரைட்டா அம்மன் மேல சத்யம் பண்ணிச் சொல்லிட்டாளாம். என்னிக்காவது நீ வந்தா உனக்கு ஒரு விஷயத்தைச் சொல்லுவாளாம்'' என்று அண்ணாதுரை இங்கு வந்தபோதே சொல்லியிருந்தான்.

சற்றும் எதிர்பார்க்காத தருணத்தில் என் எதிரே அவள். குற்ற உணர்ச்சியோ அல்லது கை நழுவி போன காதலின் இயலாமையோ ஆழ் மன ஆசையோ எதுவெனத் தெரியாத ஏதோ ஒன்று என்னைக் கண்கலங்க வைத்தது. அதே பயம் உடலெங்கும் மீண்டும் ஒரு க்ஷணம் பதற வைத்தது. ''நல்லாயிருக்கிறீயாடா. நல்லாயிருப்பே. நீ நல்லா இருக்கணும்னு தெனமும் வேண்டுறதுதானேடா என் வேலை. பொண்டாட்டி புள்ளையோட வந்து ஒரு வாய் சாயா குடிச்சிட்டுப் போயேன்... சொல்லி விட்டு சில அடி நகர்ந்தவள், ''கவிஞரே, உனக்குத் தெரியும்தானே 'சாயா'ன்னா நிழல்னு அர்த்தம்! சூரியனின் பொண்டாட்டின்னு மீனிங்! என்று சொல்லி விட்டுக் கூட்டத்தினூடே கலந்து விட்டாள். என் மனசுக்குள் முதல் முறையாய்த் திருக்கூத்து நடக்கத் துவங்கியது. ○



மனசுக்குள் முதல்முறையாய் திருக்கூத்து நடக்கத் துவங்கியது




கந்தூரி வைபவம்!

தூத்துக்குடி, காயல்பட்டணத்தில் தைக்கா தெருவில் 'சாஹிப் அப்பா தைக்கா' என்ற மஹானுக்கு கந்தூரி வைபவம் வருடா வருடம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த வைபவத்துக்கு அனைத்துச் சமுதாய மக்களும் வருகை தருகின்றனர். குடும்பத்தில் நல்ல செய்திகள் வேண்டி, நாட்டம் வைத்து பால், பழம் குடம் குடமாகக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். குறிப்பாக ஆசாரி சமுதாய மக்கள் மஹான் மீது மிகவும் பிரியம் கொண்டு, உமர் ஆசாரி, மெய்தீன் ஆசாரி என்று தங்கள் சந்ததிகளுக்குப் பெயர் சூட்டுகின்றனர். கந்தூரிக்கு ஒரு நாள் முன்பு, அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு, (சிறுவர், சிறுமிகளை ஜோடித்து) யானைகள் ஊரின் முக்கிய வீதிகள் வழியாக வலம் வரும். யானை மீது மஹானின் புனிதமான போர்வை போர்த்தப்பட்டு 'பைத்' என்னும் பாடல்களை ஓதிச் செல்வார்கள். இது இஸ்லாமியர்களின் விசேஷ திருவிழாக்களுள் ஒன்று.

செய்தி: பாலா

படம்: பா.மு.ஜலாலி



இறையருள் தேடி...








கும்பமேளா காட்சிகள்



படங்கள்:
சந்திரசேகர சிங்,
ஹைதராபாத்



கல்கி



2010 ஏப்ரல் 11
விரோதி பங்குனி 28
மலர் : 68
இதழ் : 37


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

பென்னாகரம் வெற்றியில் பெருமை இல்லையே!

அ.தி.மு.க.வும், தே.மு.தி.கவும் பென்னாகரம் தேர்தலில் டெபாஸிட் இழந்தது பெருமைக்குரியதல்லதான். ஆனால், தி.மு.க.வின் வெற்றியும் பெருமைக்குரியதாக இல்லை! தேர்தல் முறையாக நடைபெறச் செய்வதில் ஆளுங்கட்சிக்குக் கூடுதல் பொறுப்பு உண்டு. அப்பொறுப்பில் தி.மு.க. ஆட்சியும் கட்சியும் தவறியிருக்கிறது என்பதற்கு, இடைத்தேர்தல் பிரசாரம் தொடங்கியது முதலே தினமும் அறிகுறிகள் தோன்றியவண்ணம் இருந்தன. தேர்தல் கமிஷன் கூடுதல் கண்காணிப்பு, பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய நேர்ந்தது; அரசு அதிகாரிகளும் காவல் துறை உயர் அதிகாரிகளும் மாற்றப்பட்டனர். தமிழகத் தலைமை தேர்தல் கமிஷனர், பென்னாகரம் தொகுதியில் முகாமிட வேண்டியிருந்தது. பரவலாகப் பணம், வேஷ்டி சேலைகள், மது போன்றவை விநியோகமானதாகவும் புகார்கள், செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. தேர்தல் செலவுக் கணக்குகள் முறையாக இல்லை; மிதமிஞ்சி செலவாகியுள்ளது என நரேஷ் குப்தா அறிவிக்க நேர்ந்தது.

தி.மு.க. மட்டுமே முறைகேடுகளில் ஈடுபட்டது என்று சொல்வதற்கில்லை. பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்பது உண்மையே. ஆனால், ஆட்சியில் இருப்போர் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி முறைகேடுகளை அனுமதிப்பதுடன், பாதுகாப்பு அளித்து மறைக்கவும் முயலும்போது, பிற கட்சியினரும் அதே தவறுகளுக்குத் துணிவது சுலபமாகிறது. தவறு





இழைப்போரைத் தட்டிக் கேட்க தார்மிக பலம் இன்றி அதிகார வர்க்கம் பலவீனப்பட்டுப் போகிறது.

தேர்தல் கமிஷனும் தவறுகளைத் தடுக்க முடிவதில்லை. தேர்தல் நெறிமுறைகள் மீறப் படாமலிருக்கின்றனவா எனக் கண்காணிக்க மட்டுமே அதற்கு அதிகாரம் இருக்கிறது; மீறப்படுகிற இடத்தில் தண்டிக்கவோ தேர்தலை ரத்து செய்யவோ அதற்கு அதிகாரம் இல்லை! நல்மரபுகள் மதிக்கப்படாத சூழலில், தேர்தல் கமிஷனின் பணி மேலும் மேலும் கடினமாகி வருகிறது என்பதுடன் அர்த்தமற்றதாகவும் ஆகிவிடும் அபாயம் எழுந்துள்ளது!

பென்னாகரம் இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் இன்பசேகரன் பெற்றுள்ளது 77,669 வாக்குகள். முக்கிய எதிர்க்கட்சிகளான அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க. பெற்றுள்ள வாக்குகளின் கூட்டுத் தொகையோ 79,478! பதிவான மொத்த வாக்குகள் 1,70,830. ஆகக்கூடி, தி.மு.க. வேட்பாளருக்கு வாக்களித்தவர்களைக் காட்டிலும் வாக்களிக்காதவர்களே பென்னாகரத்தில் அதிகம்! தி.மு.க. பெற்ற வாக்குகளுள் எத்தனை, அக்கட்சியின் கொள்கை அல்லது சாதனைக்காக அளிக்கப்பட்டன, எத்தனை வாக்குகள் பணம், பண்டம் போன்றவற்றால் ஆசைகாட்டிப் பெறப்பட்டன என்பதும் ஆராய்ச்சிக்குரியது. இந்நிலையில், இந்த வெற்றியை, தி.மு.க. ஆட்சியின் செயல்பாடுக்குக் கிடைத்த வெற்றியாகக் கொள்ள முடியுமா?

ஒற்றுமையின்மையால் வெற்றிவாய்ப்பை இழந்த எதிர்க்கட்சியினர், ஆளுங்கட்சியினரைப் பழிப்பதும் அபத்தம். அடுத்து வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலின் போதாவது, வோட்டுகள் பிரியாதபடிக்கு எதிர்க்கட்சியினரின் வியூகம் அர்த்தமுள்ளதாக அமையவேண்டும். அவை ஒன்றுபட்டு நின்றாலே, ஆளுங்கட்சியினர் மீது அழுத்தம் கூடும். அவர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவது கடினமாகிப் போகும். தேர்தல் நடக்கும் விதமும் கணிசமாக மேம்படும்; முடிவுகளும் அர்த்தமுள்ளதாக இருக்கும். ●



வாசகர் போட்டி!

- அடிச்சு ஆடறவங்கதான் ஐ.பி.எல். ஸ்டார்ஸ்...
- வேகமும் வேணும்... விவேகமும் வேணும்...
- கணக்குப் போட்டு ஆடினா கப் நிச்சயம்...

இப்படி ஏகப்பட்ட கணிப்புகள் உங்ககிட்ட இருக்கா?
அப்ப நீங்கதான் கரெக்ட் சாய்ஸ்... சொல்லுங்க...

2010 ஐ.பி.எல் -லின்

ஸ்டார் ஆஃப் தி சீரீஸ் யார்?

உங்கள் தேர்வை, உரிய காரணத்துடன், போஸ்ட் கார்டில் எழுதுங்கள். சிறந்த பத்து காரணங்களுக்கு ஓஷன் பெட வழங்கும் சி.எஸ்.கே. டீ-ஷர்ட் பரிசு!

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

ஸ்டார் ஆஃப் தி சீரீஸ்
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-32.



கடைசித் தேதி: 01.05.2010

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

வளையல் வாங்கலியோ... வளையல்...

'**கோ**யில் திருவிழாக்கள்ல கடைகள் போடுறதுதாங்க எங்க பொழைப்பு. என்னோடது தள்ளுவண்டி வளையல் கடை. எம்புட்டு தூரத்து திருவிழாவா இருந்தாலும் சரி, வண்டியைத் தள்ளிக்கிட்டே நடந்து நடந்து, அந்த ஊரு போய்ச் சேந்துருவேன். திருவிழாவுக்கு திருவிழா வளையல் கடை போடுறதுதாங்க எங்க ஜோலி.

எந்த ஊர்ல திருவிழா நடக்க இருந்தாலும், எங்களுக்கு மொத தகவல் வந்துடும். ஊராட்சியில எடத்தை ஏலத்துக்கு எடுத்தவங்க, எங்களுக்குத் தபால் போட்டுடுவாங்க. இல்லாட்டி... இப்பத்தான் இருக்கவே இருக்கு, செல்லு! அதுல தாக்கல் சொல்லிடுவாங்க. ரெண்டு நாளு மூணு நாளு பெரிய திருவிழான்னா, முன்னாடியே அந்த ஊருக்குப் போயி ரெண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய்க்கு



குறிப்பிட்ட எடத்தை (சாலையோரம்தான்) வாடகைக்கு பேசி முடித்துவிட்டு வந்து விடுவோம். அந்த எடத்துல, எங்களைத் தவிர வேறு யாரும் கடை போட முடியாது.

பெரிய திருவிழாவுக்கு அம்புட்டு பணம் வாடகை கட்டி, கடை போடுறமே... லாபம் பெருசா எதுவும் கிடைக்கும்னு நெனைக்கறீங்களா? அதான் நடக்காது. பெரிய திருவிழா எல்லாம் 'வாச்சான் போச்சான்' வியாபாரமுங்க! லாபம் தரும். நஷ்டமும் தரும். அந்த நஷ்டத்தை நாங்க எதுல தெரியுமா ஈடுகட்டுவோம்? சொன்னா நம்ப மாட்டீங்க.

சின்ன ஊர் திருவிழான்னா மூணு மணி நேரம் இல்லாட்டி நாலு மணி நேரத்துக்குக் கடை போடுவோம். அப்ப பாருங்க, வியாபாரம் பிச்சுக்கிட்டுப் போகும். பெரிய திருவிழாக் கடையில ஏற்பட்ட நஷ்டத்தை, சின்ன திருவிழாக் கடை வியாபாரம் சமன் செஞ்சுடும். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள்ல, எல்லா ஊரு திருவிழாவுலயும் வளையல் கடை போட்டு வர்றேன் நானு!'' என்கிறார் மொபைல் வண்டி வளையல் வியாபாரியான அம்பல் கிராமத்து கண்ணன்.



- இந்திரா மணாளன்

யதார்த்தம் பூசிய திரை நாவலான 'வெயில்' படத்தை அடுத்து, நம் கண் முன் நிகழ்ந்துகொண்டேயிருக்கும் காட்சிகளின் பின்னால் உள்ள வலியை, வாழ்வை 'அங்காடித் தெரு'வில் அங்குலம் அங்குலமாகச் செதுக்கி தமிழ் சினிமா ரசனைக்குப் புதிய மெருகு கூட்டியுள்ள இயக்குனர் வசந்தபாலனை சந்தித்து உரையாடியதிலிருந்து...

'வெயில்' ரொம்ப யதார்த்தமாக இருந்தது. 'அங்காடித் தெரு'வோ கனவு+டூயட்டுடன் நெருக்கமான காட்சியினு காம்பரமைஸ் ஆகியிருக்கே, ஏன் ஸார்?

''நாம் கடையில் பார்க்கும் சேல்ஸ்மேன், உமன் எல்லாம் அந்தக் கடையில் விற்கும் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மதிப்புள்ள துணிகளை அணிய



✱ 'அங்காடித் தெரு'வில்....

ஆசைப்படுபவர்கள்தான். ஆனால் அது கனவில் மட்டுமே சாத்தியமாகும். நான் கூட எங்கள் ஊர் அண்ணாச்சி கடையில் சிறு வயதில் வேலை பார்த்திருக்கிறேன். அப்போது அந்தக் கடையில் விற்கும் ஃபைவ் ஸ்டார் சாக்லெட்டை ஏக்கத்துடன் மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது. வாங்கிச் சாப்பிட முடியாது. அது போலத்தான் இதுவும்.

டூயட் காட்சியில் கூட அழகு இருக்கும். ஆபாசம் இருக்காது.

படத்தில் காட்டப்படும் 'மெகா ஸ்டோர்' நிஜத்தில் ஒரு ஸ்டோரை நினைவு படுத்துவதைப் போல் உள்ளதே?

'அங்காடித் தெரு'வில் வரும் 'ஸ்டோர்' செட்டிங் ஸ்டோர்தான். இந்த ஸ்டோரையும், ரங்கநாதன் தெருவையும் தத்ரூபமாகத் தந்திருப்பவர் ஆர்ட் டைரக்டர் முத்துராஜ்.

1866-ல் மே மாதம் சிகாகோ நகரில் ரத்தம் சிந்தி பெற்ற எட்டு மணி நேர வேலை, பணிப் பாதுகாப்பு போன்ற தொழிலாளர் உரிமைகள் இன்று கொஞ்சம் கொஞ்சமாய்க் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. ரங்க

'சாதி'க்கு

நாதன் தெருவில் உள்ள கடைகள் மட்டுமல்ல. உலகம் முழுவதுமுள்ள பெரிய ஸ்டோர்களிலும், உடலுழைப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நிலை இதுதான். ஒரு உதாரணத்துக்காக நமக்குத் தெரிந்த ரங்கநாதன் தெருவை நான் ஓரளவுக்குக் குறியீடாகக் காட்டியிருக்கிறேன்.

படத்தில் வரும் முஸ்லிம் பெரியவர், மாற்றுத் திறனுடையவரை மணந்து கொள்ளும்

பாலியல் தொழில் செய்யும் பெண் போன்ற பாத்திரங்களெல்லாம் அந்தத் தெருவில் நான் சந்தித்த, கேள்விப்பட்ட மனித பிம்பங்களின் எதிரொலிப்புதான்.

நீங்கள் பொதுவுடமை வாதியா?

மாணவப் பருவத்தில் பொதுவுடமை அபிமானியாக இருந்திருக்கிறேன். இன்றைக்கும் மார்க்சியத்தில் ஈடுபாடு உண்டு.

அண்ணாச்சி கேரக்டரும், திருநெல்வேலித் தமிழும், குறிப்பிட்ட சாதியின் பிம்பங்களாகத் தெரிகிறதே?

'அண்ணாச்சி' என்பது தென்மாவட்டங்களில் முதலாளியைக் குறிக்கும் சொல். 'அங்காடித் தெரு' முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையேயான பிரச்னைகளைப் பற்றிப் பேசும் படம். எனது முதல் படமே கேன்ஸ் பட விழாவிற்குச் சென்றது. உலக சினிமா வரிசையில் தமிழ்ப்படங்களைக் கொண்டு நிறுத்த வேண்டும் என்ற எனது தாகத்திற்கு, சாதி என்ற குறுகிய வட்டம்.

இடமில்லை!

- வசந்தபாலன்



'அங்காடித் தெரு' வசனகர்த்தா எழுத்தாளர் ஜெயமோகன் பற்றி...?

இரண்டே நாட்களில் ஒரு படத்திற்கான வசனத்தை எழுதித் தந்துவிடும் ராட்சஷ எழுத்தாளர். ரூம் போட்டு எழுதினாத்தான் எழுத முடியும் என்று அடம் பிடிக்காமல், எந்தச் சூழலிலும் உணர்வுபூர்வமான எழுத்துக்களை வடிக்கும் வித்தகன். என் மிகச் சிறந்த நண்பர். தத்துவ ரீதியோடு யதார்த்தத்தைச் சேர்த்து எழுதுபவர். ஜெயமோகன் எனும் எழுத்து விருந்தில் எனக்கு தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

> “என் மனைவியைத் தவிர வேறு யாரும் அழகி இல்லை!”

'அவள் அப்படி ஒன்றும் அழகில்லை'யென்றால் உங்களுக்குப் பிடித்த அழகி யார்தான்?

என் மனைவி தான். என் மனைவியைத் தவிர வேறு யாரும் எனக்கு அழகியாகத் தெரியவில்லை.

அழகு என்பதற்கு தாய்மை, வீரம், தியாகம், சக்தியின் வடிவம் எனப் பல அடையாளங்கள் இந்தியாவில் உள்ளன. மேற்கத்திய நாடுகளைப் போல் புற அழகு என்பதே இங்கு இல்லை. இதைப் புரிந்துகொண்டுதான் சராசரிப் பெண்ணை 'அங்காடித் தெரு'வில் நாயகியாகக் காட்டி யிருக்கிறேன். இந்த யதார்த்தத்தை எப்போதும் மக்கள் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

- ராகவ்குமார்



* மதுரை மீனாக்ஷி

அலங்காரத்தின்

பெருந் திருவிழா எனப்படும் பிரம்மோத்ஸவத்தின்போது, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான வாகனத்தில் பெருமான் பவனி வருவது போல, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான சிறப்பு அலங்காரமும் செய்யப்படுவதுண்டு. அந்தந்த ஊர்களின் தலபுராணத்துக் கதைகளை நினைவூட்டும் வகையிலும், சில பொதுவான புராணச் செய்திகளை நினைவூட்டும் வகையிலும் பல்வேறு கோலங்களில் பெருமான் காட்சி தருகிறார்.

திருப்பதியில் நவராத்திரி பிரம்மோத்ஸவத்தில் விதவிதமான ஆபரணங்கள் பூண்டு வீதிக்கு எழுந்தருளும் வேங்கடவனின் பேரழகு சொல்லில் அடங்காது. வெண்ணைத்தாழி, கற்பக விருட்சம், காளிங்க நர்த்தனம் என்று கற்பனையும் கலையழகும் நேர்த்தியும் கலந்த அலங்காரத்தில் ஒளிர்கிறார் பெருமாள். அதேபோல மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திலும் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில்- பிட்டுக்கு மண் சுமந்தது, நாரைக்கு முக்தி கொடுத்தது, தருமிக்குப் பொற்கிழி அளித்தது, மீனாட்சி திக் விஜயம், பட்டாபிஷேகம், திருக்கல்யாணம் என்று திருவிளையாடற்புராண நிகழ்ச்சிகள் பலவும் நம் கண்முன் கொண்டு நிறுத்தினாற்போல அலங்காரங்கள் அமைகின்றன. இதற்கென்றே பிரத்யேகமாகத் தங்க மண்கூடை, மண் பெட்டி, தங்க விறகுக் கட்டு, தங்கப் பொற்கிழி என்று ஒரு நாடகத்துக்குப் பொருள் சேர்ப்பதுபோலச் செய்து வைத்திருக்கிறார்கள்! கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக இந்த அலங்காரங்கள் அமைகின்றன.

அந்த நாள் நிகழ்ச்சிகளை நம் கண்முன்னே கொண்டு நிறுத்தும் அலங்காரம் ஒரு தனிக்கலை!

கண்ணைப் பறிக்கும் ஆபரணங்கள், முத்து வடங்கள், காசுமாலைகள், சரவணிகள், மகரக்கண்டிகைகள், பவளக்கொடிகள், பதக்கங்கள், மணி இழைத்த மகுடங்கள், கல் இழைத்த கவசங்கள் என்று உயர்ந்ததாயும் அபூர்வமானதாயும் உள்ளவற்றை எல்லாம் அரசர்களும் பிரபுக்களும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்தார்கள். தனி மனிதன் உடைமை என்றால், அவன் மட்டுமே அனுபவிக்க முடியும். ஆண்டவனின் சொத்து என்றால் அனைவரும் கண்டு மகிழலாம்! மதுரை மீனாட்சி குதிரை வாகனத்தில் பவனி

வரும்போது, அவளது பாதங்களை அலங்கரிக்கக் கல் இழைத்த அங்க வடிகளை (stirrup) அர்ப்பணித்தானாம் பீட்டர் ரோஸ் என்கிற ஆங்கிலேய அதிகாரி! திப்பு சுல்தான் கொடுத்த சரப்பளியையும் சிதம்பரத்தில் போற்றிப் பாதுகாக்கிறார்கள்.

பூ அலங்காரம் என்றாலும் தென்னாடு தான். திருவாரூர் தியாகராஜாவுக்கு வாசனை இல்லாத மலர்களைச் சாத்துவதே இல்லை. தமிழகத்தில் மாலை கட்டுவது என்பது ஒரு தனி அழகுக் கலை. சின்னஞ்சிறு மல்லிகைப் பூக்களையும் பத்தி வைத்துக்கட்டிப் பருமனான மாலையாக்கி மிக நேர்த்தியாக அலங்கரிக்கிறார்கள். கோயில் திருவிழாக்கள் அழகுக் கலைகளை அதிகமாக வளர்க்க உதவின என்றால் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்!

அர்த்தங்கள்!



✱ திருவிளையாடல் காட்சிக்குரியவை...

சில வித்தியாசமான அலங்காரங்களைப் பார்ப்போமா?

திருக்கண்ணபுரம் என்கிற வைஷ்ணவ திவ்யதேசம். திருமங்கை ஆழ்வார் மிகுதியாக ஈடுபாடு கொண்ட திவ்யதேசம். இங்கு பெருமாள், சௌரிராஜனாக சேவை சாதிக்கிறார். சிவபெருமானுக்கே உரிய சடா முடியை வெட்டி வேர் கொண்டு மிகத் தத்ரூபமாக அமைத்திருக்கிறார்கள். இந்தக் கோலத்தில் பெருமான் எழுந்தருளுகையில் அதற்கேற்ப வாத்தியங்களும் மாறுகின்றன. டக்கா என்கிற பெரிய உடுக்கை, திருச்சின்னம், சுத்த மத்தளம் போன்ற ருத்ர தாண்டவ கோலத்துக்கு ஏற்றவாறு கொட்டும் முழக்குமாகப் பவனி வருகிறார் சௌரி ராஜன்.

வைகுண்ட ஏகாதசியை ஒட்டி நடைபெறும் உத்ஸவங்களின்போது, வைணவத் தலங்கள் பலவற்றில் பெருமாள் 'நாச்சியார் கோலம்' புனைந்து ஒருநாள் சேவை சாதிக்கிறார். சில தலங்களில் மோகினி அலங்காரமும் விசேஷம். மகாவிஷ்ணு மோகினியாக வடிவெடுத்து, அமுத கலசத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடிய அசுரர்களை மயக்கி, அவர்களிடமிருந்து அமுதத்தைக் கவர்ந்து, தேவர்களுக்குப் பகிர்ந்து அளித்த புராணச் செய்தியை இந்த அலங்காரம் நினைவூட்டுகிறது.



✱ பதக்கங்கள்

திருவானைக்காவில் பஞ்ச பிராகார உத்ஸவம் என்று ஓர் உத்ஸவம். அப்போது சிவபெருமான் அம்பிகை வேடமணிந்தும், அம்பிகை சிவபெருமான் வேடமணிந்தும் ஒருநாள் பவனி வருகிறார்கள். இதன் பின்னணிக் கதை மிகவும் சுவாரஸ்யமானது! பிரம்மதேவனுக்குப் பாபவிமோசனம் அருளப் பெருமானும் பெருமாட்டியும் இப்படிக் கோலம் மாறிக் காட்சி அளிக்கிறார்கள்! மேலும் விவரங்களுக்கு ஒருநடை திருவானைக்கோவில் போய் வாருங்களேன்!

–த.கி.நீலகண்டன்

கிராம தேவதை உத்ஸவம்: திருவிழா தொடங்குவதற்கு முன்பாக, கிராமத்துக் காவல் தெய்வத்துக்கு நடைபெறும் விழா. சாதி பேதமின்றி மக்கள் கலந்துகொள்ள இதுவே அச்சாரம்!

அனுக்ஞை: விழாவை நடத்துவதற்கு அனுமதி கோருதல். முதலில் விநாயகரிடமும், பின்னர் பெருமானிடமும், அதன் பின்னர் ஊர்ப் பெரியவர்களிடமும் அனுமதி கேட்டுப் பெறப்படும் நிகழ்ச்சி.

வாஸ்து சாந்தி: விழா தடையின்றி நடைபெற வேண்டி வாஸ்து புருஷனுக்குப் பூஜை.

ம்ருத் சங்கிரகணம்: பாலிகை விடுவதற்கு மண் எடுத்தல், சிவாலயங்களில் சண்டிகேசுவரர் எழுந்தருளி, புற்றுமண், 'பானை அடி' மண், பசு கொட்டகை மண், தல விருட்சத்து அடியில் உள்ள மண் ஆகியவற்றைச் சேகரித்து வருவது இந்த நிகழ்ச்சி.


✽ தீர்த்தவாரி

அங்குரார்ப்பணம்: சேகரித்த மண்ணைப் பரப்பி அதில் தானியங்களை விதைத்து முளைப்பாலிகை வளர்க்கும் நிகழ்ச்சி.

ரக்ஷாபந்தனம்: காப்பு கட்டும் நிகழ்ச்சி: கோயிலுக்கு வெளியே உத்ஸவமூர்த்திகள், செல்லவிருப்பதால், தீய சக்திகளிடம் இருந்து காப்பதற்காகவும் தீட்டுப்படாமல் இருக்கவும் செய்யும் சடங்கு.

கொடியேற்றம்: கொடி மரத்தை தர்ப்பைப் புல்லால் கட்டி, அந்தக் கோயிலின் பிரதான தெய்வத்துக்குரிய கொடியை வரைந்த சீலையைப் பூஜித்துக் கயிற்றில் கட்டி, கொடிக் கம்பத்தின் உச்சியில் ஏற்றும் நிகழ்ச்சி. விழாத் தொடக்கத்தின் அடையாளம். கோயிலில் கொடி ஏறி விட்டால், ஊர் மக்கள் எல்லை தாண்டிப் போகக் கூடாது என்பது பழைமையான மரபு!

பேரீதாடனம்: திருவிழா நிகழ்ச்சிகளை முரசு முழக்கி அறிவிப்பது வழக்கம். அந்த முரசுக்கு செய்யும் பூஜை!

அஸ்திர தேவர் பூஜை: சிவாலயங்களில் அஸ்திர தேவர் என்று, நீண்ட திரிசூலத்தில் ரிஷப வாகனத்துடன் கூடிய அஸ்திர தேவர் உண்டு. அதற்குப் பூஜைகள் செய்து யாகம் தொடங்குவது வழக்கம்.

திருவிழா அகராதி

✽ கிராமதேவதை உற்சவர்


திக்பந்தனம்: அஸ்திர தேவரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, நான்கு மாட வீதிகளிலும் உள்ள

அஷ்டதிக் பாலர்களுக்கும் அன்னபலி இட்டு, விழா முடியும்வரை எட்டுத் திக்கையும் காத்தருள வேண்டி, 'ஆங்காங்கே' அவர்களுக்குரிய திக்குகளில் திக்தேவதைகளை நிறுத்துதல்.

விழாவின் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அஸ்திர தேவர் பறப்பட்டு எல்லா வீதிகளையும் சரி பார்ப்பார். (Security Drill போன்ற நிகழ்ச்சி இது!)





* யாகம்



* கொடியேற்றம்

யாகம்: விழா நடைபெறும் நாட்களில் யாகத் தீ அணையாமல் காத்து ஹோமம் செய்யும் தொடர் நிகழ்ச்சி. சுவாமி வீதி புறப்பாட்டுக்கு முன் யாகசாலைக்கு வந்து தீபாராதனையை ஏற்று, அதன் பின்னரே வெளியில் புறப்படுவார்!

அங்குர விசர்ஜனம்: விழா முடிந்ததும் பாலிகைகளைக் கரைக்கும் நிகழ்ச்சி.

தீர்த்தவாரி: சுவாமி பரிவாரங்களுடன் தீர்த்தக்கரையை அடைந்து, அஸ்திர தேவரை நீரில் முக்கி எடுப்பார்கள்.

கொடியிறக்கம்: விழா நிறைவேறியதன் அடையாளமாகக் கொடி இறக்கப்படும் நிகழ்ச்சி.

ரக்ஷா விசர்ஜனம்: காப்பை அவிழ்த்து, திக் தேவதைகளுக்கு நன்றி கூறி விடையளித்து, அவரவர் இருக்கைக்குத் திரும்ப அனுப்பும் விழா. (Beating Retreat!)

- த.கி. நீலகண்டன்

சாம்பார் கிணறு; தயிர் குளம்!

தில்லை மூவாயிரவர் முனிவர்பெரு வேதிகளும்
அல்லும் பகலும் அளிக்கும் அன்னதானச் சிறப்பும்
சொல்லரிய மடங்களும் சோலைகளும் வாவிகளும்
நல்ல திருக்கூட்டங்களும் நாலு பெரு வீதிகளும்....

- முத்துத்தாண்டவர்

கோயில் திருவிழாக்களில், அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் மக்கள், கூட்டம் கூட்டமாகப் பங்கேற்கிறார்கள். பத்து நாட்கள் நடைபெறும் உத்ஸவங்களின்போது, உண்ண உணவும் தங்குவதற்கு வசதியான இடமும் ஏற்பாடு செய்து கொள்ளும் அளவுக்கு வசதி இல்லாதவர்களும்கூட, கவலைப்படாமல் வந்து குவிகிறார்கள்! ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்கள் வைத்து நீர்மோர், பானகம், உணவுப் பொட்டலங்கள் என்று விநியோகம் தொடர்ந்து கொண்டிருக்கும். மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் பங்குனி உத்ஸவத்தின்போது, காலத்தின் மாற்றத்திற்கு ஏற்றவாறு, இப்போது பாதாம் பால், ரோஸ் மில்க் என்று ஏகதடபுடல். ஆங்காங்கே அன்னதானம் வேறு! இதற்கெல்லாம் முன்னோடியாய் இருந்த ஒருவரை இந்த வேளையில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டாமா?

கும்பகோணத்தை அடுத்துள்ள தேப்பெருமாநல்லூரில் (சென்ற சிவராத்திரியின் போது பாம்பு ஒன்று வந்து பூஜை செய்ததாக அமர்க்களப்பட்டதே, அதே தேப்பெருமாநல்லூர்தான்!) 19-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியவர் இராமசுவாமி. இவர் நடத்திய அன்னதானங்களினாலேயே இவருக்கு 'அன்னதான சிவன்' என்னும் புகழ்ப் பெயர் உண்டாயிற்று!

காஞ்சி மடம் கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டிருந்த நாட்களில், மகாசுவாமிகளிடம் அன்புடனும், நெருக்கத்துடனும், ஏன்? உரிமையுடனும் பழகிய பெருமகனார், அன்னதான சிவன்! தமது வாழ்க்கையை ஸ்ரீமடத்துடன் பிணைத்துக் கொண்டவர்.

தஞ்சாவூரைச் சேர்ந்த மிராசுதார் சுயத்தூர் சீனிவாச ஐயர்தான் அன்னதான சிவனுக்கு இன்ஸ்பிரேஷன். தஞ்சை மாவட்டத்தில் உள்ள பிரபலமான கோயில்களில் நடைபெறும்



உத்ஸவங்களில் எல்லாம், சீனிவாசய்யர் செய்த அன்னதான வைபவங்களில் அவருக்கு உதவியாக, தம் சிறு வயதில் ஓடியாடி வேலை செய்தார் சிவன். பின்னாளில் தம் சொத்து, சுகம் அனைத்தையும் இதற்காகவே அர்ப்பணித்து விட்டார். பிரபலமான திருவிழாக்களுக்காகக் கூடும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அறுசுவை உணவு படைப்பதைத் தம் வாழ்க்கையின் 'மிஷன்' என்று ஆக்கிக் கொண்டார் சிவன்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி உணவருந்தும் இடம் என்றாலும், சமைக்கும் இடம், சாப்பிடும் இடம் எல்லாம் படுசுத்தமாக இருக்குமாம்! ஏழைகள் தானே அன்னதானத்திற்கு

திருச்செங்காட்டங்குடியின் அமுதுபடித் திருவிழா, அம்பர் மாகாளத்தின் சோமயாக விழா, காரைக்கால் மாம்பழத் திருவிழா, காவிரிப்பட்டணத்து ஆடி அமாவாசை, மாயூரம் துலா (ஐப்பசி) மாத உத்ஸவம், திருநாகேஸ்வரம் கார்த்திகை சோமவார விழா, நாச்சியார் கோயில் தெப்பம், திருவிடை மருதூர் தைப்பூசம், கும்பகோணத்து மாசி மகம், எட்டுக்குடி பங்குனி உத்திரம் என்று பெருந்திரளான மக்கள் கூடும் உத்ஸவங்களில் எல்லாம் அன்னதான சிவன் தன் தொண்டர் படையோடு களமிறங்கி விடுவார்!



அன்னதானச் சிறப்பு

த.கி.நீலகண்டன்

மொய்க்கிறார்கள் என்கிற அலட்சிய பாவத்தில் சுத்தமும், சுகாதாரமும் இரண்டாம்பட்சமாகி விடும் இந்த நாட்களில், பலதரப்பட்ட மக்களும் வந்து உணவருந்திச் சென்ற அந்த நாளில் சிரத்தையோடு செயல்பட்டார் சிவன்!

இலை போட்டுப் பரிமாறும் இடத்தைச் சுத்தம் செய்வதற்காகவே துடைப்பம் வண்டி வண்டியாக வந்து இறங்கும் என்றால், உணவுப் பண்டங்களுக்குக் கேட்கவா வேண்டும்? ஆயிரக்கணக்கில் அரிசி, பருப்பு மூட்டைகள், மளிகைச் சாமான்கள், வண்டி



வண்டியாகக் காய்கறிகள், இலைக்கட்டுகள்; அடுப்பு எரிக்க விறகு நூறு வண்டிகளில், ஊறுகாய்க்கான நெல்லிக்காய் மட்டும் இரண்டு மூன்று வண்டிகளில்! மலைப்பாக இருக்கிறதல்லவா?

அத்தனை பேருக்கு வேண்டிய தயிருக்கு என்ன செய்தார்களாம் தெரியுமா? அன்னதானம் நடைபெறும் ஊரில் சில வாரங்களுக்கு முன்னதாகவே தயிரை சேகரிக்கத் தொடங்கி, கிடைக்கும் தயிரை எல்லாம் மரப் பீப்பாய்களில் நிரப்பி மூடி, மெழுகினால் அடைத்து சீல் வைத்து, அந்த ஊர்க் குளத்தில் உருட்டி விடுவார்களாம்! அன்னதானம் நடைபெறும் நாளில் பீப்பாய்களைத் திறந்தால் நேற்றுதான் தோய்த்த தயிர் போல், புளிப்பில்லாமல் சுவையாக இருக்குமாம்! ஆமாம்! திருக்குளங்கள்தான் அந்த நாளின் 'கோல்ட் ஸ்டோரேஜ்.'

ஒரு ஊரில் அன்னதானம் என்றால், அதற்கு முன் நாள் இரவு வரை அதற்கான சுவடே தெரியாதாம். இரவோடு இரவாகப் பண்டங்கள் வந்து இறங்கி, பங்கீடு ஆகி, அதிகாலையில் அடுப்பு மூட்டி உலை யேற்றினால், பசி வேளைக்கு அறுசுவை உணவு தயார். ஆளுயர அண்டாக்களில் சாம்பார், ரசம், பாயசம்! கொதிக்கும் போது உண்டாகும் வாசனையை வைத்தே உப்பு, புளி, காரம், வியஞ்சனங்கள் போதுமா போதாதா என்று தீர்மானம் செய்வார்களாம். முறத்தில் உப்பை வைத்துக் கொண்டு சிப்பந்தி ஒருவன் நிற்க, ருசிக்கேற்ற வாசனை வரும் வரை உப்பைப் போடுவது வழக்கமாம். முறம் கணக்கில் கொத்துமல்லி

இலைபோட்டு விட்டு மக்களைக் காக்க வைக்காமல், சுடச்சுட அரிசிச் சாதம் வடித்து போடத்தனி டெக்னிக் வைத்திருந்தாராம் அன்னதான சிவன்.

விதையை அரைத்து ரசத்தில் சேர்ப்பார்களாம்!

மூங்கில் பரண் கட்டி, ஏணி வைத்து ஏறி, மரச்சட்டத்தில் ராட்டினம் கட்டி, சிறு வாளிகளில் கிணற்றில் இருந்து தண்ணீர் இறைப்பது போலக் கொதிக்கும் குழம்பு, ரசத்தை மொண்டு பரிமாறுவார்களாம். ஆறிப் போன சாதமாக இல்லாமல், அதே சமயத்தில் இலை போட்டு விட்டு மக்களைக் காக்க வைக்காமல், சுடச்சுட அரிசிச் சாதம் வடித்துப் போடத் தனி டெக்னிக் வைத்திருந்தாராம் அன்னதான சிவன்!

அன்னதானம் முடிந்ததும், "இந்த இடத்திலா அத்தனையும் நடந்தது!" என்று மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்படும் வகையில் இடத்தைச் சுத்தம் செய்யும் அளவுக்கு பெர்ஃபெக்ட் எக்ஸிகியூஷன்! இத்தனையிலும் அன்னதான சிவனது ஆகாரம் என்னவோ நாலு கவளம் பழையதுதான்!

காதல் மயக்கம்!



நமது நாட்டின் விவாக முறையைக் குறைசொல்வோர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் நமது விவாக முறை ''கட்டாய மணம்'' என்றும், ''காதல் மணம்' அல்லவென்றும் கூறுகின்றனர்.

நமது விவாக முறையின் பேரில் எனக்கும் அநேக குறைகள் இருக்கின்றன. அவற்றை என்றாவது ஒரு நாள் உங்களிடம் முறையிட்டுக் கொள்கிறேன். ஆனால் இந்தக் ''காதல் மண''மும் அதற்குப் பாட்டனாகவே இருப்பதாய்த் தோன்றுகிறது.

கமலா தேவி - ஹரீந்திரநாத் மணத்தைவிடச் சிறந்த ''காதல் மணம்'' வேறு இருக்க முடியாது. கமலாதேவி குவீன் மேரிஸ் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போது, முதல் கணவனை இழந்து கைம்பெண்ணானாள். பிறகு ஹரீந்திரநாத்தைச் சந்தித்தாள். இருவரும் காதல் கொண்டனர்; கலியாணம் நடந்தது.

இரண்டு பேரும் வயது வந்தவர்கள்; உலகமறிந்தவர்கள்; அறிவியல் மிகுந்தவர்கள். ஒத்த வயது; ஒத்த மேதை; ஒத்த சௌந்தரியம். காதல் தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கு எல்லா வகையிலும் பாத்திரமானவர்கள். ஆயினும் அவர்களுடைய இல்வாழ்க்கை இந்தக் கதியை அடைந்தது!

மற்றொரு பக்கத்தில், பெற்றோர் பார்த்து மணம் புரிவித்த தம்பதிகளின் இல்வாழ்க்கையைப் பாருங்கள். நான் அறிந்த அத்தகைய குடும்பங்களில் 100க்கு 70 தம்பதிகள் கூடிய வரையில் சந்தோஷமான வாழ்க்கையே நடத்துகிறார்கள்.

கலியாணமாகி 25 வருஷங்களுக்கு மேலாகியும், நேற்றுத்தான் முதன் முதலாகச் சந்தித்துக் ''கண்டதும் காதல்'' கொண்டவர்களைப் போல் அன்னியோன்யமாய் வாழும் தம்பதிகளை நான் அறிவேன். ஆயினும் இவர்களுடைய கலியாணம் குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களால் முடித்து வைக்கப்பட்டதுதான்.

ஆகவே, உங்களை மறுபடியும் கேட்கிறேன். இந்தக் காதலின் இரகசியம் என்ன? எது உண்மைக்காதல்? எது பொய்க் காதல்? அது எப்படி வருகிறது? எப்படி போகிறது? அதனால் மனித வாழ்க்கையில் ஏற்படுவது இன்பமா? துன்பமா?

''காதல் மயக்கம்'' என்று சொல்லுகிறார்கள். உண்மையில், இந்தக் காதல் விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புகுந்தாலே மயக்கந்தான் உண்டாகிறது.

(கற்பும் காதலும் கட்டுரையிலிருந்து...)

- ஆனந்த விகடன், 10.12.33




பாடைக்கட்டித் திருவிழா!

அவர் உயிரோடுதான் இருக்கிறார். அவரை குடமுருட்டி ஆற்றில் குளிக்க வைக்கிறார்கள். மஞ்சள் ஆடை அணிவிக்கப்படுகிறது. அதன்பிறகு கட்டிய பாடையில், அவரைப் படுக்க வைக்கிறார்கள். கால் கட்டை விரல்கள் ஒன்றிணைத்துக் கட்டப்படுகின்றன. கைகள் கட்டப்படுகின்றன. கண்களில் சந்தனக் காப்பு இடப்படுகிறது. இவை அனைத்துக்கும் உச்சமாக, நெற்றியில் ஒரு ரூபாய் நாணயமும் ஒட்டப்படுகிறது! பின்பு கொட்டு மேளம் கொட்ட, பாடையில் படுத்திருப்பவரின் 'இறுதி ஊர்வலம்'. முறைப்படி எவர் வந்து தோள் கொடுத்துச் சுமக்க வேண்டுமோ, அந்தச் சிலர், உற்றார் உறவினர் சூழ, பாடையைத் தூக்கிச் செல்கின்றனர். முறைப்படி கொள்ளி வைக்க வேண்டியவர், கொள்ளிச் சட்டி ஏந்திச் செல்கின்றார். அட! இதெல்லாம் ஒரு திருவிழாவில் நடக்கும் நிகழ்ச்சிதான்!

இந்த விநோத நேர்த்திக்கடன், திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே வரதராஜம் பேட்டை கிராமம், மகாமாரியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. (வேறு சில ஊர்களிலும் இவ்வழக்கம் உண்டு.) இங்கு வீற்றிருக்கும் மகா மாரியம்மனுக்கு சீதளாதேவி என்கிற பாடை கட்டி மாரியம்மன் என்று பெயர்.

பங்குனி மாதத்தில் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை, பாடைக் காவடித் திருவிழா. ஒவ்வொரு வருஷமமு' அந்தத் திருவிழா அன்று, இங்கு திரண்டு வருகிற சுமார் ஆயிரம் பாடைக் காவடிகள் மாதிரி தமிழ்நாட்டிலேயே வேறு எங்கேயும் காண முடியாது! என்கிறார் கோயில் அலுவலர் ஆர்.சீனிவாசக சித்தைய்யா.

"ஆறு மாசக் கைக்குழந்தைலேர்ந்து அறுபது எழுபது வயசு ஆனவங்க வரைக்கும், அவங்களோட பாடைக் காவடியில படுத்து வந்து, தங்களோட நேர்த்திக்கடனைப் பூர்த்தி செய்யறாங்க. ரொம்ப உடம்புக்கு முடியாம போகும்போது, இந்த மாரியம்மனுக்கு வேண்டிக்குவாங்க. அவுங்க உடம்பு பூரண குணமானதும், அந்த வருஷம் பதினைந்து நாள் விரதமிருந்து பாடைக் காவடித் திருவிழாவுக்கு வந்து, வேண்டுதலை நிறைவேத்திக்குவாங்க. கோயில் வாசல்ல அந்தப் பாடையை இறக்கி வைப்பாங்க. பூசாரி வந்து தீர்த்தம் தெளிப்பாரு. பாடையில படுத்திருக்கறவரு அப்பத்தான் உணர்வு திரும்பி கண் முழிப்பாரு'' என்கிறார் தலைமைப் பூசாரி செல்வம்.


* செல்வம்

- திருநாவு



ஈசல்

இருபத்து நான்கு மொழிகளின் வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரு பாடலை எழுதி, இருபத்து நான்கு பாடகர்களைப் பாட வைத்திருக்கின்றனர் 'ஈசல்' படத்தின் ஒரு பாடலுக்காக. ''ஏன் ஸார் ஒரு பாட்டை ஒருத்தரே பாடியிருக்கலாமே?'' என்றால், **''ச்சும்மா கின்னஸ் ரெக்கார்டுக்காக''** என்று காது கடிக்கிறார் இயக்குநர் விஜய் ஆதித்யா. இவர் இயக்குநர் சசியின் உதவியாளர். ''பத்து நண்பர்கள் ஒரே நேரத்தில் இறந்து போகிறார்கள். பத்து நாட்கள் கழித்து ஒரே நேரத்தில் உயிர்த்தெழுந்து அவர்கள் செய்யும் சாகசம்தான் படம்'' என்கிறார் ஆதித்யா. விக்ரமாதித்யன் கதை மாதிரியில்லே இருக்கு!

''ச்சும்மா கின்னஸ் ரெக்கார்டு!''

''**எதி**ரெதிர் துருவங்களுக்குள் ஓர் ஈர்ப்பை உண்டுபண்ணுவதுதான் என் திரைக்கதை உத்தி. நான் முன்பு இயக்கிய எல்லாப் படங்களிலும் இந்த விஷயம் இருக்கும். அது 'தில்லாலங்கடி'யிலும் தொடர்கிறது'' என்கிறார் இயக்குநர் 'ஜெயம்' ராஜா. இவர் தன் தம்பி ஜெயம் ரவிக்காக இயக்கும் இன்னோர் படம்தான் தில்லாலங்கடி. ''படு ஷார்ப்பா இருக்கற ஒருத்தனை, காதலைக் கொட்டிப் பக்குவப்படுத்துகிறாள் ஒருத்தி'' - இதுதான் படத்தின் ஒற்றை வரிக் கதையாம். அந்த ஒருத்தி தமன்னா. 'பையா'வுக்குப் பிறகு தமன்னாவுக்கு இருக்கும் பெயர் சொல்லும்படியான படம் 'தில்லாலங்கடி'.

- **ஷர்மிளா**

பயாஸ்கோப்



தில்லாலங்கடி

தமிழ்நாட்டில் பிரம்மாண்டமாக வெற்றி பெற்ற திரைப்படங்களில் 'சந்திரமுகி', 'அந்நியன்' ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை. இரண்டுமே மனநலப் பாதிப்பு - மனநோய் - மனநல மருத்துவம் ஆகியவைவற்றைக் கருவாகக் கொண்டு எடுக்கப்பட்டவை.

சந்திரமுகிக்கு ஏற்படும் மனநோயின் பெயர் split personality எனவும், அந்நியனில் பாதிக்கப்பட்ட மனநோயின் பெயர் multiple personality disorder எனவும் சித்திரிக்கப்பட்டது. இவை சரியா?... சந்தேகமில்லாமல் தவறு.

ஸ்ப்ளிட் பெர்சனாலிடி என்ற மனநலப் பிரச்னையே இன்றைய மனநல மருத்துவத்தில் கிடையாது. Schizophrenia என்று அழைக்கப்படும் மனச்சிதைவு நோயின் பழைய பெயர்தான் ஸ்ப்ளிட் பெர்சனாலிடி. அதேபோல Multiple Personality Disorder என்ற நோயை, தங்கள் அனுபவத்தில் சந்தித்த மனநல மருத்துவர்களே இந்தியாவில் இருக்க வாய்ப்பில்லை.

அப்படியானால், 'சந்திரமுகி' மற்றும் 'அந்நியனி'ல் சித்திரிக்கப்படும் மனநோயின் பெயர் என்ன? ஹிஸ்டீரியா என்பதே சரி. ஹிஸ்டீரியா என்பது உண்மையில் என்ன?



"ஒரு மிதமான மனநலப் பாதிப்பு, மனத்தில் சோர்வு, பாதுகாப்பற்ற தன்மை, சுயப் பச்சாதாபம் போன்ற எண்ணங்கள் இருக்கும்போது, எல்லோரும் தன்னைக்

கவனிக்க வேண்டும் எனத் தன்னையறியாமலேயே மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் (attention seeking behaviour) செயலில் ஈடுபடுவதுதான்'' இது.

பொதுவாக ஹிஸ்டீரியா எல்லோருக்கும் வருவதில்லை. உணர்ச்சிபூர்வமாக, நிலையற்ற தன்மை (emotionally unstable) உடையவர்களுக்குத்தான் வரும். இந்தத்

கொண்டிருப்பதும்கூட ஹிஸ்டீரியாதான். ஒருதடவை ஒருத்திக்கு சாமி வந்துவிட்டால், அந்தம்மாவுக்கு 'சாமி வரும்' என மற்றவர்கள் சொல்வது அவளின் ஈகோவைத் திருப்தி செய்கிறது. (ஒடுக்கப்பட்ட மனம் உணர்ச்சிக் கொந்தளிப்பை வெளிப்படுத்துவதுதான் dissociation) எப்போதெல்லாம் கூட்டம் கூடுகிறதோ, எப்போ



டாக்டர். பி. ஆனந்தன்

ஹிஸ்டீரியா சினிமா!

தன்மை உள்ளவர்களுக்கு ஒருதடவை ஹிஸ்டீரியா வந்துவிட்டால், பிறகு மனத்தில் எந்த எதிர்மறை எண்ணங்களும் இல்லாவிட்டாலும் அடிக்கடி வரும்.

இன்றும்கூட கிராமங்களில், ''சாமி வருவது, பேய் பிடிப்பது' எனச் சொல்லிக்

தெல்லாம் விபூதி, சாம்பிராணி, பக்திப் பாடல்கள், மந்திரங்கள் போன்றவற்றை உணர்கிறாளோ அப்போதெல்லாம் அவளுக்கு 'சாமி' வந்து அடங்கும்.

திட்டமிட்டுச் செய்யப்படும் ஏமாற்று வேலை அல்ல ஹிஸ்டீரியா. சாமி வரு

வது உட்பட எல்லா வகை ஹிஸ்டீரியாவும் தன்னையறியாமல் உருவாவதுதான். அது வந்து அடங்கியவுடன், தங்களுக்கு என்ன நடந்ததென்றே அவர்களுக்கு நினைவிருக்காது.

சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கும் ஒரே சமயத்தில் இந்த உணர்வு வரும். அதற்கு மாஸ் ஹிஸ்டீரியா (mass hysteria) என்று பெயர்.

சில வருடங்களுக்கு முன் 'ஆடி வெள்ளி', 'ஆதி பராசக்தி' போன்ற பக்திப்(!?) படங்கள் திரையிடப்படும்போது, தியேட்டரில் ஒரு பெரிய கும்பலே சாமி வந்து ஆடும்.

மதுரைக்கு அருகில் ஒரு கிராமத்தில் ஆண்டுதோறும் நடக்கும் கோயில் திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது, நான் கண்ட நிகழ்ச்சி என்னை வியப்புக்குள்ளாக்கியது.

ஆறு வயதுச் சிறுவர்கள் முதல் அறுபது வயது முதியவர்கள்வரை பால்குடம் அல்லது தீச்சட்டி எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஏறக்குறைய ஒரு 50 பேர் ஒரே சமயத்தில் சாமி வந்து ஆடினர். சாமி வந்த ஒரு ஆறு வயது சிறுமியை அவளது பெற்றோர்களும், உறவினர்களும் சூழ்ந்துகொண்டு அருள் வாக்கு கேட்பது, பயபக்தியுடன் அவளிடமிருந்து விபூதி வாங்கிக்கொள்வது, அவளது காலைத் தொட்டு வணங்குவது போன்றவை நடைபெற்றன.


அப்படி ஒரு மனிதர் தன்னைத் தொடும்போது, 'நீ ஒரு பாவி, குடிகாரன் என்னைத் தொடாதே, உன்னை ஆத்தா மன்னிக்க வேண்டுமானால், குடியை நிறுத்தி 108 நாட்கள் தினமும் என்னை வந்து வழிபடு' என்று அந்தச் சிறுமி கத்தினாள். பிறகுதான் தெரிந்தது. அந்த மனிதர் அந்தச் சிறுமியின் அப்பா என்று!



உன்னை ஆத்தா மன்னிக்க வேண்டுமானால், குடியை நிறுத்தி 108 நாட்கள் தினமும் என்னை வந்து வழிபடு.

மருத்துவரீதியாகத் தனி மனிதனின் ஹிஸ்டீரியா ஒரு மிகச் சிறிய நோய். 'அந்நியனு'க்கும் 'சந்திரமுகி'க்கும் சில மருந்துகள் மற்றும் ஆலோசனைகளைக் கொடுத்து ஒரு வாரத்தில் குணமாக்கலாம்.

திரைப்படங்கள் நல்ல மெசேஜ் கொடுக்கட்டும் அல்லது கொடுக்காமல் போகட்டும். ஆனால், தவறான தகவல்களைத் திணிக்கக்கூடாது.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்.
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்.
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன் : 23714942

தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன் நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000/-
• மதிய உணவு	ரூ. 2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ("SHIRI SARADHA SAKTHI PEETAM") என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும் எங்களிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்.

திருவிழா! வசந்தஇசை சிந்தைகளில் வழியவிடும்
ஒரு விழா! மகிழ்ச்சிமலர் பூக்க வைக்கும் பெருவிழா!

கட்டெறும்பு கூடிக் கருப்பட்டி மொய்ப்பதுபோல்
வெட்டவெளி நிகழ்வுகளில் ஊர்மொய்க்கும் சொந்தவிழா!

பொருள்தேடி அயல்நாடு போனவரைக் கூடத்
திருவிழா நிச்சயமாய்ச் சுயதிசைக்குத் திரும்பவைக்கும்!

மத்தாப்பு மகிழ்ச்சியுடன் பக்கத்துக் கிராமங்கள்
கொத்தாகக் குழுமிவந்து பித்தாகத் திரிந்தலையும்!

பட்டாம் பூச்சிகளாய்ப் பாவாடை தாவணிகள்!
திட்டமிட்டு அவர்பின்னால் திரிகின்ற ஊர்விடலை!

சுளைப்பலாக் கன்னியர்கள் சுந்தரக் கைகளிலே
வளைகுலுங்கும்; இளஞ்சிரிப்பில் வாய்குலுங்கும்;
பல் மணக்கும்!

ராட்டினத்தில் சுற்றிவந்து, இளநீரும் மோருங்குடித்து,
ஓட்டையில்லா மண்பாண்டம் ஒலிதட்டி வாங்குமங்கை;

தேடி வரும் தெய்வம்!



பொற்கிழி 3

குரல் கொடுத்துப் பார்த்தபின்னும் கூடவே தன்னோடு
விரல்பிடித்து வந்தமகன் விழிப்பார்வை தப்பிவிட,

சிந்தை பதைபதைக்கத் தேடிப் பரபரக்க
அந்தஇடம் இந்தஇடமென் றலைந்து சுற்றியபின்

சவ்வுமிட்டாய்க் காரன் தேள், பாம்பு, கடிகாரம்
செய்துகரம் ஒட்டுவதை ஜொள்ளொழுக வேடிக்கைட

பார்த்திருக்கும் தமது பாலகனைக் கண்டெடுத்துப்
பூத்துவரும் முறுவலுடன் புதுப்பாசம் பொழியும்தாய்!

ஈ மொய்க்கும் பழங்களுடன், சிலேட்டுபல்பம், ரிப்பன்கள்
சேமமுற மகளுக்கு மணமுடிக்கச் சாமிஉண்டி,

மஞ்சள்துண்டு நூல்தாலி மங்கைதலை சுமைகூடை
நெஞ்சினிக்கும் குண்டுமல்லி நீள்குழலில் சுகவாடை!

குடிமக்கள் குலந்தழைக்கக் கடவுளெங்கும் பவனிவர
வடம்பிடித்துத் தேரிழுக்கும் விரல்களெலாம் பக்திமணம்!

ஊர்வீதி தோறும் உலாவரத் தெய்வமது
தேர்ஏறி மக்களையே தேடிவரும் திருவிழா!

மண்டகப் படியென்று நாளும்ஓர் இனத்தவர்கள்
பண்டிருந்து அலங்காரம் பண்ணிடுவர் உற்சவர்க்கு!

மறக்க முடியாத மண்வாசப் பாட்டுவிழா!
சிறக்கப் புகழ் மணக்கும் திருவிழாஓர் கூட்டுவிழா!

இது -

தொலைக்காட்சிப் பெட்டிகளில் தொலைந்தே போகாமல்
இளைய சமுதாயம் தலைமுறையாய்க் காத்திடட்டும்!



வேணுகுணசேகரன்

"உன் கடைசி ஆசை என்ன?"

"எனக்காக வாதாடின வக்கீல், ஒரு கேஸையாவது ஜெயிக்கிறதை என் கண்ணால பார்க்கணும் எசமான்."

-வி.அங்கப்பன், கணபதிபுரம்

"உங்களுக்குப் பிடிச்ச புத்தகம் எது?"

"என் வீட்டுக்காரரோட செக் புக்தான்!"

- பி.பாலாஜிகணேஷ், கோவிலாம்பூண்டி

"பையனோட உடம்பைக் குறைக்கச் சொல்றீங்களே, எதுக்கு?"

"ஏதோ நுழைவுத் தேர்வுக்குப் போகணுங்கிறானே, ஈஸியா இருக்குமில்லே!"

- ஞா.ஞானமுத்து, திருச்சி

"ஐயா, கேடி கபாலி ஆறு பேர்ல போலி பாஸ்போர்ட் வச்சிருந்தானாம்..."

"ஆறு மடப்பசங்க பேர்லன்னு சொல்லு!"

"ஹி...ஹி... அதுல ஒண்ணு உங்க பெயரிலே இருக்கு!"

- எஸ்.மரியசற்குணம், மதுரை





அ-அப்துல் காதர், சென்னை-45.

"கபாலி, அவசரம்னு இனி அடிக்கடி எங்கிட்ட கைமாத்து கேட்காதே."

"ஏன் ஏட்டய்யா?"

"கொடுக்கிற மாதிரி கொடுத்து, எல்லாத்தையும் பிடுங்கிட்டுப் போறான் பாருன்னு பார்க்கிறவங்க உன்னையத்தான் திட்டுவாங்க."

-வி.அங்கப்பன், கணபதிபுரம்



- தென்றல் சண்முகசுந்தரம்

ஒரு வீடு தானே இருக்கு!?



- எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

"எனக்கு எதைப் பார்த்தாலும் ரெண்டு ரெண்டாத் தெரியுது டாக்டர்..."

"கவலைப்படாதீங்க. நான் சரி பண்ணிடறேன்!"

"உங்க ரெண்டு பேர்ல நான் யாரை நம்புறது டாக்டர்?"

- அதிரை புகாரி

முகமூடித் திருவிழா

அயல்தேச ஆரவாரம்

இத்தாலியில் சென்ற மாதம் வெனிஸ் திருவிழா நடைபெற்றபோது, நல்ல மழை பிடித்துக்கொண்டுவிட்டது. திருவிழாவின் மையமான செயின்ட் மார்க்ஸ் ஸ்கொயரில் முட்டிக்கால் வரை நீர். பரவாயில்லை என்று தயக்கத்தையும் கவலையையும் உதாசீனம் செய்துவிட்டு, மக்கள் வீதிகளில் திரண்டார்கள். குடை பிடித்துக்கொண்டு அலங்காரங்கள் செய்துகொண்டார்கள். விலையுயர்ந்த வண்ண ஆடைகள் உடுத்திக்கொண்டு மேலுக்கு மழை கோட் அணிந்துகொண்டார்கள்.

உலகம் முழுவதிலும் பல்வேறு திருவிழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றாலும், வெனிஸ் திருவிழா தனித்துவம் கொண்டது. மிகப் பழமையான விழா என்பது ஒரு காரணமாக இருக்கலாம். முதல் முதலில் வெனிஸ் விழா கொண்டாடப்பட்டது பன்னிரண்டாம் நூற்றாண்டில். விமரிசையான கொண்டாட்டங்கள் அப்போது நிகழ்ந்திருக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் திருவிழாவுக்காக ஒதுக்கியிருந்தார்கள். உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒரு விழாவாகவும் அது இருந்தது. ஆறு மாதங்கள் ஆடிப்பாடி ஓடிக்கொண்டிருந்தால் 'வேலை கெட்டுப்போகும் என்பதை உணர்ந்தபிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவகாசத்தைக் குறைத்துக்கொண்டார்கள். தற்போது கொண்டாடப்படுவது போன்ற திருவிழா 1978-ல் ஆரம்பமானது.

தற்போது மூன்று வாரங்கள் வரை விழா நடைபெறுகிறது. திருவிழாவில் ஆண், பெண் இருவருக்குமான சிகை அலங்காரம் ஆயிரம் யூரோக்கள். பழங்கால மன்னர்கள் போலவும் அரசிளங்குமாரிகள் போலவும் அலங்கரித்துவிடுகிறார்கள். வாடகைக்கு ஒரே ஒரு இரவுக்கு சிறப்பு ஆடைகள் வேண்டுமானால் பல ஆயிரம் யூரோக்கள் தரவேண்டும். ஆடிப்பாடி நடனம் ஆட பால்ரூம் வசதி உண்டு. முன்பதிவு அவசியம். விதவிதமாக உடைகளை மாட்டிக்கொள்வதில் அல்ல, விதவிதமாக உருவத்தை மாற்றிக்கொள்வதில்தான் வெனிஸ் நகர




மக்களுக்கு ஆர்வம் அதிகம். அறுநூறு அல்லது எழுநூறு யூரோக்கள் அளித்தால் போதும். யாராக வேண்டுமானாலும் நீங்கள் மாறலாம். அல்லது, எதுவாக வேண்டுமானாலும். உதாரணத்துக்கு, எட்டுக்கால் பூச்சியாக மாற வேண்டும் என்று நீங்கள் (எந்த காரணத்துக்காகவோ) விரும்பினால், அதற்குண்டான பணத்தைக் கட்டி விட்டு உட்கார்ந்துவிடலாம். மிச்சத்தை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

நெப்போலியன், டைனோசார், ராட்சஸப் புழு, பாக்டீரியா என்று யூரோவுக்கு ஏற்றபடி உருமாறலாம். வெனிஸ் விழாவின் மையம், மாஸ்க். பௌடா, மொரேட்டா என்று முகமூடிகளில் பல வகைகள் உள்ளன. முழுவதுமாக முகத்தை மறைக்கும் வடிவம், கண்களுக்கு மட்டும் பொருத்தக்கூடிய வடிவம், வாய் வரை நீளும் வடிவம் என்று பல்வேறு வடிவங்களில் முகமூடிகள் கிடைக்கின்றன. ஆயிரம் இருந்தாலும், ஆரம்பத்தில் இருந்த ஜோர் இப்போதைக்கு இல்லை என்கிறாங்கள் வெனிஸ் மக்கள். நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டிருக்கிறது. அதற்கான காரணம் ஒன்றுதான். நிதிவீழ்ச்சி காரணமாக உலகப் பொருளாதாரக் கட்டுமானம் ஆட்டம் கண்டுகொண்டிருக்கும் இந்தக் காலத்தில், ஆடம்பரத் திருவிழாக்களுக்கான தேவை சுருங்கி விட்ட நிலையில், 'முகமுடி எதற்கு இனி? முகங்களைத் தேடுவோம்'னு கவி அரங்கக் கவிதையை வாசிச்சிக் கைத்தட்டல் வாங்க வேண்டியது. ○



* திருவிழாவில்...



* 'முகமூடிகள்' விற்பனைக்கு...

மருதன்

நடக்குமென்பார்:

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: பணவரவு திருப்தி கரமாகவும், செய்தொழில் லாப கரமாகவும் இருக்கும். வீடு, மனை வாங்கும் யோகமும், புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகும் வாய்ப்பும் கிட்டும். முயற்சிகளில் வெற்றியும், மற்றவர்களின் பாராட்டுக்களும் வந்து குவியும். அநாவசியமான செலவுகள் பெருகும்.

ரிஷபம்: அசையா சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளைத் தவிர்ப்பது நலம். செய்தொழில் உத்தியோகம் இவற்றில் கடும் போட்டிகளை சந்திக்கவேண்டியிருக்கும். உடல் ஆரோக்கியத்துக்கு எவ்வித குறையும் ஏற்படாது. கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும்.


மிதுனம்: அனைத்து முயற்சிகளிலும் வெற்றி வாகை சூடுவீர்கள். சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். செய்தொழில், உத்தியோகம் இவற்றில் சிற்சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் முறியடித்து முன்னேற்றம் காணலாம். சுபகாரிய முயற்சிகள் கைகூடும்.

கடகம்: ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்கள் சேரும். மன தைரியத்தை விடாமல் துணிவுடன் செயல்படவேண்டும். குடும்பத்தில் குதூகலம் பொங்கும். செய்தொழில், வியாபாரம் இவற்றில் இருந்த சுணக்கம் அறவே நீங்கும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.

சிம்மம்: எதிர்பார்ப்புகள் ஈடேறும். வருவாய் திருப்திகரமாக இருக்கும். வம்பு, வழக்குகளில் உங்களுக்கு சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும். பதவியில் உயர்வு கிட்டும். தொலை தூரப் பிரயாணங்களும் உண்டு. உடல் ஆரோக்கியம் உன்னத நிலையில் இருக்கும். எதிலும் அகலக் கால் வைக்காமல் இருத்தல் நலம்.

கன்னி: வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்தல் நலம். செய்தொழில், உத்தியோகம் இவற்றில் மிகுந்த கவனமும் கடுமையான உழைப்பும் தேவை! செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். இதுவரை இழுபறியாய் இருந்த பிரச்னைக்கு விவேகமான தீர்வு கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பெரும் பாடு படவேண்டியிருக்கும்.

துலாம்: எதையுமே ஆராய்ந்து தெளிந்து அருமையான முடிவு எடுப்பீர்கள். செய்





தொழில், உத்தியோகம் இவற்றில் போட்டிகளை புத்திக்கூர்மையால் முறியடிப்பீர்கள். கடன் தொல்லைகள் மறையும். குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் உண்டு. உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

விருச்சிகம்: எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். வம்பு, வழக்குகளை வலிந்து தேடிக் கொண்டு போகாமலிருந்தல் நலம். திடீர்ப் பயணங்கள் ஏற்படும். செய்தொழில், உத்தியோகம் இவற்றில் பாதிப்புக்கு இடமில்லை. சுபகாரிய முயற்சிகள் தடைகளுக்குப் பிறகு கனிந்து வரும்.

தனுசு: நன்மைகள் அணிவகுப்பு நடத்தும். பிரிந்தவர்கள் ஒன்று கூடுவர். செய்தொழில், உத்தியோகம் இவற்றில் உயர்வு கிடைக்கும். நீண்ட காலக் கடன் தொல்லைகளுக்கு நிவாரணம் கிட்டும். தடைகள் அனைத்தும் தவிடு பொடியாகும். தெய்வ பலம் கூடும். இடம் மாறும் முயற்சிகள் வெற்றி பெறும்.

மகரம்: தொட்ட காரியங்கள் துலங்கும். குடும்பத்தில் சந்தோஷப் பூக்கள் பூத்துக் குலுங்கும். செய்தொழில், உத்தியோகம் சிறப்புற விளங்கும். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. புதிய வாகனச் சேர்க்கை ஏற்படும். கடன் பிரச்னைகள் கதிரவனைக் கண்ட பனி போல் விலகும்.

கும்பம்: பொன் பொருள் சேரும். புத்தி சாதுர்யத்தால் காரியசித்திகள் கிடைக்கும். செய்தொழில், உத்தியோகம் இவற்றில் உங்களுடைய எதிர்பார்ப்புகள் இனிதே நிறைவேறும். பரபரப்பாக செயல்பட வேண்டிய நிலையிலும் பழுதின்றி முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள். புதிய வாகனச் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

மீனம்: வாக்குவன்மை கூடும். மனதை வாட்டி வந்த பிரச்னைகள் முற்றிலும் மறையும். பணவரவுகள் பெருகும். புண்ணிய காரியங்களில் நாட்டம் பிறக்கும். ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் குறைந்து, மதிப்பும் மரியாதையும் கூடும். ○

நவகிரகத்தை நல்லாச்
சுத்தினா அவார்டும் வரும் -
ஆரோக்கியமும் வரும்




நடக்கும்!

பிறமொழிக் கதை 3

தமிழில் : சௌரி

என் சின்ன மாமியார் மகனுக்கு மே மாதம் மத்தியில் திருமணம், பக்கத்துக் கிராமத்தில். ஒரு வார காலம் எங்கள் குடும்பம் அங்கு சென்று தங்கியது. கல்யாணம் முடிந்ததும் சொந்தக் கிராமத்துக்குத் திரும்பினோம். வீடும் வயலும் எங்களை வாட்டி எடுத்தன.

மே மாதப் பிற்பகுதியில்தான் நடவு தொடங்கும். உழவு, பட்டமடிப்பு, உரம் போடல் எல்லாம் முடிந்து நாற்று நடக் கழனி பக்குவப்பட்டிருக்கும். வரட்டி, விறகுக் கட்டு, கரி மூட்டை எல்லாம் நன்கு காயவைத்துப் பரணில் பரப்பியாகி விட்டது. பருவ மழை முந்திக் கொண்டு வரத் தொடங்கினால், எங்கள் பாடு திண்டாட்டம். காயப்போட்டதெல்லாம் நனைந்து பாழாகிவிடும். மறுபடியும் காயவைக்க இடம் இருக்காது, வெயிலும் வராது. ஆகையாலே, கிராமப்புறங்களில் விவாகம் - விழாவெல்லாம் ஏப்ரல் மாதத்துக்குள்ளேயே நிகழ்த்தப்படும். நடவு வேலை தொடங்கி விட்டால், சொந்தபந்தம், உற்றம்-சுற்றம் எல்லாம் பணிகளில் முடங்கிப் போகும். தவிர்க்க முடியாத நிலைமையில்தான் மே மாதம் திருமணம் வைத்துக்கொள்வார்கள். எல்லாருக்குமே சங்கடம்தான்.



மராட்டிக் கதை : அசோக் பாசுல்கர்

காற்றில் ஆடும் விழுது!

விடியற்காலையில் எழுந்து, வீட்டு வேலைகளை முடித்து, வயல் வேலைக்குப் போயிருக்கும் ஆண்களுக்குக் காலை உணவு எடுத்துச்செல்லவேண்டும். திரும்பி வந்து சமையலை முடித்து மதிய உணவு கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். மீண்டும் வீடு வந்து சாப்பிட்டு ஓய்வெடுக்கவேணும்.



மதியம் சாப்பிட்டுவிட்டு இளைப்பாற வந்த போது, வழக்கம் போல் தொலைக் காட்சிக்கு எதிரில் உட்கார்ந்தேன். நான் விரும்பிப் பார்க்கும் 'இந்திய ராணுவத்தின் வெற்றிக் கதை' தொடர் தொடங்கியது. சண்டைக் காட்சிகளுக்கிடையில் ரம்மிய மான இயற்கைச்சூழல், இனிய பின்னணி இசை, ராணுவ வீரர்களின் உற்சாக உரை யாடல், நம் ராணுவ வீரர்களின் வீரதீர சாகசம், எதிரிகளின் சிதறல், பதுங்கல் - சுவாரஸ்யமான தொடர். ஒரு சோகக் காட்சி என்னைப் பதறவைத்தது. இந்தியப் படைவீரர் ஒருவர் எதிரியின் குண்டடிபட்டுச் சுருண்டு விழுகிறார். சகவீரர்கள் பதற்றத்துடன் அவரைச் சிகிச்சை முகாமிற்கு எடுத்துச் செல்லுகிறார்கள். வழியிலேயே இந்திய வீரர் மரணம் அடைந்துவிடுகிறார். எதிரிப்படையிலும் பலர் பலியாகியிருக்கிறார்கள்...

மறுநாள் காலையில் வழக்கம் போல் மாமனார், மைத்துனர், அத்தை

தேடல் திருவிழா

ஊர்கள் சேர்ந்து
உறங்கிக் கிடக்கிறது
சருகு உரமாய்...
மீண்டும் மீண்டும்
முளைக்கும் காலவயலில்
சுயத்தை சூட்சமமாய்
விதைக்கிறது –
திருவிழாவெனும்
புனைப்பெயரில்

சி.கலைவாணி



மகன் மூவரும் நடவு வேலைக்குச் சென்று விட்டார்கள். அவர்களுக்குக் காலை உணவைக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு, நாணல் தட்டைக் கட்டைத் தலையில் சுமந்து கொண்டு வீடு திரும்பினேன். காலை மணி ஒன்பதரை. வளர்ப்பு நாய் ராமு துணை வந்தது. வழியில் என் கணவரின் மாமா வீடு. வசதியான குடும்பம். வீட்டு வாசலில் சிறு கூட்டம். என்ன விசேஷம்? விசாரிக்கப் போனேன். என்னைப் பார்த்ததும் பெண்டுகள் பேச்சை நிறுத்தி விட்டு சோகபாவத்துடன் அருகில் வந்தார்கள்.

''என்ன விசயம்? ஏன் கூடியிருக்கிங்க?''

''......................''

''ஏன் பேசாமே என்னையே பார்த்துக்கிட்டு நிற்கிறீங்க?''

''................''

வீட்டிற்குள்ளிருந்து மாமாவும், ஆத்தாவும் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு அழத்தொடங்கிவிட்டார்கள்.

''எந்தப் படுபாவி கண் பட்டுச்சோ, உனக்கு இப்படியொரு சோகம் வரணுமா? இப்பத்தான் ஃபோன் வந்திச்சு. எல்லைப் புறச் சண்டையிலே உன் புருசன் குண்டடிபட்டுச் செத்திட்டானாம்! ஐயோ, என் கண்ணே! உனக்கு இப்படியா ஆகணும்?''

அழுகை ஓயவில்லை. பலரும் விம்மினார்கள்.

என் வீட்டில் படுத்திருந்த நான் கண்விழித்த போது நாத்தி சொன்னாள், ''அண்ணி! நீங்க மாமா வீட்டு வாசலிலே மயக்கமாய் விழுந்திட்டீங்களாம். மாமா, மாமி, கடைக்காரரு, அக்கம் பக்கம் எல்லாரும் சேர்ந்து உங்களை வண்டியிலே படுக்கவைத்து இங்கே கொண்டு வந்து விட்டாங்க. டாக்டர் வந்து பார்த்து ஊசி போட்டிருக்கிறாரு. வயலிலே இருந்த அப்பா, அம்மா, அத்தான், சின்ன அண்ணன் எல்லாரும் ஓடிவந்திட்டாங்க. அவங்க பெரிசாய் அழுதாங்க. நீங்க மறுபடியும் மயக்கமாயிட்டீங்க. பெரிய அண்ணன் பாடியை மிலிட்டிரிக்காரங்க கொண்டு வர்றாங்களாம். பெல்காமிலிருந்து ஃபோன் செஞ்சாங்க.''

நான் கண்மூடிக் கவிழ்ந்து படுத்தேன். அசதியில் அழவும் திராணி இல்லை.

"பாட்டிக்கு பயப்படற மாதிரி எதுவும் இல்லியே டாக்டர்...?"

''தாத்தா இருக்காங்களே!''

– சீர்காழி வி.ரேவதி

சொந்தபந்தங்களோடு கிராமத்துச் சனங்களும் வந்து குவிந்திருந்தார்கள்.

மாலைப் பொழுதில், ஆறு சோல்ஜர்கள், ராணுவ மேஜர், மாவட்ட போலீஸ் அதிகாரிகள், காவலர்கள் புடைசூழ கணவரின் சவப்பெட்டி வந்து சேர்ந்தது. என்னை அருகில் அழைத்துச் சென்று, பெட்டியைத் திறந்து முகம் பார்க்க வைத்தார்கள். பெருமிதக் களையுடன் கண்மூடிய முகம். நான் அலறியபடியே மயக்கமாகி விட்டேன். மாமியார் நிலைமையும் இப்படித்தான். பெற்ற வயிறு பரிதவித்தது. அழுகுரல்கள் அடங்கவில்லை.

ஈமக்கிரியைகள் துவங்கின. பெருந்திரளுடன் இறுதியாத்திரை புறப்பட்டது. அரசாங்க ராணுவ மரியாதையுடன் விமரிசையாகக் கொண்டு சென்று, மயானத்தில் மைத்துனர் கையால் எரியூட்டினார்கள். மறுநாள் அவலச் சடங்குகள் தொடங்கின. என் கைவளையல்களை உடைத்தார்கள். நெற்றி செந்தூரப் பொட்டு அழிக்கப்பட்டது, தாலிச்சரடு அகற்றப்பட்டது. பதுமை மாதிரி உட்கார்ந்திருந்தேன். அம்மாவும், மாமியும் ஆறுதல் சொல்லித் தேற்றினார்கள். மாமியார் மூலையில் முடங்கிக் கிடந்தார். ஒரு வாரம் வீட்டில் வருவாரும் போவாருமாக இருந்தது. சோகம் அழுத்திய மனத்தில் கடந்த காலங்கள், வருங்காலங்கள் • வட்டமிட்டுக் கொண்டிருந்தன. மாமியார், மாமனார்,





சமீபத்தில் அரசுப் பேருந்து ஒன்றில், ஒரு விழிப் புணர்ச்சி வாசகத்தைப் பார்த்தவுடன் மனம் சங்கடப்பட்டது. அது:

"சிறுவர்களைப் 'பனி'யில் அமர்த்த வேண்டாம்" என்பதுதான். அதற்குப் பக்கத்திலேயே சாக்பீஸில் குறும்புக்காரர்கள் யாரோ, "ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும்" என்று எழுதிவைத்து விட்டார்கள்.

அதிமுக்கியமான ஒரு விழிப்புணர்ச்சி வாசகத்தை, அதுவும் ஒரு அரசுப் பேருந்தில் இவ்வாறு எழுத்துப் பிழையோடு எழுதலாமா? இனிமேல் கவனமாக இருந்தல் நலம்.

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.

மைத்துனர் மாறி மாறிப் பக்கத்தில் அமர்ந்து ஆறுதல் சொல்லிச் சாப்பிட வைத்தார்கள்.

பதின்மூன்றாம் நாள் சடங்கிற்கு அம்மா வந்திருந்தாள். இரவு என் மாமியாரிடம், "நிர்மலாவை என்னோடு அழைத்துப் போகிறேன். இரு வாரம் எங்களோடு இருக்கட்டும். துக்க பாரம் குறையும்" என்றாள்.

மாமியார், "இன்னும் துக்கம் விசாரிக்க வந்துகொண்டிருக்கிறார்கள். பத்து நாள் கடந்து இவள் அப்பாவை அனுப்புங்கள். அழைத்துக்கொண்டு போகட்டும்" என்றாள். அம்மா ஊர் திரும்பினாள்.

நான் வீட்டு வேலைகளில் ஈடுபடத் தொடங்கினேன். வெளியே போவதில்லை. பத்து நாட்களுக்குப் பிறகு அப்பா வந்து அழைத்துப் போனார். பக்கத்துக் கிராமம். தோழிகளும், பெரியவர்களும் வந்து ஆறுதல் கூறிச்சென்றார்கள்.

நெருங்கிய தோழி மீனாட்சி அதிக நேரம் என்னோடு தங்கியிருந்தாள். மனம் விட்டுப் பேசினோம். ஆறுதலாக இருந்தது. என் வருங்காலம் பற்றியும் பேச்சு எடுப்பாள். நான் தடுத்துவிடுவேன். அவள் வற்புறுத்தமாட்டாள். அம்மாவின் பாசநேசம், அங்கலாய்ப்பு எனக்கு மறுவாழ்வு அமைத்துக் கொடுக்க விரும்பியதில் தவறு இல்லை. அப்பாவிடம் அம்மா வேதனையுடன் சொன்னாள், "அப்போதே சொன்னேன், மிலிட்டிரி வரன் வேண்டாம். நிம்மதியாய் வாழ முடியாது என்றேன். நீங்கள் கேட்கவில்லை. இப்போ? நம் மகள் ஒரு வருஷம் மட்டுமே வாழ்ந்து, பூவும் பொட்டும் இழந்து நிற்கிறாள். வாழவேண்டிய வயசு, மறுபடியும் நல்லபடியாய் வாழ விடுங்க. டாக்டர்கிட்டே கூட்டிப் போய் அபார்ஷன் பண்ணி விடுங்க. அடுத்த வருஷம் என் அண்ணன் மகனுக்குக் கட்டி வையுங்க. அவனும் ஆசைப்படுகிறான். மகளுக்கு மறுவாழ்வு கொடுங்க!"

"நீ வாயை மூடிக்கிட்டு கிட!" அப்பா கடிந்தார்.

அம்மா விசும்பி அழத்தொடங்கினாள். அழுதுகொண்டே, "அப்பவும் இப்படித்தான் என் வாயை அடைச்சீங்க. சொந்த மகளைச் சீரழிச்சது போறாதா?" என்றாள். அப்பா எழுந்து வெளியே போய் விட்டார்.

அடுத்த வாரம் என் மாமனாரும், மைத்துனரும் என் கடிதம் கண்டு வந்தார்கள். அவர்கள் சாப்பிட்டு இளைப்பாறியபின் புறப்படத் தயாரானார்கள். நானும் அவர்களுடன் கிளம்பினேன். அம்மாவிற்கு அதிர்ச்சி. அப்பா தலைகுனிந்து நின்றார். அம்மாவும், தம்பியும் என்னைத் தடுத்தார்கள்.

"அம்மா! எனக்கு வாழ்க்கையைக் கொடுத்தவருக்குத் துரோகம் செய்ய மாட்டேன். அவரைப் பெற்றவர்கள் எனக்கும்

பெற்றோர்தான். அது என் வீடு. அதன் வாரிசைச் சுமக்கிறேன். அதைக் கலைத்துவிட நீ விரும்புகிறாய். என்னால் இங்கே நிம்மதியாய் இருக்க முடியாதம்மா!''

பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். அப்பா-அம்மாவை வணங்கி விடைபெற்றேன். என்னைத் தொடர்ந்து மாமனாரும், மைத்துனரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டி என் வீடு நோக்கிப் புறப்பட்டது.

வீட்டில் மீண்டும் இயல்பு நிலை நிலவத் துவங்கியது. என் மனஅழுத்தம் குறைந்தது. பக்கத்து ஊரிலிருந்த பெரிய நாத்தனார் வந்திருந்தார். இரவு சாப்பாடு முடிந்ததும் எல்லாரும் கூடிப் பேசுவது வழக்கம். மாமனார் என்னைப் பார்த்து, ''நிர்மலா! நாங்க எல்லோரும் உனக்காக ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். இது எங்கள் யோசனைதான். தீர்மானிக்க வேண்டியது நீதான். இது எல்லாருக்கும் நல்லது'' என்றார்.

''என்ன அப்பா ஏற்பாடு?'' நான் திகைத்தேன்.

''உன் மச்சினன் கிருஷ்ணனைக் கலியாணம் பண்ணிக்கோ. எங்கள் விருப்பம், கோரிக்கை. இவனுக்கும் சம்மதம். நீ நல்லா யோசிச்சு சொல்லு!''

நான் விக்கித்துப் போனேன். ''என் தலைவிதி இப்படியா?''

''**அ**ண்ணி! எழுந்திருங்க! டீ.வி. ஓடிக்கிட்டிருக்கு. நீங்க குறட்டை விட்டுத் தூங்கறீங்க! இதைப் பாருங்க - மிலிட்டரி அண்ணன் உங்களுக்காக ரசகுல்லா, பணம், டிரஸ் எல்லாம் அனுப்பியிருக்கிறாரு. பக்கத்து ஊர்க்காரன் சுகாஸ், அண்ணனோடு மராட்டா ரிஜிமெண்டிலே இருக்கிறார். அவரிடம் தான் கொடுத்தனுப்பியிருக்கிறாரு. எழுந்து வாங்க!'' மைத்துனன் கிஷன் பெரிய பையைக் கையில் கொடுத்தான். ●

யானையின் மொழி!



மனித செவிகளுக்குக் கேட்காத அகவொலி அலைகளால் யானைகள் பேசிக்கொள்கின்றன என்பதை ஆய்வு செய்து கண்டுபிடித்துள்ளார் அமெரிக்கப் பெண் கேத்தரின் பெயின். தண்ணீர்த் துறையில் பெண் யானைகளிடம் நுண்ணிய கருவிகளின் மூலம் பதிவுசெய்து வாகனம் ஒன்றிலிருந்து அதை ஒலிபரப்பினார் கேத்தரின். அவ்வளவுதான். வேறொரு குட்டையில் நீராடிக் கொண்டிருந்த ஆண் யானைகள் அந்த வாகனத்தின் அருகே வந்து சூழ்ந்து கொண்டன!

யானைகள் எழுப்பும் இந்த அகவொலி அலைகள் புல், பூண்டு, மரம்,செடி, கொடிகளைக் கடந்து காடுகளினூடே தடையின்றிப் பயணிக்குமாம்! அப்போது, யானைகளை அடக்கப் பாகனே தேவையில்லை, இந்த மொழி தெரிஞ்சா போதுமுன்னு தோணுதுங்க!

- எஸ்.எஸ்.செங்கமலம், ஸ்ரீரங்கம்.


'திரு' 'திரு' விழாக்காட்சிகள்
படமும் கருத்தும்: நடனம்
ஏய் யானை வருது! யானை வருது!
தேரை இழுக்க வந்தியா, என் செயினை பிடிச்சு இழுக்க வந்தியா?
டேய், தேரு வருதே!
சாமி எங்கே வருது?
இந்த கூட்ட நெரிசல்ல எனக்கு 'சாமி' வந்திடும் போல இருக்கு!
எனக்கோ வயசாயிடுச்சு.. நீ யாரையாவது இழுத்துட்டு வந்து கல்யாணம் பண்ணிண்டாலும் சம்மதந்தான்!
தேர் இழுக்கப் போன இடத்துல அப்பா உன்னை கண்டெடுத்து வந்த மாதிரியா..?



சாமிக்குப் பக்கத்தில யாராரோ உக்காந்திருக்காங்க.
சாமியை வாகனம் தூக்குது! ரெண்டையும் ஆளுங்க தூக்குறாங்க!
நீ போட்டிருக்கிற 'செண்ட்' எல்லாத்தையும் தூக்குது!
பொய்க்கால் குதிரை சூப்பரா இருக்கு!
இந்தக் குதிரையும் நான்!
திருவிழா பெட்டியா?
ஏய், இவன்தான் என்
ஐய்யோ!

கொளுத்தத் தொடங்கிய கோடை வெயிலைச் சமாளிக்கச் சென்னையை விட்டு கோவைக்குப் போனால் புத்தி கொஞ்சம் குளு குளுன்னு ஆகுமின்னு சிங்காநல்லூர் ரோட்டில்... வரதராஜபுரத்திலுள்ள **கே.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி**க்குள் ஜாலி விசிட்டுக்கு நுழைஞ்சோம். புள்ளைங்க என்னுன்னா என்னையா நின்னு எக்ஸ்பிரஸ் கணக்கா கலக்கிட்டாங்க... அந்த கலை கலாட்டாவிலிருந்து சில டிப்ஸ்...




கல்லூரி




முதியோர் இல்லம்

இது மனிதக்காட்சி சாலை
பால் குடித்த மிருகங்கள்
அவ்வப்போது வந்து
பார்த்துவிட்டுப் போகும்.

- எம். ராஜேஸ்வரி





சாலையைக்
கடக்க உதவிய பின்...
''பார்த்துப் போங்க'' என்ற என்னைப் பற்றி
என்ன நினைத்திருப்பார்
அந்தப் பார்வையற்றவர்?

- என்.சித்ராதேவி



எக்ஸ்பிரஸ்!

பஞ்சம்

தமிழ் எழுத்துகள்
எத்தனை இருந்தால் என்ன?
ஒரு காதல் கடிதம் எழுதிப் பார்
அப்போது புரியும்
எழுத்துகளின் பஞ்சம்!
- பி.உமா மகேஸ்வரி







விலகிய நடிப்பு!

நட்பின் நடிப்பிற்குப் பரிசளிக்க
மேடையேறும் நம்
காதலுக்கு வழியை விடு...

- எம்.சத்யா



இன்றைய பெண்கள் கலாசாரத்தைச் சீர்படுத்துகிறார்களா? சீரழிக்கிறார்களா?

● வேலைக்குப் போகும் பெண்கள் வீட்டில் உள்ளவர்களை மதிப்பது இல்லை; பெரியோரை மதிக்காமை முதல் கலாச்சாரக் கேடு.

● அரைகுறை ஆடையோடு திரைப்பட ஹீரோயின்மாதிரி அலங்கரித்து, ஆண்களின் மனங்களை, நமது பண்பாட்டைச் சீரழிப்பதைக் கோனார் உரை போட்டு விளக்க வேண்டியதில்லை.


● தாய்ப்பால் தருவதைக் கேவலமாகக் கருதும் கலாசாரக்கேடு, இங்கே இவர்களால் துவங்கி விட்டது. தாலி, மெட்டியைப் புறக்கணிக்கத் துணிந்தது மகா சீர்கேடு என்பதை நீங்கள் மறுக்க முடியுமா?

● கைகட்டி வாய் பொத்தி நடக்கச் சொல்வது கலாசாரம் அல்ல - அது ஆணாதிக்கப் புத்தி - எங்கள் வளர்ச்சியைச் சகிக்க முடியாத இயலாமை இது.

● சமூக அக்கறை இல்லாம அந்த மாதிரி ட்ரெண்ட் செட்டை உருவாக்குவதே ஆண் இயக்குனர்கள்தானே.

● அடையாளத்தைத் துறப்பது தவறுதான். நீங்க நம்ம கலாசார உடையான வேட்டி சட்டைக்கு முதல்ல மாறுங்க. பரப்பரப்பான வேலைக்குப் போகும் சூழலில் தாய்ப்பால் தர முடியாதது, எங்கள் சூழலின் துரதிர்ஷ்டம்தானே தவிர திட்டமிட்ட கேடு அல்ல.

வாத அரங்கை வழி நடத்திய நடுவர்: **முனைவர். தேவராஜன்** (தமிழ்த் துறைத் தலைவர்)



படிச்சுக்கிட்டே வேலை செய்யலாம்!

முதல்வர், முனைவர்.விஜயராமன்: *''சிறப்பாகப் படிப்பவர்களுக்கு கட்டணச் சலுகை, மற்றும் ஸ்காலர்ஷிப் இங்கு உண்டு. விளையாட்டு வீரர், மாற்றுத் திறனாளிகளுக்கும் இதே சலுகைதான். கட்டாய இலவச யோகா பயிற்சி உண்டு. படித்துக்கொண்டே வேலை பார்த்துச் சம்பாதிக்க வசதி உண்டு. ஏழை மாணவர்களுக்கு இலவச இட ஒதுக்கீடும் 24 மணி நேர இலவச இன்டர்நெட்டும் எங்கள் கல்லூரியின் சிறப்பு. ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திலும் ஒரு வேலை செய்யும் பட்டதாரியை உருவாக்குவதே எங்கள் கனவு. ராகிங்கை எதிர்த்துப் பேரணியும் மனித சங்கலியும் வருஷா வருஷம் நடத்துவது, சாயநீர்க் கழிவுகளை பாக்டீரியாவைக் கொண்டு சுத்திகரிக்கும் ஆய்வுகள் அரசின் உதவியோடு நடப்பது - இவையெல்லாம் எங்களின் ப்ளஸ் பாயின்ட்ஸ்ங்க.''*

"டாக்டர், ரொம்ப நாளா எனக்குத் தலைவலி பொறுக்கவே முடியல... ஏதாவது பண்ணுங்க!"

"தலை வலிக்கும்போது எதுக்குப் பொறுக்கப் போறீங்க? வீட்ல ரெஸ்ட் எடுக்கலாமில்ல!"

- எம்.கௌரி பிரீத்தா




ஸ்மைல் ஏரியா!

"நீங்க சொன்ன மாதிரியே அஸிஸ்டெண்ட் கமிஷனரைக் கொன்னுட்டோம் பாஸ்!"

"நான் எப்படா சொன்னேன்!"

"ஒரே டென்ஷனா இருக்கு. மரியாதையா A.Cயைப் போடுன்னு சொன்னீங்களே!"

- ஏ.அருண்குமார்



அதுக்கு நீங்கதான் பொறுப்பு!

"ஏன்டா கார் பார்க்கிங்கில பைக்கை பார்க் பண்றே?"

"ரெண்டு சக்கரம்தான் வித்தியாசம் அங்கிள்!"

"ஒருநாள் அதுவும் வந்துடும்!"

கண்டக்டர்: டிக்கெட் எடு
சர்தார்ஜி: முன்னாடி எடுப்பாங்க
கண்டக்டர்: யாரும் எடுக்கல
சர்தார்ஜி: பின்னாடி எடுப்பாங்க
கண்டக்டர்: யாரும் எடுக்கல
சர்தார்ஜி: அப்போ நான் மட்டும் இளிச்சவாயனா?




ஒருங்கிணைப்பாளர்கள்



நம்ம ஜோக்ஸையும் இப்படிதான் படிப்பாங்க...!

"அவன் என்னைக் கேட்காம, பாடம் நடத்தும்போது ஏன் வெளியே போறான்?"

"பாவம் ஸார்! அவன். அவனுக்குத் தூக்கத்தில நடக்குற வியாதி. அதுக்கு நீங்கதான் பொறுப்பு."





கம்ப்யூட்டர் லவ்!

பாசத்தோடு தொட்டேன்;
Password கேட்டாய்.
நேசத்தோடு program செய்தால்...
Warning என்கிறாய்.
உனக்கு நான் என்றேன்;
Mismatch என்றாய்.
நீ என் வாழ்வென்றதும்
Error எனப் பல்லிளித்தாய்.
காதலியே எனக் கட்டி அணைத்தால்-
Shutdown என்று
memory இல்லா
computer ஆக்கியது
நியாயமா பெண்ணே!

- சி.தாவீது ராஜா



வயது வரம்பை நீக்கினால் என்ன?



தாளாளர் திருமதி. கே.எஸ்.கீதா: *ஏழைக் கூலித் தொழிலாளர் வாரிசுகளின் வாழ்வில் வருங்காலத்தை வரவழைக்கவே 2001-ல் 180 மாணவர்களுடன் தொடங்கப்பட்டது. இன்றோ 1200 மாணவர்கள் பயில்கின்றனர். நன்கொடை எதும் வாங்குவதில்லை. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான* **கேட்டரிங் படிப்பு** *எங்களின் ஸ்பெஷல். தினந்தோறும் ரத்ததானம் எங்கள் கல்லூரியின் பெருமைகளுள் ஒன்று.*

அரசிடம் நான் வைக்கும் விண்ணப்பம்... படிப்பதற்கான வயது வரம்பை முற்றிலும் நீக்கி விடுங்கள் என்பதுதான். அப்போது அது எண்ணற்ற பெண்களுக்கு வரப்பிரசாதமாய் அமையும்.''

காதல் கவிதை to காமெடி. கம்ப்யூட்டர் to கால்பந்து... எல்லாத்துலயும் நாங்கதான் பெஸ்ட்!

செய்தி: **ஆர்.பாலா**
புகைப்படங்கள்: **முனைவர். விஜயராமன்**

அருள்வாக்கு

இன்றைக்கும் சிவராத்ரி, ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி இத்யாதியை நாம் புண்ய காலங்களாகக் கொண்டாடுகிறோமென்றால் அதற்கு ஆசார்ய ஜயந்தி என்ற புண்ய காலம் ஏற்பட்டதுதான் காரணம். இந்த ஒரு ஜயந்தி இல்லையென்றால் எந்த ஜயந்தியுமே இல்லாமல் போயிருந்திருக்கும்! ஜயந்திகளையெல்லாம் ரக்ஷித்துக் கொடுத்த ஜயந்தியாக இருப்பது ஸ்ரீ சங்கர ஜயந்தியே என்பதால்தான் அதைப் புண்ய காலங்கள் அத்தனையிலும் விசேஷமானது என்றது!

ஜய சப்தம் ஆசார்யாளோடு விசேஷமாகச் சேர்ந்து "ஜய ஜய சங்கர" என்று உலகமெல்லாம் முழங்குகிறதென்று சொன்னேன். அதில் ஜயந்தி விசேஷத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லா ஜனங்களும் இந்த விசேஷத்தைப் புரிந்துகொண்டு ஆசார்ய ஜயந்தியை மஹோத்ஸவமாகக் கொண்டாட வேண்டுமென்று எனக்கு ஆசை.



விழாக் கொண்டாடுக!

எதற்காகக் கொண்டாடணுமென்றால், கொண்டாட்டத்தால் அவருக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நமக்கேதான் ச்ரேயஸ். அவரை ஸ்மரிக்கிற புண்யம் ஏற்பட்டுச் சித்தமலம் போகும். நன்றியுணர்ச்சி என்பது மநுஷ்யனாகப் பிறந்தவனுக்கு அவச்யம் அல்லவா? 'நன்றி மறவாமை' என்பதைத் தானே பெரியவர்களெல்லாம் மநுஷ லக்ஷணத்தின் உச்சியில் சொல்கிறார்கள்? ஆகையால், நமக்கு இடைக்காலத்தில் அடைபட்டுப் போன மோக்ஷமார்க்கத்தை மறுபடியும் திறந்துவிட்டு, ஸநாதன தர்மத்தைப் புத்துயிருட்டிக் கொடுத்து, சிவராத்ரி என்றும் ஸ்ரீஜயந்தி என்றும் ராம நவமி என்றும் பண்டிகைகள் கொண்டாடும் ஆனந்தத்தைக் கொடுத்தவரிடம் நன்றிக்கு அடையாளமாக அவருடைய ஜயந்தியைப் பண்டிகைகளிலெல்லாம் பெரிய பண்டிகையாகக் கொண்டாட வேண்டியது நியாயந்தானே?

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

திரைவிழா



இவன் நம்ம பையன்!

சென்னை, எழும்பூர் ஆல்பர்ட் தியேட்டர். ஜீன்ஸ் குர்த்தா, கார்கோ பேன்ட் டிஷர்ட், சால்வார் கம்மீஸ் என இளசுகள் கூட்டம் படிக்கட்டுகளில் டிக்கெட்டுகள் வாங்கக் காத்திருக்கிறது. படம் 'தலை'யோடதோ, 'சூர்யா'வோடதோ இல்லை. இரண்டு நாள் சர்வதேசக் குறும்பட விழாவில் காட்டப்போகும் குறும்படங்களுக்குத்தான் இக்கூட்டம். 29 நாடுகளிலிருந்து வந்த 419 படங்களில், 70 படங்களைத் தேர்ந்தெடுத்துத் திரையிட்டார்கள். திரைப்பட விழாவைத் தமிழகச் செய்தித் துறையினருடன் இணைந்து டீபிகா (DBKA) அமைப்பினர் நடத்தினர்.

''பல வாரங்கள் தொடர்ந்து பார்த்த ஜூரிகள், பரிசுப்படங்களை மட்டுமில்லை, திரையிடச் சிறந்ததைத் தேர்வு செய்யக்கூடத் திணறித்தான் போனார்கள்'' என்கிறார் டீபிகாவின் இயக்குநர் ரெவரன்ட் பாதர் ஹாரிஸ்.

திரை இயக்குனர் லெனின், ஆர்வி உதயகுமார் உள்ளிட்ட 7 பேர் கொண்ட ஜூரிகள் பரிசுக்குரிய படங்களைத் தேர்ந்தெடுத்தனர்.

70 படங்களையும் இரண்டு நாள் தொடர்ந்து ஆர்வத்துடன் பார்த்த சினிமாவை நேசிக்கும் அந்த இளம் பட்டாளத்தைப் பார்த்தபோது, குத்துப்பாட்டு, ஃபைட்கள், வெளிநாட்டுச் சூழலில் பாடும் காதலர்கள் என்ற நமது படங்களின் ஃபார்முலாவை மாற்ற அடுத்த தலைமுறை இயக்குனர்கள் உருவாகிவிட்டனரென்று உற்சாகமாயிருந்தது.

இந்தத் திரைப்பட விழாவில் விழுதாக நெஞ்சில் ஊன்றி, நினைவுகளில் வேர் பிடித்த சில குறும்படங்களின் கதை இது...

ஜனனம்:

ஒரு கேரள கிராமத்தில் கூலி விவசாயியின் மகனின் பிறப்பு சான்றிதழில் பெண் என்று தவறுதலாக பதிவாகி விடுகிறது. பள்ளியில் சேர்க்க முடியாமல் அந்தத் தந்தை பஞ்சாயத்து அலுவலகம், மருத்துவமனை, கலெக்டர் அலுவலகம்

என அலைக்கழிக்கப் படுகிறார். அந்த வருத்தத்திலிருக்கும்போது ஒரு தனியார் சேனல் நிகழ்ச்சிக்காக கேமிராவோடு அவரிடம் பிடித்த பாடல் என்ன நீங்கள் சொல்லும் சேதி என்ன என கேட்க உலக முழுதுக்கும்



தெரியும்படி கேமிரா முன் தன் மகனின் டிராயரை சட்டென கழற்றி இவன் ஆண்தான் உலகத்துக்கு காட்டுங்க என்று கதற படம் முடிகிறது.

தொப்பி

தேசப்பிரிவினை அறிவிக்கப்பட்டிருக்கிறது. கலவரம்; அடித்து விரட்டப்பட்ட மக்கள் சிதறி, காத்திருக்கும் ரயில் ஏற ஓடிக்கொண்டிருக்கிறார்கள். தாயிடமிருந்து பிரிந்த ஒரு சிறுவன் போராட்டக்காரர்களிடம் மாட்டிக்கொள்கிறான். அடிபடத் துவங்கும் அவனைச் சட்டென்று பாய்ந்து, தனது தலையிலிருக்கும் தொப்பியை அவனுக்கு மாட்டி, நமது பையன் ''அடிக்காதீர்கள்'' என்று சொல்லிக் காப்பாற்றுகிறார் தாடி வைத்து லுங்கியிலிருக்கும் அந்தக் கிழவர். நகரத் தொடங்கிய ரயிலில் ஏற்றிவிடுகிறார். உள்ளே போன சிறுவன் பதறிக்கொண்டிருக்கும் அம்மாவைக் கண்டதும் கட்டிக்கொள்கிறான். ஜன்னல் வழியே தனக்கு உதவிய தாத்தாவிற்கு தொப்பியை எடுத்து அசைத்து நன்றி தெரிவித்து விடைபெறுகிறான். படத்தின் பெயர் ''தொப்பி''.

இந்தியா, பாகிஸ்தான், முஸ்லிம் என்ற வார்த்தைகள் மட்டுமில்லை, எந்த வார்த்தைகளுமே பேசப்படாத இந்த அனிமேஷன் படத்தில், பின்னணி இசையும் ரீரிகார்டிங் ஓசைகளும்தான் கதையைச் சொல்லுகின்றன.



✱ விழாவில்...

அர்ஜுன்ரெய்கா என்ற அமெரிக்க வாழ் இந்தியர் தயாரித்த இந்தப் படத்துக்கு சிறந்த அனிமேஷன் படத்துக்கான பரிசு கிடைத்தது.


இப்படியான அர்த்தபுஷ்டியான கதைகளைக் கொண்ட திரைவிழா உண்மையிலேயே மதிப்பு மிக்க 'திரு'விழா தான். ○


மெக்காலேயின் குழந்தைகள்!

'அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்
உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து
எங்குற்றேனும் அல்லேன்'

------ நம்மாழ்வார்.

எனக்கு இந்திய - ஆங்கிலேய இலக்கியத்தைப் பற்றி நினைக்கும்போது, நம்மாழ்வார் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.





● சல்மான் ருஷ்டி

மேபல் குடே என்ற ஆங்கிலத்தில் எழுதும் தென்னாப்பிரிக்கக் கவிஞரும் கிட்டத்தட்ட இதே கருத்தைத்தான் எதிரொலிக்கிறார். 'இரண்டு நாகரிகங்களுக்கிடையே அல்லாடும் குழந்தைகள் நாங்கள்; இடைவழியில் தொங்கித் தொங்கி வாழ்க்கை அலுத்துவிட்டது' என்கிறார் அவர்.


ஆனால் பிரபல இந்திய-ஆங்கில எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு, இது பற்றிய தன்னம்பிக்கை அசாத்தியமானது என்று தோன்றுகிறது. அவர் அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் எழுதுகிறார்: 'ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களின் படைப்புகள், அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பதினாறு இந்திய மொழிகளில் கிடைக்கின்ற இலக்கியங்களைக் காட்டிலும் மிகவும் உயர்வானவை. உலக இலக்கியங்களோடு ஒப்பு வைத்துப் பேசக்கூடிய இந்திய ஆக்கங்கள், முதல் தடவையாக இப்பொழுதுதான் இந்த இந்திய-ஆங்கில எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்டு வருகின்றன.'

நான் 1989-ல் மதுரை பல்கலைக்கழகத்தில் ஓர் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றச் சென்றிருந்தேன். நான் பேசி முடித்ததும், ஓர் இளைஞர்(அந்தக் காலக் கட்டத்தில்) எழுந்து நின்று சொன்னார்: 'நீங்கள் சங்கம், சங்கமென்று முழங்குகிறீர்கள். ஆனால் உண்மையான தமிழ்க் கவிதை எப்பொழுது பிறந்தது தெரியுமா?'

'எப்பொழுது?' என்றேன் நான்.

'1977, ஜூன் மாதம், 18ம் தேதி'

இந்திரா பார்த்தசாரதி



'அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறீர்கள்?'

'என் முதல் கவிதை அப்பொழுதுதான் பிரசுரமாகியது..'

அந்தத் தமிழ்க் கவிஞருக்கிருந்த தன்னம்பிக்கை ருஷ்டிக்கும் இருப்பது பற்றி மகிழ்ச்சிதான். இதற்கு இந்தியர்களாகிய நாம் மெக்காலே பிரபுவுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று ருஷ்டி எதிர்பார்க்கக் கூடும். மெக்காலேதான் இந்தியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமென்று 1835-ல் ஒரு குறிப்பு எழுதினார். பைபிளில் வருகிறது: '' இறைவன் சொன்னார்: 'ஒளி உண்டாகட்டும்' 'உடனே ஒளி வந்தது' அது போல், 'மெக்காலே பிரபு சொன்னார்' 'இந்தியாவில் ஆங்கில படிப்பு உண்டாகட்டும்'.



"தமிழில் சுயசரிதையை எழுதத் தொடங்கிய பிறகுதான் நான் தமிழில்தான் சிந்தித்துக்கொண்டு வருகிறேன் என்று எனக்குப் புரிந்தது."

♦ வி.எஸ்.ஸ்ரீநிவாச சாஸ்திரி

அதன் விளைவு: 146 ஆண்டுகளுக்குப் பிறகு 'நள்ளிரவு குழந்தைகள்' (ருஷ்டி எழுதிய Midnight Children') பிறந்தது.'

இந்திய- ஆங்கில எழுத்தாளர்களிலே நான் மிகவும் போற்றும் எழுத்தாளர் ருஷ்டி.

புக்கர் பரிசு பெற்ற நாவல்களிலேயே மிகச் சிறந்த புக்கர் படைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய 'நள்ளிரவு குழந்தைகள்', உயர்ந்த கலை ஆக்கம் என்பதைப் பற்றி எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது.

ஆனால், சமீப காலமாக எழுதப்பட்டு வரும் இந்திய-ஆங்கிலப் படைப்புகள்தாம், முதல் தடவையாக, இந்திய இலக்கியத்தை உலக இலக்கிய வரைபடத்தில் இடம் பெறச்செய்திருக்கின்றன என்று கூற, அவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதுதான் என் கேள்வி. ஏளனக் குரலில் அவர் குறிப்பிடும் 'இந்திய வட்டார மொழிகளிலுள்ள' ('vernacular languages') மிகச் சிறந்த படைப்புகளாகக் கருதப்படுவனவற்றையெல்லாம் படித்த பிறகு இந்த முடிவுக்கு வந்தாரா அல்லது, குறுகிய எல்லைக்குள் புழங்கும் 'குழு சார்ந்த மொழிகளில்' (அவர் வார்த்தைகளில்) என்ன உயர்ந்த இலக்கியம் இருந்துவிடமுடியும் என்று அவர் நினைக்கிறாரா எனத் தெரியவில்லை.

இந்திய-ஆங்கில எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதும்போது, அவர்கள் இந்தியச் சமூகத்தைப் பற்றி எழுதுவது, அவர்கள் தங்கள் வாசகர்களாக பாவித்துக் கொண்ட இந்தியரல்லாத மேற்கத்தியர்களையும் அல்லது, இந்தியர்களாக இருந்தும் சிந்தனையிலும், கலாசார பாவனைகளிலும் மேற்கத்திய நகல்களாக மாறிவிட்டவர்களுக்குந்தான்... காலனி ஆட்சியின்போது, இந்தி

இளமைப் பாலம் 3

யாவைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சாம்ராஜ்ய நாவல்கள் போலல்லாமல், தங்களுடைய பிரத்யேக இந்திய அடையாளத்தை அவர்கள்(ஆங்கில) மொழியிலேயே அவர்களுக்கு உணர்த்தும் பதிலடிப் படைப்புகள் என்று (talking back to the colonizers in their own language' Edward Said) இவ்வெழுத்தாளர்கள் தங்களுடைய எழுத்துக்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டாலும், இவற்றின் அடையாளம், உலகமயமாகி விட்ட நகர்சார்ந்த எம்.டி.வி-கொக்கோலா- பூர்ஷ்வா-மேட்டிமை (elitism) கலாசார அடையாளந்தான்.

இந்திய மொழிகளில் இந்தியச் சமூகம் சார்ந்த சிறந்த நாவல்களின் தரத்துக்கு ஈடாக, ஓர் இந்திய-ஆங்கில எழுத்தாளனால் இந்திய சமூகம் சார்ந்த ஒரு படைப்பை ஆங்கிலத்தில் தந்துவிட முடியாது. காரணம், மொழிக் கலாசாரம், ஒரு சமூகக் கட்டமைப்பின் ஓர் இன்றியமையாத அம்சம்.. பாரம்பரிய மரபு; நினைவுத் தொடரின் உள் அடையாளம்..

ஆங்கிலத்தில் மிக்க தேர்ச்சிப் பெற்று, ஆங்கிலப் பேச்சு நாவன்மையினால், 'Silver-tongued Shastri' என்று அழைக்கப்பட்ட வி.எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி அவர்கள், முதலில், தம்முடைய சுயசரிதையைத் தமிழில் எழுதத் தயங்கினார். 'இலக்கணப் பிழைகளை நாங்கள் திருத்திக்கொள்கிறோம். நீங்கள் தமிழில் எழுதுங்கள்' என்றாராம் கி.வா.ஜ. எழுதி முடித்த பிறகு, அவர் கூறினாராம்: 'தமிழில் இந்தச் சுய சரிதையை எழுதத் தொடங்கிய பிறகுதான், நான் தமிழில் தான் சிந்தித்துக் கொண்டு வருகிறேன் என்று எனக்குப் புரிந்தது. ஆங்கிலத்தில் எழுதியிருந்தால், அந்த மொழிக் கலாசாரம் என்னை ஆக்ரமித்து அதன் காரணமாக நமக்கு மட்டும் புரியக்கூடிய பல விஷயங்களைச் சொல்ல முடியாமல் போயிருக்கும்..'

இந்திய மொழிகளில் எழுதும் படைப்பாளி, தான் எழுதுவதை, தன் மொழி அறியாத மற்றைய


சின்னுவா அச்சபே


நைஜீரிய இனக்குழுக்கள்



● ஆர்.கே.நாராயண்

மொழிக்காரர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்ற மன அவஸ்தையில் கஷ்டப்பட மாட்டான். இதுவே அவன் எழுத்தின் சுதந்திரம். மனத் தடை ஏதுமில்லாமல் அவ னால் எழுத முடிகிறது. இந் திய - ஆங்கில எழுத்தாளர் களில் பலருக்கு, இந்தியா வைப் பற்றி எழுதும்போது, மேல்நாட்டு வாசகனின் கவ னத்தை ஈர்ப்பது எப்படி என் பதுதான் பெரிய அக்கறை. மேல்நாட்டு வாசக னுக்கு, அந்நியமான, விநோதமான, இந்தியா வுக்கே மட்டும் உரிய (exotic) விஷயங்களை, தாங்கள் சொல்ல வந்த கதையில் புகுத்தி, வாசகனின் கவனத்தைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. கதையின் கலை அம்சம் இதனால் பாதிக்கப்படுவதில் ஆச்சர்யமில்லை.



...இன்றும் அவருடைய கற்பனை மால்குடியை இந்திய வரைபடத்தில் தேடிக்கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள்.

பிரிட்டனிலோ, அமெரிக்காவிலோ இருக்கும் இரண்டாம் தலைமுறையினர் எழுதும் நாவல்கள், முன் தலைமுறையினரிட மிருந்து வித்தியாசமாக இருந்தா லும், முன் தலைமுறையினரால் அவர்கள் பிரக்ஞையில் ஏற்றப் பட்டிருக்கும், கலாசாரச் சுமை களிலிருந்து(cultural cargo) முற்றிலும் விடுபட்டதை எடுத் துக் காட்டுவனவாக அமைய வில்லை.

ஸோயின்கா, சின்னுவா அச் சபே (Chinua Achebe) போன்ற ஆப்பிரிக்க (நைஜீரியா) எழுத் தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதி னாலும், அவர்கள் எழுத்தைப் படிக்கும்போது, நைஜீரிய இனக் குழுக்களுடன் நாம் நேரடி யாக உறவு கொண்டு உரையாடு வது போல் தோன்றுகிறது. அவர்கள் எழுத்தை ஆங்கிலத் தில் படிக்கிறோம் என்று நமக்குத் தோன்றுவதில்லை. ஆனால், இந்திய-ஆங்கில நாவல்களில் நம்மைக் கவர்வது, ஆசிரியர்களின் ஆங்கில நடை தான். இதுவே அந்நாவல் முழுக் கலை வடிவத்தைப் பெறுவதற் குத் தடையாகவுமிருக்கலாம்.

ஆனால் ஒரே இந்திய- ஆங்கில எழுத்தாளர் இதற்கு விதிவிலக்காக இருந்தார். அவர் தாம் ஆர்.கே.நாராயண். இன் றும் அவருடைய கற்பனை மால்குடியை இந்திய வரை படத்தில் தேடிக் கொண்டிருப் பவர்கள் இருக்கிறார்கள்.

*(அடுத்த வாரம்: **பண்பாடு**)*

திருவிழாவில் தொலைந்த 24 நண்பர்கள்!

முகில்

'டேய், நம்பி எங்கடா போய்த் தொலைஞ்சான்?' - மாரிமுத்து பதறினான்.

'என்கூடத்தான்டா சுத்திக்கிட்டு இருந்தான். 'இயற்கை அன்னை என்னை அன்போடு அழைக்கிறாள்! வாரீர் வாரீர்'னு சொல்லிட்டே 'அப்டி' ஒதுக்குப்புறமா போனான். 'அதுக்கெல்லாமா' கம்பெனி கொடுக்கமுடியும்னு நான் இங்கிட்டு நின்னுக்கிட்டிருந்தேன். போன பயபுள்ள, திரும்பி வரவே இல்ல' - நிறுத்தி நிதானமாகச் சொன்னான் ஜான்.

அவர்கள், ஊருக்கு வெளியிலிருக்கும் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள். ஊர்த் திருவிழாவில் இளமையைச் செலவிடுவதற்காக ஹாஸ்டல் சுவர் ஏறிக் குதித்து வந்திருந்தார்கள். மொத்தம் 25 பேர். சுருக்கமாக நம்பி என்றும், நண்பர்களால் அறிவிலிநம்பி என்றும் அழைக்கப்படும் அறிவுடைநம்பி ஓர் அரைவேக்காடு. எங்கே எதைப் பேசக்கூடாதோ அங்கே அதை மட்டுமே பேசுபவன். செல்லுமிடமெல்லாம் வம்பிழுப்பது அவனது ஹாபியல்ல, இயல்பு. சாதாரணமாகவே உளறுவான்; கூட்டத்தைக் கண்டுவிட்டால் போதும், மிதமிஞ்சிய உற்சாகத்தில் அவன் செய்யும் அலம்பல்களில் சுற்றியிருப்போர் காலியாவது சர்வ நிச்சயம்.

'மச்சான், நம்ம காலேஜ் ஸ்டாஃப் எல்லாம் இங்க வருவாங்கடா. எவன்கிட்டயாவது இவன் சிக்கிட்டான்னா நம்ம எல்லாத்துக்குமே பிரச்னைடா' - மாரிமுத்துவின் முகத்தில் பதற்றம்.


'டேய், நம்பியை ஏன்டா தனியா விட்டுட்டீங்க?' - பதறியபடி எங்கிருந்தோ ஓடிவந்தான் திலீப்.

'எங்கடா இருக்கான் அவன்?'

'ராட்டினத்துல சுத்திக்கிட்டு இருந்தான். மாரிமுத்து, உன் மானத்தை வாங்கிட்டான்டா.'

'என்னடா சொல்ற?'

'மகா ஜனங்களே கேட்டுக்கோங்க. இதனால் இந்த உலகத்துக்கு நான் அறிவிக்கும் முக்கியச் செய்தி என்னவென்றால், பிரபு



தேவா மட்டுமல்ல, என் நண்பன் மாரி முத்துவும் நயன்தாராவை லவ் பண்றான். யார் நயன்தாராவைக் கைவிட்டாலும் என் நண்பன் மாரிமுத்து, நயன்தாராவைக் கைவிட மாட்டான் என்பதை நான் காதலிக்கும் த்ரிஷாவின் தலையில் அடித்துச் சத்தியம் செய்ய நான் தயாராக இருக்கிறேன்'னு ராட்டினத்துல சுத்திக்கிட்டே கத்திக்கிட்டு இருந்தான்டா.'

'சீக்கிரம் வாடா, போய் அவனைப் பிடிக்கலாம்.'

'டேய், எங்கடா போறீங்க?' - சுந்தர் இடைமறித்தான்.

'நம்பியைப் பிடிக்கறதுக்குடா. வேலையைக் காட்ட ஆரம்பிச்சுட்டான்.'

'அதான் நானும் சொல்ல வந்தேன். நம்ம மேத்ஸ் புரொபஸர் திருவிழாவுக்குத் தன்னோட பொண்ணோட வந்திருக்காருடா. அவரு முன்னாடி போயி நின்னு 'சார், எனக்கு சப்ஜெக்ட்ல டவுட்டு'னு சொன்னான்.'

'என்னடா கேட்டான்?'

'சார், நீங்க எங்களுக்காக எவ்வளவோ கணக்குப் பண்ணுறீங்க. பதிலுக்கு நானும் உங்க பொண்ணை 'கணக்கு'ப் பண்ணுனா தப்பான்னு கேட்டான்டா. நான் பயந்து ஓடி வந்துட்டேன்.'

'டேய் வேற வழியே இல்லை. நாம போய் மைக்ல அறிவிப்புப் பண்ண வேண்டியதுதான்' - திலீப் சொல்ல, ''சின்னப் புள்ள தொலைஞ்சா மைக்ல சொல்லலாம். எல்லார்கிட்டயும் வம்பு பண்ணுறவனைப் பத்தி என்னன்னு சொல்லுவ. அசிங்கம்டா. நம்ம மானம் போயிரும்'' ஜான் தடுத்தான்.

'மானமா? எப்போ அந்த நம்பி எஸ்கேப் ஆனானோ, அப்பவே நம்ம மானமும் மலையேறிடுச்சுன்னு அர்த்தம். ஆளுக்கொரு பக்கமாப் போய்த் தேடுங்கடா.'

'என்னடா எங்க தேடியும் ஆளைக் காணோம்?'

'அம்மா மாதிரி



ஜாலி ஸ்டோர்ஸ்

ஆயிட்டான்டா. அவங்களையாவது கொஞ்சம் கஷ்டப்பட்டா கொடநாட்டுல பிடிக்கலாம். இவனை எங்க தேடுறதுன்னே தெரியலைடா. எல்லோரும் அவனைத்தான்டா தேடிக்கிட்டே இருக்காங்க' - மாரிமுத்து சொல்லிக்கொண்டிருக்கும்போதே ராஜேஷ் ஓடிவந்தான்.

'டேய், நம்பியை நான் கோயில் பக்கம் பார்த்தேன். என்னால தனியா பிடிக்க முடியாது. சீக்கிரம் வாங்கடா. சேர்ந்துபோய் அமுக்குவோம்.'

'நாம எல்லோருமே காலி. காலேஜ்ல இருந்தே நம்மளை சஸ்பெண்ட் பண்ணப் போறாங்க' - மாரிமுத்து அழும் நிலைமைக்கு வந்துவிட்டான்.



யார் நயன்தாராவைக் கைவிட்டாலும், என் நண்பன் மாரிமுத்து நயன்தாராவைக் கைவிடமாட்டான்.

கோயில் பக்கம் ஓடினார்கள். அங்கே நம்பி இல்லை. தூரத்தில் மைக்கில் யாரோ பேசினார்கள். நம்பியின் குரல் போலத்தான் இருந்தது.

'என் அருமை வாக்காளப் பெருமக்களே! எனக்கு யாராவது பாராட்டு விழா எடுப்பீர்களா? நான் சேனல் ஆரம்பிக்கவில்லை. அதைப் பார்க்க கலர் டீவி கொடுக்கவில்லை. அதிலே மானையும் மயிலையும் ஆடவிடவும் இல்லை. கோடி கோடியாகக் கொட்டி செட்-அப் போட்டு சட்டசபையைத் திறக்கவில்லை. இடைத் தேர்தலுக்குப் பின்வாசல் வழியாக வந்து பணமும் கொடுக்கவில்லை. எந்தப் படத்துக்கும் வசனமும் எழுதவில்லை... அதற்காகவாவது எனக்குப் பாராட்டு விழா எடுப்பீர்களா?'

மாரிமுத்துவும் மற்றவர்களும் பதறிப் போனார்கள். 'டேய் இவன் நம்மளை ஜெயிலுக்கே அனுப்பிருவான்டா. சீக்கிரம் போய் புடிக்கணும்டா.'

அறிவிப்புச் செய்யும் இடத்தைத் தேடி ஓடினார்கள். 'அண்ணே, ஒரு நீலக் கலர் சட்டை போட்ட பையன் வந்தானா?'

'அதான் மைக்ல உளறிக்கிட்டு இருந்தானே. இப்பத்தான் நாலு தட்டுத் தட்டித் துரத்தி விட்டேன்' - மைக் செட் அண்ணாச்சி முறைத்தார். அங்கிருந்து எஸ்கேப் ஆனார்கள்.

'வேற வழியே இல்லடா. நம்மனால நம்பியைப் பிடிக்க முடியும்னு தோணல. பக்கத்து போலீஸ் ஸ்டேஷன்ல சுந்தரோட சொந்தக்காரர் தான் கான்ஸ்டபிளா இருக்காரு. கம்ப்ளெயின்ட் கொடுத்துடலாம். கொஞ்சம் ரிஸ்க் தான். இதவிட்டா வேற எதுவும் தோணல.'

மாரிமுத்துவும் சுந்தரும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள். சுந்தரின் சொந்தக்காரர் இல்லை. அங்கிருந்த ஏட்டிடம் தயங்கித் தயங்கி விஷயத்தைப் பூசி மெழுகினார்கள். 'அந்தா, ஓரமா படுத்துருக்கானே, அவன் தானா?'

நம்பிதான். ஸ்டேஷன் பெஞ்சில் ஏகாந்தமாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான்.


'ஆமா சார்... அவன்தான்.'


'அந்தப் பையன் ஏற்கெனவே கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுத்துட்டான்.'


'என்ன கம்ப்ளெயின்ட் சார்.'

'இந்தா படிச்சுப் பாரு...'

'மதிப்பிற்குரிய ஐயா, அறிவுடை நம்பி எழுதிக் கொள்வது, நானும் என் நண்பர்கள் 24 பேரும் திருவிழா பார்க்க வந்தோம். வந்த இடத்தில் எனது 24 நண்பர்களும் தொலைந்துவிட்டார்கள்..!' ○







நிஜங்களின் கோஷம்

இராஜாஜி ஒரு சகாப்தம்: ஆசிரியர் : டாக்டர் ஜி.பாலன், பிஎச்.டி, வெளியீடு: வானதி பதிப்பகம், 28, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ.50/-

வரலாறே வாழ்க்கையாவது சுவாரஸ்யம். அது ராஜாஜிக்கு அமைந்தது. சுதந்திரப் போராட்ட காலத்தை, அதன் பல்வேறு முகங்களை, ராஜாஜியின் வரலாற்றைப் படிக்கும்போதே புரிந்து கொள்ள முடியும். ராஜரிஷியாக ராஜாஜியை உணர வைக்கிறது இந்தப் புத்தகம். 'பற்று வைக்காமல் பணி செய்', தேசநலம், பொது நலமே முக்கியம் என்பதையெல்லாம் வார்த்தைகளாக இல்லாமல், காட்சிப் படுத்தியுள்ளார் ஆசிரியர். படித்துப் பயனடைய வேண்டிய புத்தகம்.

நிழல்களின் தேசம்: ஆசிரியர்: ஜெ.பிஸ்மி, வெளியீடு: போதி, எஸ்.2, ஜாஸ்மின் கார்டன், இரண்டாவது தளம், எண்.5, வேதவள்ளி தெரு, சாலி கிராமம், சென்னை - 93.

திரையுலகம் பற்றிய பதிவுகளின் தொகுப்பு இது. அன்றைக்கும் இன்றைக்கும் திரையுலகைப் பார்க்கும்போது தொழில்நுட்ப ரீதியாக வளர்ந்திருக்கலாம். ஆனால், குணரீதியாகப் பார்க்கையில் எவ்வளவு தூரம் தடுமாறியிருக்கிறது என்பதை விவரிக்கிறது இந்தப் புத்தகம். பத்திரிகையாளரான பிஸ்மி, தாம் சந்தித்த, கேட்ட, உணர்ந்த செய்திகளை, மட்டைக்கு இரண்டு கீற்றாகப் பிரித்து மேய்கிறார். வெளிப் பார்வைக்கு ஜொலிக்கும் திரையுலகம், அந்தகவனமாய் இருக்கிறது என்பதை அழகாக விவரிக்கிறார். இந்த நூலில்... நிஜங்களின் கோஷத்தைக் கேட்க முடிகிறது.

மெயின் காட் கேட்: ஆசிரியர், ஏ.ஏ.ஹெச்.கே.கோரி, வெளியீடு: இருவாட்சி 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 11, விலை ரூ.120/-


அறிமுகம் அவசியப்படாத எழுத்தாளர் ஏ.ஏ.ஹெச்.கே. கோரியின் சிறுகதைகள், மனத்தின் ஊசலாட்டங்களை, தவிப்பை, ஆசையை, எதிர்ப்பார்ப்பை பளிச் சென்று படம் பிடிக்கின்றன. பல பத்திரிகைகளில் வெளியான முப்பத்தேழு சிறுகதைகளின் தொகுப்பு. தொகுப்பாகப் படிக்கும்போது, ஆசிரியரின் ஆழ்ந்த கவனமும், அதை வெளிப்படுத்தும் உத்தியும் வசீகரிக்கிறது.

- ராகவன்

நூல் அறிமுகம்

எந்த நாட்டிலாவது மக்கள்தொகையைவிட அதிக அளவில் நிறுவனங்களின் எண்ணிக்கை இருக்குமா? லிக்டென்ஸ்டெய்ன் நாட்டின் மக்கள்தொகை 35,000. அங்கு இயங்கும் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளின் எண்ணிக்கை 74,000!

பரவலான தொழில் மயமாக்கல். தாராளமான சந்தைப் பொருளாதாரம். வாரி வழங்கும் வங்கிகள். குறைவான வரிவீதம். மக்களின் முன்னேறிய வாழ்க்கைத்தரம். இவை எல்லாமாகச் சேர்ந்து இந்த நிலையை அங்கு உருவாக்கி



லிக்டென்ஸ்டைன்

டாவின்சியை விற்ற நாடு!

யுள்ளன. தனது இரு பெரும் அண்டை நாடுகளைவிட (ஸ்விட்சர்லாந்து, ஆஸ்திரியா) பொருளாதார முன்னேற்றம் கண்டு வருகிறது லிக்டென்ஸ்டெய்ன்.

ஸ்விஸ் வங்கி என்றால் உங்கள் நினைவுக்கு என்ன வரும்? லிக்டென்ஸ்டெய்ன் வங்கிகளும் அப்படித்தான். வெளிநாட்டினரின் தொகை விவரங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன. 'ஸ்டிஃபுன்ஜென்' என்ற பெயரில் நிதி நிறுவனங்களை அரசே ஏற்படுத்தியுள்ளது. இவைதான் ரகசியம் காக்கின்றன.

2008ம் ஆண்டில் ஜெர்மனியில் ஒரு பெரும் வரிஏய்ப்பில் சிக்கிக்கொண்டது எல்.ஜி.டி. என்ற வங்கி. இதன் உரிமையாளர்கள் லிக்டென்ஸ்டெய்ன் அரச குடும்பத்தினர். ''எங்கள் குழுமத்தைச் சேர்ந்த ஒரு முன்னாள் ஊழியரிடமிருந்து 73 லட்சம் டாலர் கொடுத்து வங்கியின் உள் விவரங்களைப் பெற்றது ஜெர்மனி'' என்று லிக்டென்ஸ்டெய்ன் குற்றம் சாட்டியது. இதைத் தொடர்ந்து லிக்டென்ஸ்டெய்ன் வங்கிகளின் பெயர் வெளிப்படையாகவே விமர்சிக்கப்பட, சமீபகாலமாகத் தன்னை இந்தக் கறையிலிருந்து சரிசெய்து கொள்ளத் தொடங்கியிருக்கிறது லிக்டென்ஸ்டெய்ன்.

முதலாம் உலகப் போர் முடிவுக்கு வருவதற்கு முன் வரை, ஆஸ்திரியாவின் நெருங்கிய நண்பனாக விளங்கியது லிக்டென்ஸ்டெய்ன். யுத்தத்தைத் தொடர்ந்து உண்டான பொருளாதார நெருக்கடி காரணமாக (தன் ராணுவத்தைக் கூட நடத்த முடியாமல் அதைக் கலைத்துவிட்ட அவலமும் நேர்ந்தது) ஸ்விட்சர்லாந்துடன் பொருளாதாரத் தொடர்புகளை மேற்கொண்டது. இரண்டாம் உலகப் போரின்போது ஸ்விஸ்ஸைப் போலவே நடுநிலை வகித்தது. ஆனால் மனிதாபிமானத்துடன் சில நூறு ரஷ்ய ராணுவத்தினருக்கு அடைக்கலம் அளித்தது. தானே பொருளாதார இறங்குமுகத்தில் இருக்க, அகதிகளையும் கட்டிக் காக்க முடியாமல் லிக்டென்ஸ்டெய்ன் தத்தளித்தபோது, அர்ஜென்டினா அந்த ரஷ்ய ராணுவத்தினரைத் தன் நாட்டில் ஏற்றுக் கொள்ள சம்மதித்தது. போரைத் தொடர்ந்து தனது மிகப் பெரும் கலைப் பொக்கிஷங்களையெல்லாம் (லியனார்டோ டாவின்சியின் படைப்புகள் உட்பட) விற்கவேண்டிய



கட்டாயம் ஏற்பட்டது. அதிகம் வாங்கியது அமெரிக்கா.

பிறகு, குறைந்த வரிவீதம் என்ற தூண்டிலின் மூலம் பல நிறுவனங்களைத் தன் வசம் இழுத்து வெற்றி கண்டது லிக்டென்ஸ்டெய்ன்.

உலகின் ஆறாவது பெரிய பணக்காரராகத் திகழ்கிறார் லிக்டென்ஸ்டெய்ன் இளவரசர். இவரது சொத்து மதிப்பு ஐந்து பில்லியன் அமெரிக்க டாலர். பாராளுமன்ற அரசியல்முறைதான் என்றாலும் இளவரசருக்கு இன்னமும் பெரும் அதிகாரங்கள் உண்டு. எனவே இதன் அரசியலமைப்புச் சட்டம் குறித்த விமர்சனங்கள் உண்டு. ஆனால் ''இந்த அமைப்பு மாறினால் நான் என் சொத்துக்களோடு ஆஸ்திரியாவுக்குச் சென்றுவிடுவேன்'' என்று இளவரசர் கூறிவிட்டார். அவருக்கு இன்னமும் மக்களிடையே செல்வாக்கு உள்ளது.

லிக்டென்ஸ்டெய்ன் நாட்டின் வேறு சில வியப்புகளைப் பார்க்கலாமா?

- ஜெர்மனை முக்கிய மொழியாகக் கொண்ட, ஆனால் ஜெர்மனியின் எல்லைக் கோட்டைத் தொட்டுக் கொண்டிருக்காத, ஒரே நாடு லிக்டென்ஸ்டெய்ன்தான். ஜெர்மன் மொழி பேசும் உலகின் மிகச் சிறிய நாடு இது.
- ஐரோப்பிய தடையற்ற வணிகக் கூட்டமைப்பின் (European Free Trade Association) உறுப்பினர். ஆனால் ஐரோப்பிய யூனியனின் உறுப்பினர் அல்ல.
- உலகிலேயே மிக அதிகமான இந்



நாட்டுத் தயாரிப்பு என்ன தெரியுமா? பொய்ப் பற்கள்!

* லிக்டென்ஸ்டெய்ன் நாட்டின் முழு மேற்கு எல்லையுமே ரைன் நதிதான்.
* நிறைய மலைச் சரிவுகள் கொண்ட நாடு. எனவே பனிக் காலத்தில் பனிவிளையாட்டுகள் அதிக அளவில் ஆடப்படுகின்றன.
* உலகிலேயே லிக்டென்ஸ்டெய்ன் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய இரண்டும்தான் double landlocked countries. அதாவது சுற்றிலும் நாடுகளால் மட்டுமே (கடலால் அல்ல) சூழப்பட்டு, அந்த நாடுகளும் பிற நாடுகளால் மட்டுமே சூழப்பட்ட அமைப்புடையவை.
* உலகின் மிகச் சிறிய ஆறாவது நாடு.
* தேசிய நாணயம் ஸ்விஸ் ஃப்ராங்க்.
* லிக்டென்ஸ்டெய்ன் நாட்டில் உள்ள மருத்துவமனைகள் எவ்வளவு தெரியுமா? ஒன்றே ஒன்று.
* தன்னுடைய மின்சக்தி தேவைக்காக 90 சதவீதம் வெளிநாடுகளையே நம்பியுள்ளது.
* பீங்கான் தயாரிப்புகளுக்கும் புகழ் பெற்ற நாடு.

(அடுத்து பிரியமாட்டேன் என்று கண்ணீர்விட்ட நாடு)



பங்குனிப் பெருவிழா!



கற்பகாம்பாளின் கோபம்!

மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, ஸ்ரீரங்கம் போன்ற பெரிய திருத்தலங்களில், ஒவ்வொரு மாதமும் திருவிழாதான். மதுரையில் அந்தந்த மாத உற்சவங்கள் நடக்கும் வீதிகளுக்கு ஆடி வீதி, ஆவணி வீதி, சித்திரை வீதி என, அந்தந்த மாதத்தின் பெயர்களே அமைந்திருக்கின்றன! ஆனால், பெரும்பாலான தலங்களில் பங்குனி மாதத் திருவிழாதான் முதன்மையான விழா!

மயிலாப்பூர் பங்குனி உத்திரத் விழா - திருஞான சம்பந்தர் முதல் பாபநாசம் சிவன் வரை ஈர்த்திருக்கிறது!

'பங்குனி உத்திர விழாவைக் காண்பதற்காகவே, மாண்டுபோன பூம்பாவையை மீண்டும் உயிர்ப்பிக்கிறார் ஞானசம்பந்தர். எலும்பைப் பெண்ணாக்கிய ஐதீக விழா இன்றும் அறுபத்து மூவர் உத்ஸவத்தின்போது நடைபெறுகிறது.

''அதிகார நந்தி சேவைதனைக் காணக் கண் கோடி வேண்டும்' என்று பாபநாசம் சிவனின் காம்போதி ராகக் கீர்த்தனை கேட்டுப் பரவசம் அடையாதாரும் உண்டா என்ன? நட்ட நடு இரவில், பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டு வரும் வெள்ளி ரிஷப வாகனக் காட்சியைக் காண, தூக்கத்தையும் மறந்து கோபுர வாசலில் காத்திருக்கிறார்கள் பக்த கோடிகள். விழாவின் ஒன்பதாம் நாள் மாலை, பிட்சாடனர் கோலத்தில் பெருமான் தனியாகப் புறப்பட்டு வீதி வலம் வருகிறார். சுவாமியோடுகூடச் சில பேர் சேர்ந்து கொண்டு மடிப் பிச்சை எடுக்கிறார்கள். அது ஒரு வித நேர்த்திக்கடனாம்! பிச்சை எடுத்துக் கிடைத்த காசையெல்லாம் சுவாமிக்குக் காணிக்கையாகச் செலுத்தி விடுவார்களாம்!

வீதியில் பிச்சை எடுத்துத் திரியும் பெருமானை, மேற்கு மாட வீதியில், ஓசையில்லாமல் எதிர்ப்புறமாக வந்து மடக்குகிறாள் கற்பகாம்பிகை! ''கேட்டதை எல்லாம் தரும் கற்பக விருட்சமாக வீட்டில் நான் இருக்கையில் உமக்கு ஏன் இந்தப் பிச்சைக்கார வேஷம்? ஊரில் எல்லாரும் என்னையல்லவா ஏசுகிறார்கள்?'' என்று ஒரு அதட்டல் போட்டு, பெருமானின் கூட வந்த கூட்டாளிகளான மேளக்காரனின் முதுகிலும், அர்ச்சகர் முதுகிலும் ஒரு தட்டு தட்டிவிட்டு, தன் கணவனை 'கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டு' கையோடு இழுத்துக் கொண்டு திரும்புகிறாளாம் அன்னை!

இது ஒரு சுவாரஸ்யமான விழா நிகழ்ச்சி!

- த.கி.நீலகண்டன்

வேசுகோ தல்லி... தீசுகோ தல்லி...

ஆதியில் இறைவன் ஆடைகளை நெய்யத் தனது இதயக் கமலத்திலிருந்து தேவலன் என்ற மகா அறிஞனைப் படைத்தாராம்.

திருமாலிடம் நாபிக்கமல நூல் பெற்று வனத்தில் ஆடைகளை உண்டாக்கும் வேலையைத் தொடங்கினான் தேவலன். அசுரர்கள் அதைத் தடுத்துத் தேவலனைத் துன்புறுத்தினார்கள். தேவலன் சௌடேஸ்வரி அன்னையை வணங்கி தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினானாம்.

கோடி சூர்யப் பிரகாசத்துடன் சிங்கவாகனத்தில் எழுந்தருளிய அன்னை சௌடேஸ்வரி, அசுரர்களுடன் போரிட்டு, வெற்றிகண்டு தேவலனை மீட்டாளாம். அன்றிலிருந்து தேவலன் தேவி சௌடேஸ்வரியைக் குலதெய்வமாக ஏற்றுக்கொண்டான்.

"வேசுகோ தல்லி - அம்மா இந்தக் கத்திகளை உடலில் போட்டுக் கொள்கிறோம். தீசுகோ தல்லி - அம்மா இவற்றை வாங்கிக் கொள்ளுங்கள்"



தேவலன், ஐந்து வண்ணங்கள் கொண்ட அசுரர்களின் குருதியில் நூலைத் தோய்த்து, தேவர்களுக்கும், பிற மக்களுக்கும் ஆடைகள் நெய்தான். ஆமோத நகரின் மன்னனான தேவலனின் வழிவந்தவர்கள்தான்

உலகில் முதன் முதலில் ஆடைகளை நெய்த தேவாங்கர்கள்.

"அம்மன் அசுரர்களை வென்று தேவலனை மீட்டது அமாவாசை திதியில். ஆதலால், அன்று நெசவுத் தொழிலுக்கு ஓய்வுகொடுத்துவிட்டு அன்னையை வணங்கி வருகிறார்கள்" என்கிறார் ஆலயத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் குமரேசன்.

நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் சௌடேஸ்வரி அம்மன் விதவிதமான அலங்காரங்களில் கொலுவிருந்து காட்சி தருகிறாள். பத்தாம் நாள் விஜயதசமி அன்று தேவாளிகக் குலமக்கள் கடுமையான விரதத்துடன் கத்தி போடும் திருவிழாவைத் தொடங்குகிறார்கள்.

ஆவாரம் செடிக்குப் பக்கத்தில் திருமஞ்சனக் குடத்தில் பாகு என்னும் உடை வாளை வைத்து, காப்புக் கட்டி, திருமஞ்சனக் குடத்தைக் குலமக்கள் தலை மீது வைக்கிறார்கள். பின் நீளமான கத்திகளைக் கொண்டு



கத்தி போடும் திருவிழா

தேவாங்கர் குலமக்கள் தங்கள் மார்பின் மீதும், தோள்களின் மீதும், கைகளின் மீதும் கத்திகளால் சாற்றிக் கொண்டு, (வெட்டிக் கொண்டு) தம் உடலில் இருந்து வெளிப்படும் இரத்தத்தை, அன்னைக்கு அர்ப்பணித்து பக்திச்சிரத்தையுடன் திருமஞ்சனக் குடத்தை ஊர்வலமாகக் கோவிலுக்குக் கொண்டு வந்து, சௌடேஸ்வரி அம்மனுக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் திருமஞ்சன நீராட்டுகின்றனர். இதுதான் கத்தி போடும் திருவிழா!

மாலையில் அம்மன் புறப்பாடு நடைபெற்று அசுரனைச் சம்ஹாரம் செய்யும் ஐதீகப்படி, வாழை மரத்தை வெட்டி விட்டுப் பின்னர் கோவிலுக்குத் திரும்புகிறார்கள்.

தேவாங்கர் குலத்தை அசுரர்களிடமிருந்து காத்த அம்மனுக்கு நன்றி செலுத்தும்விதமாகக் கத்திகளைத் தங்கள் உடலில் போட்டுக் கொண்டு தங்கள் குருதியைக் காணிக்கைச் செலுத்தும் காட்சி, நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. அப்படிக் கத்திகளை வீசும் பொழுது "வேசுகோ தல்லி" (அம்மா, இந்தக் கத்திகளை எங்கள் உடலில் போட்டுக் கொள்கிறோம்) "தீசுகோ தல்லி" (அம்மா, இவற்றை வாங்கிக் கொள்ளுங்கள்) என்று கத்தியபடி வயது வித்தியாசம் இல்லாமல், கண்டகம் என்னும் பாடல்களைப் பாடிக் கொண்டு ஆலயத்துக்குள் ஓடி வருகிறார்கள். உண்மையிலேயே இது த்ரில்லிங்கான திருவிழாதானுங்கோ!

செய்தி : ஆர்.பாலா

படங்கள் : ஆலய நிர்வாகம்

நிற்க அதற்குத் தக!



ஜெயக்குமாரி தணிகாசலம்

"ஒரு நல்ல டாக்டர்கிட்டக் கூட்டிக்கிட்டுப் போகலாம் அங்கிள்" என்று பக்கத்து வீட்டு பாபு கரிசனமாய்க் கூற...

"அசிங்கம், அருவருப்புக்கூட இல்லாத பொண்ணா நீங்கதான் வளர்த்துட்டிங்க... இப்பவே கரெக்ட் பண்ணலைன்னா உங்கக் குடும்பத்துக்குத்தான் அசிங்கம்" - என்று எதிர்வீட்டு பவானி எச்சரிக்கும் தொனியில் எடுத்துரைக்க...

"இதனால இவளுக்கு எவ்ளோ ஆபத்துத் தெரியுமா?" என்று மூன்றாவது வீட்டு மூர்த்தி முணுமுணுக்க...

"பலப்பல வியாதிதான் வரும்," என்று எல்.கே.ஜி படிக்கும் குட்டிப் பையன் விஷால் பயமுறுத்த...

"அன்னிக்கு இப்படித்தான், துடைப்பத்தைக் கையில வச்சிக்கிட்டு சந்தமேட்டுத் தெருவுல உங்கப் பெண்ணைப் பார்த்தேன்" - நான்காவது வீட்டு மாமா, நக்கலாய்ச் சொல்ல...

"இது ஒரு வித மனவியாதி. இதுக்குப்பேர்கூட இருக்கு" என்று சுரேஷ் தலையை சொறிய...

"பொட்டப்புள்ளையா இருந்துக்கிட்டு மான ரோஷம், குடும்ப கௌரவம் இதுகூடத் தெரியாம என்னப் பொண்ணு இவ..." பங்கஜம் பாட்டி கன்னத்தில் கை வைத்துக் கவலைப்பட...

"ஏன்டி... ஏன் இப்படி வந்துப் பொறந்து நம்ம உயிர வாங்கறதோ...சனியன்..." எப்போதும் சத்தமாகப் பேசும் ராகவன் கோபத்தில் கத்தும் குரல்... அந்தத் தெரு முழுக்க கல்யாண வீட்டு லவுட் ஸ்பீக்கர் பாட்டுப் போல எதிரொலிக்கிறது.

ஸ்கூலைச் சுற்றியிருக்கும் சாக்கடையை சுத்தப்படுத்திவிட்டு, எது பற்றியும் கவலைப்படாமல் பாத்ரூமில்.... சோப்பைக் கரைத்துத் தலை முழுகிக்கொண்டிருந்தாள் எட்டாம் வகுப்பில் சுற்றுச்சூழல் பாடம் படிக்கும் உமா என்ற பதிமூன்று வயது மாணவி. ●

அடியவருக்குத் திருவிழா!


ஆண்டாள்

"ஸ்வாமியைப் பிரதானமாகக் கொண்டு நடைபெறும் உத்ஸவங்கள் பல உண்டு. ஆனால், பக்தர்களைப் பிரதானமாகக் கொண்டு நடைபெறும் பிரம்மோத்ஸவங்கள் மூன்று ஊர்களில் மட்டுமே நடைபெறுகின்றன. அவை எங்கே என்று தெரியுமா?" என்று ஒரு சமயம் புதிர் போட்டாராம் காஞ்சி மகாசுவாமிகள். பிறகு, தாமே அந்தக் கேள்விக்கு விடையும் சொன்னாராம்.

திருப்பெருந்துறை என்ற புராதனப் பெயர் கொண்ட ஆவுடையார் கோயிலில் உள்ள ஸ்வாமி ஆத்மநாதர். ஆனால் அந்த ஊரில் பிரம்

மானுடராகப்பிறந்து, ஆழ்வாராக ஏற்றம் பெற்று, பெருமாளுக்கே மனைவியாக வாய்க்கப் பெற்ற கோதை நாச்சியாரான ஆண்டாளுக்கே இங்கே பிரதான உத்ஸவம்!

மோத்ஸவம், வாகனம், வீதி உலா எல்லாம் மாணிக்கவாசகருக்கே! அதே போல, ஸ்ரீபெரும்புதூரில் பிரம்மோத்ஸவம் ஸ்ரீமத் இராமானுஜருக்கே நடைபெறுகிறது. பெருமாளுக்குரிய வாகனங்களில் ஸ்ரீமத்ராமானுஜரே எழுந்தருளுகிறார். மூன்றாவதாக ஸ்வாமிகள் குறிப்பிட்டது ஸ்ரீவில்லிபுத்தூர். மானுடராகப் பிறந்து, ஆழ்வாராக ஏற்றம் பெற்று, பெருமாளுக்கே மனைவியாக வாய்க்கப் பெற்ற கோதை நாச்சியாரான ஆண்டாளுக்கே இங்கே பிரதான உத்ஸவம்!

மயிலாப்பூரின் பிரபலமான அறுபத்து மூவர் உத்ஸவம், திருவாலி - திருநகரியின் திருமங்கையாழ்வார் உத்ஸவம் எல்லாம் கூட அடியவருக்கான உத்ஸவமே! ஆனால், அங்கே இறைவனே பிரதான மூர்த்தியாக உத்ஸவம் கண்டருளுகிறார். இந்த மூன்று இடங்களில்தான் ஆண்டவரின் அடியவர்களுக்கு முதன்மை ஸ்தானம். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே! ●

ஊரு கோயில் மந்தை. நட்டநடுப்புர வட்ட வடிவான எடத்தை வுட்டுபுட்டு, ஊரு சனங்க எல்லாரும் கூடி இருக்காங்க. எள வட்டம்ங்க, வயசாளிங்க, குட்டி குலவாரி எல்லாம் கூடி நிக்கறாங்க. ஒக்காந்தி இருக் காங்க. வட்ட வடிவ காலி எடத்துல கரகாட்ட செட்டு காரங்க.



✱ மாரியப்பன்

காட்சி 1: ''அய்யா வாரும் சபையோரே! எனக்கு புத்தி சொன்னவரே/தாடி நரைச்சவரே/தன்மையா உள்ளவரே/வந்த சபையோருக்கு வணக் கம்!'' வெகு ராகமாய் இழுத்துப் பாடிய சபை வணக்கப் பாடலுடன் தொடங்குது. கோயில் திருவிழாவுல கிராமியக் கலை விழா.



✱ கரகாட்டம்

மந்தைக்கு வெளியே சூழ்ந்திருக்கும் இருளைக் கிழித்துக் கொண்டு பாய்கிறது எள வட்டப் பசங்களின் விசில் சப்தம். அட... வந்தாலும் வாங்க/மதுரை சுண்ணாம்பு தாங்க/அட... போனாலும் போங்க/ புதுக்கோட்டை புகையிலை தாங்க!'' அறிமுகத்துடன் அமர்க்களமாகுது கோயில் மந்தை.

காட்சி 2: ''ஆச உறவாகுமா? ஆதரவு சோறாகுமா? நேசம் பகையாகுமா? உன் னோடு நான் சேர்ந்து வருதல் போலாகுமா? அட... கிடக்கட்டும் வாங்க! ரெண்டு எளசு வெத்தலை தாங்க. காசுக்காக மானத்தெ விக்குற சாதியில்ல நாங்க. அட... கிழிஞ்சு போன பையி... நா தைச்சு தாரேன் வையி...'' ராஜா வேஷமிட்டு ஆடும் ராஜா குஷியாய்ப் பாட, அதற்கு ராணி வேடமிட்டப் பெண் குத்தலாய்ப் பதில் பாட்டாக,

''அட... எத்தனையோ புத்தி சொல்லி... கெடுத்து வைக்கும் சாராயத்தெ... நித்தமும் குடிக்கிறானே... இவனும் ஒரு ஆம்பிளையா? அட... இவ னுக்கொரு பொண்டாட்டி... இவன் லட் சணத்துக்கொரு வைப்பாட்டி... ஆறு மாச ஆட்டம்... ஊரு ஊரா ஓட்டம்... எப்போ தீரும் எங்களோட வாட்டம்?'' பாடி முடிக் கிறதுக்குள்ள கைத்தட்டல் காதைப் பொளக்குது!

திருவிழாவில் இம்மாதிரியான ஆட் டத்தை நடத்தும் கிராமியக் கலைக் களஞ்சியம் கலைக் குழுவின் அமைப்பாளர் குடந்தை மாரியப்பனை ஓரங்கட்டினோம்

ஆட்டம்... ஓட்டம்!



★ பொய்க்கால் குதிரை

நாம்ப. பனை மட்டையில மழை கொட்ற மாதிரி பேச ஆரம்பிச்சாரு.

''அடிப்படையில என் குடும்பம் ஏதும் கூத்து கட்ற குடும்பம் இல்லீங்க. ஒம்பதாம் வகுப்புல மட்டம் போட்டுட்டு சைக்கிள் ரிக்ஷா மிதிக்கப் போய்ட்டேன். அப்ப எங்க வூட்ல ஒரு கரகாட்டக் குழு, வாடகைக்கு வூடு புடிச்சு தங்கியிருந்தாங்க. அவுங்க ஒவ்வொரு ஊரா போனப்ப, என்னியும் கூட்டிட்டுப் போவாங்க. ஓரமா நின்னு வேடிக்கை பார்ப்பேன்.

ஒரு தபா, பொய்க்கால் குதிரை ஆடுற ஆளு வரலை. திடீர்னு என் கால்ல சலங்கை கட்டி, பொய்க்கால் கட்டை யில என் பாதம் வெச்சு தெச்சு வுட்டாங்க. அன்னைக்கி கால்ல சலங்கை ஏத்துனதுதான். இப்ப இருபத்தைஞ்சு வருஷம் ஆச்சு.

அப்புறம் பழகுன ஆட்கள் பதினைஞ்சு பேரைச் சேர்த்து கலைக் குழுவ நடத்திட்டு வர்றேன். சென்னை யிலேர்ந்து கன்னியாகுமரி வரைக்கும் பரவலா கிராமக் கோயில் திருவிழாக்களுக் குப் போய்ட்டு வர்றேன். மாசி மாசம் தொடங்கி ஆறு மாசம் ஆட்டம். ஊரு ஊரா ஓட்டம்! சேது சினிமா படத்துலயும், மலைக்கோட்டை சினிமா படத்துலயும் என் னோட கலைக்குழு, நடிச்சிருக்கு!'' எனக் கூறும் மாரியப்பனை வேறு சேனலுக்குத் திருப்பினோம்.

ஓங்களோட ஆட்டம் பாட்டம் பாடல் களால, மொத்தக் கூட்டத்தையும் குஷிப் படுத்துறீங்க. குறிப்பா ஓங்களோட வேத னைகள் ஏதும் இருக்கா?னு ஒரு கொக்கி போட்டோம். மனுசன் சும்மா கொட்டித் தீர்த்துட்டாரு.

''இந்தக் குறவன் குறத்தி ஆட்டத்துக்கு, அந்த இன மக்கள்லாம் எங்கள்ட்ட சண் டைக்கு வந்த அனுபவம் உண்டு. அதனால, அதுக்கு ராஜா ராணி ஆட்டம்னு பேரு மாத்திட்டோம். இந்த ஆட்டத்தப்ப ராணி வேஷம் கட்டி ஆடுற பெண்ணோட மார்புக் கச்சைத் துணியில, அந்த ஊரு மைனர் ஆளுங்களும் மைனர்ப்பசங்களும் ரூபா நோட்டை செருகி ஊக்கு குத்தி விடுவாங்க. நெசம்மாவே எங்களுக்கு இதெல்லாம் புடிக் கறது இல்லே. என்ன செய்றது? ஆட்டத்துக் குப் பேசி ஒத்துக்கிட்டு, அங்கனப் போயி மறுத்து எதுவும் எங்களால பேச ஏலாது.

மக்கள குஷிப்படுத்தவே மகேசன் எங்கள படைச்சிருக்கான்னு நினைச்சு, வாழ்க்கை தீரும் வரை ஆடுவோம்ங்க'' என்கிறார் குடந்தை மாரியப்பன்.

- சரவணன் திரு.



✱ டி.எம்.கிருஷ்ணா ✱ சங்கீதா சிவகுமார்

பிரசன்னா பாட்டுக்குப் பத்தாயிரம் பேர்!

காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயில். பங்குனி உத்திரத் திருவிழாவையொட்டி உற்சவர் புறப்பாடு ஏற்பாடுகள் ஒரு பக்கம் தடபுடலாக நடந்துகொண்டிருந்தது. மறுபக்கம், கோயில் அரங்கத்தில் பிரசன்னா வெங்கட்ராமனின் இசைக் கச்சேரி. கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் இசைக் கச்சேரியைக் கேட்கத் திரண்டிருப்பது நம்மை பிரமிக்க வைக்கிறது.

''இந்த முறை கர்நாடக இசை, பரதநாட்டியம் என்று ஏற்பாடு செய்தது மனதுக்கு திருப்தியாக இருக்கிறது. இதே போல் வருடா வருடம் செய்தால் அடித்தட்டு மக்களுக்கு நமது பழங்கலைகளின் சிறப்பைக் கொண்டு செல்ல முடியும்'' என்கிறார் பொற்கொல்லரான தினேஷ்.

''தினேஷ், நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது எங்கள் குருநாதர்கள் டி.எம்.கிருஷ்ணாவுக்கும், சங்கீதா சிவகுமாருக்கும்தான். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, கலாசார மறுமலர்ச்சி அறக்கட்டளையின் உந்து சக்தியானது அவர்கள்தான்'' என்கின்றனர், அனுஷாவும் விக்ரமும். இனி ஓவர் டு சங்கீதா சிவகுமார்.

சங்கீதா சிவகுமார்

நமது கோயில்களைச் சார்ந்தே தமிழர்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது.

காலங்காலமாய் கோயில் மூலம் காத்து வந்த பராம்பரியக் கலைகள் காலப் போக்கில் கோயில்களிலிருந்து விடை பெற்றுக்கொண்டு நகரங்களில் உள்ள சபா அரங்குகளுக்கு இடம்மாறின. ரஸிகர்களின் எண்ணிக்கையும் சுருங்கி விட்டது..... இப்போது கோயில்களில் திருவிழா என்றால், சினிமா, ரெக்கார்ட் டான்ஸ் என்று ஆகிவிட்டது. ஆனால், பக்கத்தில் உள்ள கேரளாவில் உள்ள கிராமங்களில் கோயில் விழாக்களிலும் இசையும் நாட்டியமும் இன்னமும் துடிப்போடு வாழ்கின்றன.

டி.எம்.கிருஷ்ணா

ஆமாங்க. கேரளாவில் பெரிய கோயிலானாலும், சின்ன கோயிலானாலும் திருவிழாவின்போது கர்நாடக இசைக் கச்சேரிகளும், நாட்டியமும் உண்டு. அதுவும் இரவு பதினொரு மணிக்குத் தொடங்கி விடிய, விடிய நடக்கும்.

திருக்குறுங்குடியில் ஒருமுறை திருவிழாவின்போது சென்றிருந்தேன். 'மாலை என்ன கலை நிகழ்ச்சி' என்று கேட்டபோது, 'எம்.ஜி.ஆர். சினிமா' என்றார்கள்! எனக்கு





வெறுத்துப் போய்விட்டது. இதை மாற்றத் தான் கலாசார மறுமலர்ச்சி அறக்கட்டளை. இந்த அறக்கட்டளையில் என்னுடன் மனைவி சங்கீதா, என். குமார் (சன்மார்க் குரூப்), கே.பி.சந்திரசேகர் (அமெரிக்காவில் இருக்கும் தொழிலதிபர்) ஆகியோரும் உறுப்பினர்கள்.

சங்கீதா சிவகுமார்:

டி.வி.எஸ். ஆதரவுடன் திருக்குறுங்குடியில் இரண்டு நாள் இசை நாட்டியக் கச்சேரிகளை ஏற்பாடு செய்தோம். பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளோடு வந்திருந்தார்கள். "இவர்கள் இதைக் கேட்டுக் கேட்டுப் பழகினால் எதிர்காலத்தில் சிலரேனும் இசைக் கலைஞர்களாகவும், மிகப் பலர் இசை ஆர்வலர்களாகவும் உருவாவார்கள். இதனால் இசை வாழும். நகரத்து சபாக்களில் முடக்கப்பட்ட இசையை கிராமங்களுக்கு கொண்டு வரும் உங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்' என்று அந்தப் பெற்றோர்கள் சொன்னபோது நெகிழ்ந்து போனோம்.

ணைப்பவர்கள் எங்களோடு இணையலாம்"




டி.எம்.கிருஷ்ணா

முக்கியமான ஒன்றைச் சொல்ல வேண்டும். எங்களின் இந்த முயற்சிக்குப் பெரும் உதவியாக இருப்பவர் இந்து அறநிலையத்துறை ஆணையர் சம்பத். கும்பேஸ்வரர், பேரூர் (கோவை), படவேடு ஆகிய கோயில்களிலும் எங்கள் அறக்கட்டளையின் நிகழ்ச்சிகள் நடக்கப் போகின்றன.

கால வெள்ளத்தில் நமது பாரம்பரியக் கலைகள் அடித்துச் செல்லப்படக் கூடாது. அவை நிலைத்து நிற்பதுடன் மக்களைப் பெரிய அளவில் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட யார் வேண்டுமானாலும் எங்களுடன் இணைந்து செயல்படலாம்.

- ப்ரியன்



பல்லக்கு தாங்கு

திருவிழாக்களின் போது சுவாமி எழுந்தருளும் வாகனங்கள், பல்லக்குகள், சப்பரம், விமானங்களைத் தங்கள் தோள்களில் சுமந்து வரும் ஸ்ரீபாதம் தாங்கிகள் விழாவின் முக்கியப் பங்காளர்கள். நான், நீ எனப் போட்டி போட்டுக்கொண்டு வரும் இவர்களின் தோள் மேல் சுவாமி ஆரோகணித்து, வரும் அழகே தனி! பழக்கம் இல்லாதவர்கள் இந்த பணியைச் செய்யவே முடியாது. முன்னும் பின்னும் தீவட்டிகள், குடை, ஆலவட்டம், வாத்தியகோஷ்டி, தாள கோஷ்டி இவற்றுக்கிடையே, அலைமோதும் மக்கள் வெள்ளத்தில் சுவாமியைத் தாங்கி வரும் ஸ்ரீபாதம்தாங்கிகளின் பாக்கியமே பாக்கியம்.

ஆயக்கால் போட்டு, ஆங்காங்கே நிறுத்தித் தீபாராதனை, மண்டபகப்படி நடக்கையில், அவ்வப்போது சில நிமிடங்கள் ஓய்வு! இக்குழுவின் தலைவர் ஒருவர் 'விசில்' அடித்து நிற்பதற்கும் நகர்வதற்கும் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்க, ஒருவித ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு அத்தனை பேர்களும் ஒரே கதியில் நடை போட்டு வருவதை நினைத்துப் பார்த்தால் அசாத்தியமான காரியம்!


சில தலங்களில் மைல் கணக்கில் நீண்ட பயணமாகச் சுவாமி எழுந்தருளும் போது, தோள் மாற்றிக்கொள்ள ஒரு பெரும் கூட்டமே உற்சாகத்துடன் உடன் வரும். திருவையாறு சப்தஸ்தான விழாவின் போது

சுவாமி ஏழு ஊர்களுக்கு எழுந்தருளுகிறார். ஒவ்வொரு ஊரிலும் அந்தந்த ஊர் சுவாமியும் ஊர்வலத்தில் சேர்ந்துகொள்கிறார். எல்லா சுவாமிகளும் சேர்ந்து நந்திதேவரின் திருக்கல்யாணத்தில் கலந்துகொள்ளப் புறப்பட்டு விடுகிறார்கள்.

திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள், மாசிமக உத்ஸவத்தின்போது சமுத்ர தீர்த்தவாரிக்காக முப்பது மைல் தொலைவில் இருக்கும் திருமலைராயன் பட்டினத்திற்குச் சென்று வருகிறார். சித்திரைத் திருவிழாவில் கள்ளழகர் மதுரைக்கு வருவதும், வைகை ஆற்றில் இறங்குவதும், திரும்பத் தன் இருப்பிடம் சேர்வதும் நாள்கணக்கில் நடக்கும் சம்பவம். மதுரை சொக்கநாதரும் மீனாட்சியும் திருப்பரங்குன்றத்தில் நடைபெறும் முருகன் தெய்வானைத் திருமணத்தில் கலந்துகொண்டு திரும்புகிறார்கள். உற்சாகம் கரைபுரண்டோட, இந்த விழாக்கள் சிறப்பாக நடைபெறத் தம் உடல் உழைப்பை நல்குகிறார்கள் ஸ்ரீபாதம்தாங்கிகள்!

சப்தவிடங்க ஸ்தலங்கள் என்னும் ஏழு ஊர்களிலுமே தியாகராஜர், ஒவ்வொருவிதமான நடனம் ஆடியபடியே பவனி வருகிறார். இவற்றுள் திருவாரூர் தியாகராஜரின் பவனி மிகவும் பிரசித்தம். இசைக்கும், தாளத்திற்கும் ஏற்றவாறு ஆடியபடி சுவாமியைத் தூக்கிவரும், தொண்டர்களால்தான் இந்த விழாக்களுக்குப் பெருமை! ஒரு ஊரில் கோழியைப் போன்ற நடையில் (குக்குட நடனம்) பவனி என்றால், இன்னொரு ஊரில் வண்டு பறப்பதைப் போன்ற நடனம்! (ப்ருங்க நடனம்) மற்றொரு ஊரில் அன்னநடை போன்ற நடனம்! எவ்வளவு கலை நயம் பொருந்திய பாரம்பர்யம்!

பாக்கியம்!



✱ பாக்கியம் பெறும் ஸ்ரீபாதம்தாங்கிகள்

சிதம்பரத்தில் ஆனி மற்றும் மார்கழி உத்ஸவத்தில் நடராஜரும் சிவகாமி அம்பிகையும் தேருக்கு எழுந்தருளும் கோலாகலத்தைக் காண, ஆயிரம் கண்கள் வேண்டும். ''ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக் கண் ஆயிரம் வேண்டாமோ'' என்கிற பாடல் வரிகளை நிதர்சனமாக அனுபவிக்கலாம். மக்கள் வெள்ளத்தின் நடுவே, மிதந்து வரும் படகைப் போல நடன தரிசனம் தந்து கொண்டு சுவாமியும் அம்பிகையும் பக்தர்களின் தோள்களில் அரோகணித்து அசைந்தாடி வருகிறார்கள்!

''இராத்தங்காச் சொக்கர்''

திருமலைநாயக்க மன்னர் காலத்தில் மதுரையில் பங்குனி விழாவின் போது, பொன்னனையாள் என்கிற தேவதாசிக்குக் காட்சியளிக்கும் ஐதீக விழா நடைபெறுமாம். அப்போது வைகை ஆற்றின் எதிர்க் கரையில் உள்ள திருப்பூவணம் என்கிற தலத்துக்கு சொக்கரும் மீனாட்சியும் எழுந்தருளுவார்களாம். ''சொக்கர் இராத்தங்கார்'' என்பது ஒரு வழக்கு. சொக்கநாதர் எங்கு எழுந்தருளி



* பூ பல்லக்கு

னாலும், இரவு அர்த்தஜாமத்திற்குள் மதுரைக்குத் திரும்பி விடுவதே வழக்கம்.

ஒருமுறை வைகை ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள திருப்பூவணத்திற்கு எழுந்தருளியதும், திடீரென்று காலமில்லாத காலத்தில், வைகை நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து விட்டதாம். திருப்பூவணம் சென்ற சொக்கர் அர்த்த ஜாமத்துக்குள் மதுரை திரும்ப முடியாத நிலை. வைகைக்குக் குறுக்கே பாலம் அப்போது இருக்கவில்லை. உடல் வலிமை மிக்க இளைஞர் பட்டாளம் ஒன்று திரண்டது! கரை புரண்டோடும் வைகை நதியின் இக்கரையில் இருந்து அக்கரை வரை தோளோடு தோள் கோர்த்து நின்றது. சுழித்துக் கொண்டு ஓடும் வெள்ளத்தையும் பொருட்படுத்தாது, தோளுக்குத் தோள் மாற்றிச் சாமர்த்தியமாக சொக்கப் பெருமானை மீண்டும் மதுரைக்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டார்கள்!

ஏழு ஊர்களிலுமே தியாகராஜர், ஒவ்வொருவிதமான நடனம் ஆடியபடியே பவனி வருகிறார்.

இந்த தீரச் செயலைப் பாராட்டி, மதுரைக் கோயில் பாரம்பர்யத்தையும் மரபையும் காக்க உதவியதற்குப் பரிசாக, திருமலை நாயக்க மன்னர் 'சாமநத்தம்' என்கிற ஊரையே அந்த இளைஞர்களுக்கு சாஸனம் செய்து வைத்தாராம்!

இதற்குப் பிறகு சொக்கர் திருப்பூவணத்திற்கு எழுந்தருளாமல் இக்கரையிலேயே உள்ள திருஆப்புடையார் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். இன்று வசதி பெருகிய பிறகு மீண்டும் தம் ஊருக்கு சொக்கர் வர மாட்டாரா என்று திருப்பூவணத்து மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

– த.கி. நீலகண்டன்



சிங்கார பவனி

தேரின் அடிப்பாகத்தை இலுப்பை, வேப்ப மரங்களால் செய்கிறார்கள். மேல் பாகம் கம்பங்கள், மூங்கில்கள், பனந்துண்டுகளால் அமைகிறது. வண்ணம் தீட்டிய அழகிய சீலைகள் கொண்டு அவற்றினை அலங்கரிக்கிறார்கள். தேரின் மேல் பகுதி, பாரம் அதிகமாகாமல் இருக்கவே இந்த ஏற்பாடு.

புதுடெல்லி பாகிஸ்தானில் இருக்கிறதா?

● எஸ்.பக்கிரிசாமி, திருவாரூர்

? ''உலகில் பசியில் வாடுவோருள் இருபது சதவிகிதத்தினர் இந்தியாவில்; அவர்களுக்கு உணவு அளிக்கும் வகையில் பட்ஜெட் தயாரிக்கப்படவில்லை'' என்று எம்.எஸ்.சுவாமிநாதன் சொல்லியிருக்கிறாரே?

! அடிப்படை பொருளாதாரக் கொள்கையே விவசாயம், மனிதவள மேம்பாடு சார்ந்து செயல்படவில்லையென்கிறபோது, பட்ஜெட் மட்டும் விவசாயிகளுக்கு எப்படி உதவும்!? எம்.எஸ்.சுவாமிநாதன், பசுமைப் புரட்சி திட்டம் முடிவில்லாமல் தொடரவேண்டும் என்கிறார். ஆனால், இந்தியப் பொருளாதாரக் கொள்கையோ பிச்சையிடும் புரட்சியாக மாறிவிட்டது.



★ கிரிக்கெட்டிலும் கடினம்!

● ஜி.இந்திரா, பெங்களூரு

? பஞ்சாபில் சேமிப்புக் கிடங்குகள் இல்லாததால் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள தானியங்கள் வீணானதாக என்.டி.டி.வி. செய்தி ஒளிபரப்பியது. அரசு பொறுப்பில்லாமல் இருக்கிறதே?

! இதைவிடப் பெரிய கொடுமை, பற்றாக்குறையை இட்டு நிரப்ப மக்களின் வரிப்பணத்தைச் செலவிட்டு, அயல்நாட்டிலிருந்து தானியங்களைக் கப்பல் கப்பலாக இறக்குமதி செய்வது. அவை உண்ணத் தகுதியற்ற நாலாந்தரத் தானியங்களாக விளங்குவது!

● என்.சீத்தாலட்சுமி, சென்னை-40 ★

? ஜகத்ரட்சகன் கூறுவது போல், வன்னியர்களைக் காக்கும் கடவுள் கருணாநிதி என்றால், மற்றவர்களை எந்தக் கடவுள் காப்பார்?

! துதிபாடும் பல்வேறு ஜாதி-மதத் தலைவர்களின் வாக்கிலே உதிக்கும் கருணாநிதியின் பல்வேறு அம்சாவதாரங்கள்தாம்!

● ஏ.எஸ்.யோகானந்தம், கலிங்கியம்

? ரூபாய் நோட்டில் மாலை செய்வது தேசத் தந்தை, தேசிய சின்

★ மிஸ்டர் மாட்டேன்!



நீங்கள் கேட்டவை

ணத்தை அவமதிப்பதாக உள்ளது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதா கிருஷ்ணன் கூறுகிறாரே?

! தேசிய சின்னத்துக்கும் மகாத்மாவுக்கும் மட்டுமல்ல, மாலையைப் பெறும் தலைவருக்கும் அது உண்மையில் பெரும் அவமதிப்பே! அதை உணராமல், மகிழ்ச்சியில் மூழ்குகிறவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. மேலும் மேலும் அத்தகைய மாலைகளை விரும்பிப் பெற்று, அணிந்து மகிழ்ந்து, புகைப்படமும் எடுத்துக் கொள்வது அசிங்கமாக இருக்கிறது.

● பவானி கிருஷ்ணா, பெங்களூரு ❑

? மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் தொடங்கப்பட்ட 'மகாராஜா எக்ஸ்பிரஸ்' ரயிலுக்கான விளம்பரத்தில், பாகிஸ்தானில் டெல்லி இருப்பதுபோல் காட்டப்பட்டிருக்கிறதே?

! ஏற்கெனவே ஒரு அரசு விளம்பரத்தில் தேவையின்றி பாகிஸ்தான் ராணுவத் தளபதியின் படம் இடம்பெற்றது. இதெல்லாம் அறியாமையின் விளைவாகத் தோன்றவில்லை. அரசுப் பணிகளில் சதிகாரர்களின் ஊடுருவல் தொடங்கியிருப்பதாகவே தோன்றுகிறது. இத்தகைய குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டாலன்றி ஊடுருவல் தொடரும். உஷார்!

● எஸ்.கிருத்திகா செல்வன்,
பூனாம்பாளையம்

? போலி மருந்து விற்பனை விஷயத்தில் அந்நிய நாட்டு மருந்துக் கம்பெனிகளின் சதி இருக்கிறதாமே?

! சதி அந்நிய நாட்டினுடையதா என்று ஆராய்ந்து வெளிப்படுத்தட்டும். அப்புறம் அதுபற்றி யோசிக்கலாம். இப்போதைக்கு, சதியில் முக்கிய அங்கம் வகித்துள்ளோர் செந்தமிழ்நாட்டுச் சிங்கங்கள்தான்! அவர்களைக் கண்டும் காணாமல் இருந்த அரசு அமைப்பும் தங்கத் தமிழர்களின் உறைவிடம்தான்!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, கரசேவகர்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடும் வகையில் அத்வானி பேசினார்' என அவரது முன்னாள் பாதுகாப்பு அதிகாரி அஞ்சு குப்தா வாக்குமூலம் தந்திருக்கிறாரே?

! 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்று அத்வானிக்கு நினைவூட்டியிருக்கும் அஞ்சுவின் அஞ்சா நெஞ்சத்துக்கு ஒரு சல்யூட்!

● கே.வி.ராமன், சென்னை-73


? சிறப்புப் புலனாய்வுக் குழு முன் குஜராத் முதல்வர் மோடி ஆஜராகி பதில் அளித்தாராமே...?

! விசாரணையின் முடிவு என்ன ஆனாலும் சரி, விசாரணைக்கு உட்பட நேர்ந்ததே மோடிக்குத் தலைகுனிவுதான். ஆனால் அதையே அவர் நெஞ்சு நிமிரப் பறைசாற்றி அரசியல் ஆதாயம் பெற்றது மாஸ்டர்லி

● அஞ்சாத அஞ்சு!



● சுட்டும் உண்மை



● கடவுள் வாழ்த்து!



ஸ்ட்ரோக்! இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் அவரை வீழ்த்த நினைத்தவர்களுக்கு ஸன் ஸ்ட்ரோக்!

● **எல்.மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி**

? செல்ஃபோன் வரமா? சாபமா?

! நமக்கு இன்று வரம்போல் தோன்றும் பல விஞ்ஞான சௌகரியங்கள் நாளை இந்தப் புவியின் சாபமாக விளங்கலாம். செல்ஃபோனும் அவற்றுள் ஒன்று. (அடுத்த கேள்வி காண்க)

● **கு.அருணாசலம், தென்காசி**

? செல்ஃபோன் கோபுர கதிர் வீச்சால் பறவை இனங்களுக்குப் பேராபத்து நிலவி வருகிறது என்ற கருத்து பற்றி...?

! முந்தைய கேள்விக்குப் பதில் காண்க.

● **B.பரத், அண்ணாமலைநகர்**

? 'மன்னராட்சியே தேவலாம், வெள்ளைக்காரனிடமே நாம் அடிமையாக இருந்திருக்கலாம்' என்று இப்போது தோன்றுகிறதே?

! உங்களுக்கும் எனக்கும் இப்போதுதான் தோன்றுகிறது. ஆனால், இதை தீர்க்க தரிசனத்துடன் 1980லேயே உணர்ந்து, தமது ஜெயில் டைரியில் எழுதினார் ராஜாஜி. வழக்கம் போல் பரிகாரமும் அன்றே கூறினார்: மக்கள் அனைவருக்கும் நல்லொழுக்கம், தேசபக்தி, இறையுணர்வு ஆகியன ஊட்டக்கூடிய சீரான கல்வி ஒன்றில்தான் நாம் நம்பிக்கை வைக்க முடியும்.

● **அ.அப்துல் காதர், சென்னை-45**

? கிரிக்கெட் விளையாட்டை விட அரசியல் மிகவும் கடினமானது என்று அஷாருத்தீன் சொல்கிறாரே?

! ஆமாமாம்; கிரிக்கெட் ஊழல் வியாபாரத்தை விட அரசியல் ஊழல் வியாபாரம் நடத்துவது சிரமம்தான். பின்னதில் போட்டா போட்டி ரொம்ப அதிகம். புரளும் பணமும் ஏராளம்.

● **ஜி.ஜெயபாலன், மதுரை**

? ''கலைஞர் கருணாநிதிக்குப் பிறகு தி.மு.க.வில் யாரையும் நான் தலைவராக ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று மு.க. அழகிரி கூறியிருப்பது பற்றி...?

! அதி வளமான தி.மு.க.வின் அமைதியான எதிர்காலத்தை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார்... பாவம் கலைஞர்!


❑ ரூ.150 பரிசு பெறுபவர்:
பவானி கிருஷ்ணா, பெங்களூரு

✱ ரூ. 75 பரிசு பெறுபவர்:
என்.சீத்தாலட்சுமி, சென்னை-40


● **சி.மணி, புத்தனாம்பட்டி**

? நாகர்கோவில் பகுதியில் போலீஸ்காரரே கள்ள நோட்டுகளை அச்சடித்து வெளியிட்ட சம்பவம் பற்றி...?

! வேலியே பயிரை மேய்கிறது என்றால் வேலிக்கு ஓணான் சாட்சியாக இருப்பதால்தான்! ஓணான் திருந்தினால் வேலி கடமை தவறாது! ●



✱ ஆதாய புருஷர்!



✱ தொடர் கனவு

பீட்-ஸா விசிறிகள்!

உலகெங்கிலும் ஒரு உணவு சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது. இன்று நேற்றல்ல... சுமார் நூற்றாண்டுகாலமாக! நாளுக்கு நாள் இந்த உணவுக்கு விசிறிகள் அதிகரித்துக்கொண்டே போகின்றனர்.

பிஸினஸ் மீட்டிங், பர்த்டே பார்ட்டி, கிட்ஸ் பார்ட்டி, யூத் பார்ட்டி, ஃப்ரெண்ட்ஸ் மொட்டை மாடிப் பார்ட்டி, லஞ்ச், டின்னர்... என்னவாக இருந்தாலும், ஆஜராகும் ஒரே ஐட்டம் பீட்ஸா. (சரியான உச்சரிப்பு பீட்-ஸா Peet-Sa).

* ஹில்லாரி க்ளிண்டன்



''வட்டமான மொறுமொறுப்பான 'தின் க்ரஸ்ட்' பீட்ஸாவில், ஏகப்பட்ட டாப்பிங் (மன்ஸுக்கு புட்ச்சது), அதைக் கூட்டமாக நின்றுகொண்டு, ஆளுக்கொரு பகுதியாக பிய்த்து எடுத்து தின்பது 'தனி ருசி' என்கிறது யூத் வட்டாரம்!

பீட்ஸா செய்வது, பரிமாறுவது, தின்பது எல்லாமே ஸோ ஈஸி. பலவித பிளேட்டுகள், ஸ்பூன், சின்ன கப், ஃபோர்க் என எந்தவித உபகரணங்களும் தேவையில்லாமல், நின்று, நடந்து, பறந்து, நீந்தி... என எந்த ஒரு நிலையிலும் 'அப்படியே சாப்டலாம்!'

இத்தாலிய நாட்டு உணவான பீட்ஸா உலகெங்கிலும் சென்றது எப்படி? சுவையான கதைகளைப் பார்ப்போமா?

1889ல் இத்தாலிய அரசியான 'க்வீன் மார்கரிட்டா தன் கணவர் உம்பர்ட்டோவுடன் நகர்வலம் வந்தார். அப்போது தெருவோரம் சில குடியானவர்கள் லார்ஜ் பிரெட் சாப்பிடுவதைப் பார்த்துத் தனக்கும் அது வேண்டும் என ஆசைப்பட்டு, கேட்டு வாங்கிச் சாப்பிட்டார். (இந்த பொம்பளைங்களே இப்படித்தான், புடைவை, நகை, மான்'னு கேட்டு புருஷன்கள இம்சை படுத்தறாங்க) உடனேயே அந்த டேஸ்டுக்கு அடிமையாகிவிட்டார். அடிக்கடி தன் கணவருக்கு அல்வா கொடுத்துவிட்டு நைஸா வெளியில்



போய் சாப்பிட்டார். அரசியாரின் இந்த எளிய உணவு கபளீகரத்தைப் பற்றி நகரெங்கும் பேச்சு பரபரப்பு. 'ஒரு ராணி இத்தனை சீப்பான உணவை சாப்பிடுவதா' என சாலமன் பாப்பையா இல்லாமலேயே பட்டிமன்றம் போட்டனர்.

ஆனால், அரசி தன் அரண்மனையிலிருக்கும் செஃப் (chef) ரேஃபல் எஸ்போஸிட்டோவைக் கூப்பிட்டு, அரண்மனை கிச்சனிலேயே இந்த பிரெட்டை செய்யுமாறு உத்தரவிட்டார். அரசியைக் கௌரவிக்கும் வகையில் சீஸ், டொமேட்டோ, பேஸில்... என மூவண்ண நிறக் (இத்தாலியக் கொடி) கலவைகளை டாப்பிங்காக



* 'க்வீன் மார்கரீட்டா

விசிறி அரசிக்குப் பரிமாறினார். இந்த ரேஃபல் கண்டுபிடித்து கவனமாகச் செய்து அசத்திய 'பீட்ஸா'தான் இன்று கொடி கட்டிப் பறக்கிறது.

இன்றும் 'மார்கரீட்டா பீட்ஸா' படு ஃபேமஸ். மெனுவில் முதலிடம்!

இத்தாலியிலிருக்கும் நேப்பிள்ஸ் நகரத்தில் ஏழை எளிய குடியானவர்களின் உணவு, 18-ம் நூற்றாண்டில் 'பீட்ஸா' என்ற நாமத்தைப் பெற்று இன்று அதற்கு கோடிகணக்கான விசிறிகள்.





முதன்முதலாக இத்தாலியில் பீட்ஸா செய்யப்படவில்லை, நாங்கள்தான் செய்தோம் என கிரேக்கர்கள் கூவுகிறார்கள். அவர்கள் செய்தது என்னவென்றால், மெல்லியதாக பிரெட் செய்து அதன் மீது எண்ணெய், பேரீச்சம்பழம், சில வகை ஹெர்ப்ஸ்களைத் தூவி சாப்பிட்டனர். இதே flat bscard தான் இத்தாலியில் பீட்ஸாவாக உருவெடுத்தது.

இத்தாலிய உணவான பீட்ஸாதான் இன்று அமெரிக்கர்களின் மோஸ்ட் வாண்டட் எத்னிக் ஃபுட்! இது இல்லை என்றால் வாழ்வே போர், மீனிங்லெஸ், நோ பாயிண்ட் என்ற அளவுக்கு ஒபாமாவின் மக்கள்

◄ லதாசேகர் ►

பித்தாகியிருக்கின்றனர். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. வேர்ல்ட் வார்- II சமயம், அமெரிக்க இராணுவ வீரர்கள் இத்தாலிய நகரங்களைக் கைப்பற்றும்போது, பீட்ஸாவை டேஸ்ட் பார்த்து 'லவ் அட் ஃபர்ஸ்ட் சைட்' என்று கிறங்கி, நாடு திரும்பியும் சரியாகச் சாப்பிடாமல், மனைவிகள் நோன்பிருந்து, பீட்ஸா உணவகங்களைத் திறக்க வைத்தனர். *(ஹி...ஹி...)*



சுவையான பீட்ஸா தகவல்கள்:

★ அமெரிக்காவில் ஒரு நிமிடத்தில் சுமார் 350 பீட்ஸாக்கள் என்ற கணக்கில் அம்பேல். *(சரி பீட்ஸாநந்தாக்கள்)*

★ வால் ஸ்ட்ரீட் ஜர்னலைப் பொறுத்தவரை, ஹில்லாரி க்ளிண்டன் டூர் போனால் வொயிட் ஹவுஸில் பீட்ஸா ரகமாக ஆர்டர் பண்ணி ஸ்டாஃப் வெளுத்து வாங்குவார்களாம். *(திருமதி ஒபாமா எப்படியோ?)*

★ ஒரு வருடத்திற்கு அமெரிக்காவில் மூன்று பில்லியன் பீட்ஸாக்கள் விற்பனையாகிறது.

★ அமெரிக்காவில் சுமார் 61,269 பீட்ஸா பார்லர்கள் உள்ளன.

★ பிப்-9 சர்வதேச பீட்ஸா நாளாகக் கொண்டாடப்படுகிறது.

★ 1987-ல் செய்த படுபிரம்மாண்ட பீட்ஸா கின்னஸில் இடம் பெற்று விட்டது. இதை 94,248 பகுதிகளாக வெட்டி 'இதுதாண்டா பீட்ஸா' என கூவிக்கொண்டே சாப்பிட்டனர்.

மைதா, ஈஸ்ட், உப்பு, சர்க்கரை, ஆலிவ் ஆயில் கலவை கொண்டு தயார் செய்யப்படும் பீட்ஸா பேஸ் (base)

1987-ல் செய்த படுபிரம்மாண்ட பீட்ஸா கின்னஸில் இடம் பெற்றுவிட்டது இதை 94,248 பகுதிகளாக வெட்டி 'இதுதாண்டா பீட்ஸா' என கூவிக்கொண்டே சாப்பிட்டனர்

மீது, டாப்பிங் என்ன என்பது செலக்ட் செய்யவே, யூத் வட்டங்களுக்கு சில மணி நேரம் பிடிக்கும்.

கலோரி என்று பார்த்தால் பீட்ஸாவில் எல்லாமே ரிச். மைதா, சீஸ், உப்பு... என கொழுப்பு அதிகமான உணவு. ஆனால், டிரெடிஷனல் வகை பீட்ஸாவில் சுமார் 500 லிருந்து 800 கலோரிதான் இருக்கும் என்கின்றனர். இதில் 50 கிராம் கார்போஹைட்ரேட், 20 கிராம் தக்காளி, 20 கிராம் மொஸரெல்லா சீஸ், 4 கிராம் ஆலிவ் ஆயில், 2 கிராம் ஈஸ்ட் என்ற விகிதத்தில் நம் உடலில் சேரும்.

மாதத்தில் இரண்டு நாள் என பீட்ஸா சாப்பிட்டால், ஆரோக்கியம் கெடாது. ஆனால், நிமிடத்துக்கு ஒரு பீட்ஸா காலி எனச் சாப்பிடுபவர்களுக்கு நிதானம் தேவை! ○

அத்வானியை கூண்டிலேற்றிய அஞ்சு குப்தா!

1992 டிசம்பர் ஆறாம் தேதி. இந்திய வரலாற்றில் ஒரு கறுப்பு நாள். கரசேவகர்கள் என்ற பெயரில் ஆயிரக் கணக்கான, ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் மற்றும் பா.ஜ.க தொண்டர்கள் அயோத்தியில் சங்கமித்து, பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய நாள். அன்று இடிந்தது மசூதி மட்டுமல்ல; அதுவரை இரு மதத்தினரிடையே நிலவி வந்த நல்லிணக்கமும் தான். இந்நிகழ்வுக்குப் பிறகு, இன்று வரை பழைய நல்லிணக்கம் மலரவில்லை என்பதுதான் உண்மை. ஆனால், பா.ஜ.க.வின் அரசியல் நோக்கம் நிறைவேறிவிட்டது. ஒரு முழுப் பதவிக் காலமும் மத்தியில் ஆட்சியை, அனுபவித்தாயிற்று.

அந்த மசூதி இடிப்பு அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் சங்கப் பரிவார் தலைவர்கள் முன்னிலையில்தான் நடந்தது. ''மசூதிக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் 'கரசேவை' செய்ய வேண்டும் என்ற எங்கள் வேண்டுகோள் எடுபடவில்லை. உணர்ச்சியின் உச்சத்தில் தொண்டர்கள் மசூதியைத் தகர்த்து விட்டனர். எங்களால் தடுக்க முடியவில்லை'' என்றுதான் இதுவரை அத்வானியும் மற்ற காவித் தலைவர்களும் சொல்லி வந்தார்கள்.

ஆனால் அது சரியல்ல. அத்வானி 'கோயிலை இங்கே கட்டியே தீருவோம்' என்று உணர்ச்சிக் கொந்தளிப்புடன் மசூதியை உடைக்கும் நோக்கத்தைத் தாண்டிவிடும் வகையில் பேசியதால்தான், மசூதி தரைமட்டமாக்கப்பட்டது'' என்று அத்வானியைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் அஞ்சுகுப்தா. யார் இவர்? பாபர் மசூதி இடிப்புச் சம்பவம் நடந்தபோது பைசாபாத் நகரின் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக இருந்தவர். மசூதி இடிக்கப்பட்டபோது அத்வானி அருகில் அவரது பாதுகாப்பு அதிகாரியாகவும் இருந்தவர்.



★ அத்வானி

''மசூதி தரைமட்டமாக்கப்பட்டபோது, அத்வானியும் தலைவர்களும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு இனிப்புகள் சாப்பிட்டனர். நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரைத் தொலைபேசியில் கூப்பிட்டபோது, அதை யாரும் ஸீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை'' என்று ரேபரேலி சிறப்பு நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார் அஞ்சுகுப்தா.

இப்போது மத்திய உளவு அமைப்பான 'ரா'வில் டி.ஐ.ஜி ஆகப் பணியாற்றும் அஞ்சு சிறப்பான சேவைக்கான பரிசு பெற்றவர்.

– ஸ்ரீநி




★ அஞ்சுகுப்தா

அழுத்தும் அழகிரி

பென்னகரம் வெற்றியை, முழு சந்தோஷத்துடன் அனுபவிக்க முடியாத நிலையில் தி.மு.க. தலைமை இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. காரணம், அழகிரி உருவாக்கியிருக்கும் மனஉளைச்சல்தான் என்கிறார்கள்.



கனிமொழி




ஸ்டாலின்

ஆஸ்திரேலியப் பயணம் கிளம்புவதற்கு முன்னால் ''கலைஞரைத் தவிர யாரையும் தலைவராக ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்று அழகிரி சொல்லிவிட்டுப் போனது, கட்சியில் உச்சக்கட்டக் குழப்பத்தை விளைவித்துள்ளது.

மக்களும், கட்சியும், ஸ்டாலினை அடுத்த கட்சித் தலைவராகவும் முதல்வராகவும் முழுமையாக ஏற்றுக்கொண்ட பின், 'மூத்தவன் இருக்க, இளையவனுக்குப் பட்டமா?' என்று முதல்வர் குடும்பத்தில் குரல்கள் எழ, கட்சிக்குள் ஏகக் குழப்பம். முதுகுத் தண்டு ஆபரேஷன் பிரச்னை தவிர, வேறந்த உடல் நலக் குறையும் இல்லாத முதல்வர், தம் முதுமையைப் பொருட்படுத்தாமல், அரசுப் பணியையும், எழுத்துப் பணியையும் ஆற்றி வருகிறார். தம் பொறுப்புகளைப் பங்கிட்டுக் கொள்ள ஸ்டாலினை துணை முதல்வராக நியமித்தும், முதல்வரது உற்சாகம் மற்றும் பொறுப்பு காரணமாக, அரசுப் பணிச் சுமை அவரை இடைவிடாமல் துரத்துகிறது. இந்நிலையில், முதல்வருக்குச் சங்கடங்களை உருவாக்கும் வகையில் அழகிரியின் பேச்சுகளும், பேட்டிகளும் அமைந்து விடுகின்றன.

காங்கிரஸ்''டன் மிக நல்ல முறையில் உறவைக் கையாண்டு வரும் முதல்வர், தில்லியில் நடக்கும் திட்டக் கமிஷன் கூட்டத்துக்குப் போவதாகவும் இருக்கிறார். ''வேண்டாம்... நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்று ஸ்டாலின் சொல்வதால், யோசித்து வருகிறாராம். 'செம்மொழி மாநாட்டுக்குப் பிறகு, சட்டமன்றத் தேர்தலை நடத்திவிட்டால் என்ன?' என்ற சிந்தனைதான் இப்போது மேலோங்கி நிற்கிறது. இது குறித்து சோனியாவின் கருத்தைத் தெரிந்துகொண்டு தொகுதிப் பங்கீடு பற்றிய ஆரம்ப கட்டப் பேச்சையும் நடத்தி விடலாமா என்ற எண்ணப்போக்கில் இருக்கிறார் முதல்வர்'' என்கிறார் ஒரு மூத்த தி.மு.க. பிரமுகர். அதேசமயம், குடும்ப அழுத்தம் காரணமாக, கனிமொழிக்கும் மத்திய அமைச்சர் வாய்ப்பு குறித்துப் பேசப் படுமாம். கலைஞர் இது போன்ற அஜண்டாவுடன் வந்தால்,

"நாளை ஆட்சியை இழந்தால் இந்தக் குழப்பங்கள் கட்சியைப் பிளக்கும்!"



ணேறும்-முதல்வர்!

"அமைச்சர் பொறுப்பிலிருந்து ராஜாவை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள்" என்ற கோரிக்கை காங்கிரஸ் சார்பில் வரும் என்கிறார்கள்.

ஒரு தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் எச்சரிக்கிறார்: "தலைவர் கலைஞர், ஓர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். அழகிரி ஏதேனும் குழப்பம் உருவாகும் வகையில் பேசிக் கொண்டிருந்தால், அமைச்சர் பதவியைப் பிடுங்கிக் கட்சியில் இருந்தே தற்காலிகமாகக்கூட நீக்கி வைக்கலாம். நடுநிலை மக்களிடம் அழகிரியை விட ஸ்டாலினுக்கு நல்ல இமேஜ் இருக்கிறது.

அடுத்த தலைமையைக் கட்சிதான் முடிவு செய்யும் என்று கலைஞர் சொல்லியிருந்தாலும், ஸ்டாலினை முன்னிறுத்தும் அவரது எண்ணப் போக்கை கட்சிக்காரர்கள் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள்!

மதுரை சுற்று வட்டாரத்தில் ஒரு பத்து சட்டமன்றத் தொகுதிகளில்தான் அழகிரிக்கு செல்வாக்கு. தா.கிருஷ்ணன் கொலை விவகாரத்துக்குப் பிறகு ஒருமுறை விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார் அழகிரி.

தலைவர் கலைஞர் செய்திருக்கும் சாதனைகளுக்காக வோட்டுப் போட மக்கள் தயாராக இருக்கிறார்கள். குடும்ப அழுத்தம் எதையும் கண்டு கொள்ளாமல் கட்சியின் எதிர்காலம் கருதி,



* அழகிரி

கலைஞர் சில கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது ஆட்சியில் இருப்பதால், இது போன்ற குழப்பங்களைக் கட்சிக்காரர்கள் சகித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், நாளை ஆட்சியை இழந்தால் இந்தக் குழப்பங்கள் கட்சியைப் பிளக்கும்.

\- ப்ரியன்

ஜெர்மனி நாட்டில் ஹாம் நகரிலும் இருக்கிறது ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம். ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய இந்து கோவில் இதுதான். அண்மையில் அங்கே சென்று பத்து நாட்கள் ஆன்மிகத் தொடர் சொற்பொழிவு செய்துவிட்டு வந்திருக்கும் சொற்பொழிவாளர் இளசை சுந்தரம் தமது ஜெர்மனி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்:

ஹாம் நகரிலிருந்து ஐந்து கி.மீ. தள்ளி, ஐந்து ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில், பிரம்மாண்டமான ராஜ கோபுரத்தோடு கம்பீரமாக நிற்கிறது அருள்மிகு இந்து சங்கரர் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னால், ஸ்ரீலங்காவைச் சேர்ந்த பாஸ்கர குருக்கள் என்பவரது முயற்சியால் இந்த ஆலயம் உருவானது. இவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர். ஆழ்ந்த ஆன்மிக அறிஞரான இவரே தற்போது ஆலயத்தின் ஆதீன கர்த்தாவாக இருக்கிறார்.

இந்தக் கோவிலில் தினசரி பூஜைகள் தவிர, ஆண்டுக்கு ஒரு முறை பத்து தினங்கள் உற்சவம் நடத்துகிறார்கள். தினமும் இந்துக்கள் தவிர, நிறைய ஜெர்மன் நாட்டினர்- குறிப்பாகப் பெண்கள் கோயிலுக்கு வந்து அம்மனை தரிசிக்கின்றனர். மாலை நேரங்களில் தினசரி ஆன்மிக சொற்பொழிவும் உண்டு. திருவிழாவின் கிளைமேக்ஸ் பிரம்மாண்டமான தேரோட்டம்தான்.

அம்மன் பவனி வந்த அலங்கரிக்கப்பட்ட தேரை பரவசத்துடன் இழுத்த ஆயிரக்கணக்கான பக்தர்களில் இந்தியர்கள் மட்டுமில்லாமல், ஜெர்மானிய ஆண்களும், பெண்களும் கூட அடக்கம். அன்று தேரோட்டத்தைக் காணத் திரண்டிருந்த பக்தர்கள் எண்ணிக்கை சுமார் இருபத்தைந்தாயிரத்துக்கும் அதிகம் என்று ஜெர்மானியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ஆறு மணி நேரம் நடந்த அந்த தேரோட்டத்துக்கு, ஜெர்மானிய அரசாங்கமும், உள்ளூர் நிர்வாகமும் அளித்த ஒத்துழைப்பும், செய்திருந்த ஏற்பாடுகளும் எனக்கு வியப்பூட்டின. தேரோட்டம் நடைபெற்ற பாதையில் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. வானத்தில் ஹெலிகாப்டர்களும் சுற்றிக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நம் பாரம்பரிய வேட்டி, சட்டையில் இல்லாமல், அந்த ஜெர்மானிய கலைஞர்கள் பேண்ட் சட்டை அணிந்து தவில் வாசித்தது வித்தியாசமாக இருந்தது.

'கோயிலை அடுத்துள்ள இரண்டு ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடமிருந்து விலைக்கு வாங்கி இருக்கிறோம்; அங்கே ஒரு ஆன்மிக நூலகம், இசைப் பள்ளி, நாட்டியப்



ஜெர்மனியில்...



✱ இளசை சுந்தரம்

பள்ளி போன்றவற்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்' என்று கூறினார்கள்.

கோயிலை ஒட்டிய பகுதியில் நூறுக்கும் அதிகமான கடைகள் போடப்பட்டு இருந்தன. அங்கே விற்பனைக்கு இருந்த அனைத்துமே தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்டவை தான். அங்கே வசிக்கும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைத்தமிழர்கள் என்பதால், அந்தக் கடைகளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களையும் அவர்கள் ஆர்வ முடன் வாங்கிச் சென்றார்கள். அன்று இரவு, மக்கள் எல்லாம் வீடு திரும்பிய பிறகு, கடைகள் இருந்த பகுதியில் நான் கண்ட காட்சி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கோவிலின் ஆதீனகர்த்தாவும், இன்னும் சிலரும் பெரிய துடைப்பத்தை வைத்து, தரையை சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். நான் 'என்ன சாமி! நீங்க இந்த வேலையை எல்லாம் செய்யறீங்க?' என்று பதற்றத்துடன் கேட்டபோது, 'ஆதீன கர்த்தா என்பவர் ஜமீந்தாரில்லை; அவர் இறை [illegible]ரின் ஊழியர். இது நம்ம கோவில்; இதை சுத்தமா வெச்சிக்கறது நம்ம கடமை. இதை சுத்தப்படுத்த நாலு ஆட்களை நியமிச்சா, அதற்குண்டான சம்பளம் தரணும்; கோயில் வருமானத்தை வீணா செலவு செய்யலாமா?' என்று கேட்டபோது, நான் மனம் நெகிழ்ந்துபோனேன்.

அந்நாட்டில் தமிழரசி என்ற பெயர் கொண்ட சிறுமிக்கு தன் பெயர் ஒரு தமிழ்ப்பெயர் என்றோ அதன் அர்த்தம் என்னவென்றோ தெரியவில்லை என அறிந்தபோது மிகவும் வருத்தமாக இருந்தது.

முக்கியமான விஷேசம் என்றால் பெற்றோர்கள் விரதம் இருக்கிறார்கள். ஆனால் குழந்தைகள் விரதம் இருக்கத் தயாராக இல்லை; எதற்காக விரதம் இருக்கிறீர்கள்? என்று பெற்றோர்களிடம் கேட்டால், அவர்களுக்கே விளக்கம் சொல்லத் தெரியவில்லை.

உலகம் முழுவது பரவி இருக்கும் தமிழர்களை, தமிழர்களாகவே தக்க வைத்துக் கொள்ள நாம் என்ன செய்யப் போகிறோம்? இதுதான் இன்று தமிழ் இனத்தின் முன் எழுந்து நிற்கும் பெரிய கேள்வி!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

காரோட்டத்தை நிற்கவைத்த தேரோட்டம்!



வட்டமேஜை

கல்கி இணைய இதழில் இந்த வார முத்திரைக் கடிதமாக எந்தக் கடிதமும் தேர்வாகவில்லை. வாசகர்களே! ஷார்ட்டா, ஸ்வீட்டா, ஷார்ப்பா எழுதி அனுப்புங்க!
(ஆசிரியர்)

முன்கூட்டியே 'ஐ'டியா போட்டு, 'பி'ல்டப்பாக 'எல்'லா விஷயங்களிலும் ஸ்பெஷல் காட்டியது ஐ.பி.எல்.ஸ்பெஷல்.

-சிம்மவாஹினி, வியாசர் நகர்.

மாண்புமிகு மனம் தொடர் தேவையான அளவு நிரம்பச் சொல்லியுள்ளது. பாராட்டணும்.

- 'மலை' ரத்தினசாமி, சத்தியமங்கலம்.

அழகு நிலையில்லாதது என்பதை உணர்த்தும் பிரெஞ்சு சிறுகதை, அழகு ராணிகளாகத் துடிக்கும் பெண்கள் வாசிக்க வேண்டிய சிறப்புக் கதை.

- சி.கஸ்தூரி ரத்தினம், கும்மிடிப்பூண்டி

அழகு பற்றிய கேள்விக்கு உளறிக் கொட்டி, கிளறி மூடாமல் பக்குவம் கலந்து பதிலைச் சொல்லி அசத்தி விட்டார் அஞ்சலி. பொண்ணு பொழைச்சுக்கும்!

- மலை அரசன், அருகந்தம்பூண்டி

வாசகர்களே!

www.kalkionline.comஇல் உங்கள் புதுப்புனல் கருத்துகளைப் பொங்கப் பொங்கப் பதிவுசெய்யலாமே. பதிவாகும் சிறந்தொரு கடிதத்துக்குக் கிழக்கு பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள புத்தகங்கள் பரிசு!



எதையும் அம்பாள் காதில் போட்டு விட வேண்டும் என்பதன் விளக்கம் மூலம் நம் காதுகளில் நன்றாக விழ வைத்து விட்டார் திருமதி சுதா சேஷய்யன்.

- பி.ஹேமாம்புஜம், சென்னை-17

தலைக்கு மேல் போன விலைவாசி போன்ற பிரச்னைகளை 'ஜாண்'தான் போயிற்று என்று ஆளுங்கட்சியும், இல்லையில்லை 'முழம்' போயிற்று என்று எதிர்க்கட்சியும் எள்ளி நகையாடுவதும், பென்னாகரத் தேர்தல் பண மழையை குடைக்குள் இருந்து தேர்தல் ஆணையம் கணக்குப் பார்ப்பதுமாக வந்த இரண்டு

'ஐ'டியா, 'பி'ல்டப், 'எல்'லா விஷயமும்...

திருத்தம்

சென்ற வாரம் இளமைப் பாலம் (பகுதி-2) தொடரில் அச்சானது போல எட்டாம் ஹென்றியின் முதல் மனைவி 'மேரி' அல்ல; அவள் பெயர் 'கேத்ரின்'.

(ஆசிரியர்)

கார்ட்டூன்களும் நம் இப்போதைய நிலைமையைப் புட்டுப் புட்டு வைத்தன.

- எம்.ஜி.பரத், திண்டுக்கல்.

சோவின் ஆடுகளத்தைப் பற்றி (ஐ.பி.எல்) படித்துப் படித்து வயிறு குலுங்க குலுங்கச் சிரித்தோம்!

- அ.முரளீதரன், மதுரை-3.

'தமிழ் மணவாளன்' தம் பாட்டுத் திறத்தால் கிரிக்கெட் இலக்கணத்தைக் கலக்கமின்றி கலகலப்பாய்க் காட்சிப் படுத்தி மன ஓட்டத்தை பௌண்டரியாகவும், சிக்ஸராகவும் எகிற வைத்துள்ளார்.

- 'இனாம்' கேசவன், குருமலை

பெரியார்தாசன் ஒரே கல்லில் மூன்று மாங்காய்களை அடித்து விட்டாரே? இறையுணர்வு... பெரியார் கொள்கைகளில் நாட்டமிருப்பது போல் காண்பிப்பது... சிறுபான்மை இனத்தவர்! பலே, சேஷாச்சலம்!

- ஈஸ்வர்குமார், பெசன்ட்நகர்.

சீஸனுக்குத் தகுந்த மாதிரி சிறப்பிதழ் வெளியிடறதுலயும், டைமிங்கா போட்டிகள் வைக்கறதுலயும் கல்கிக்கு இணை கல்கியே!

- பி. கோபி, கிருஷ்ணகிரி-1

'கச்சேரி ஆரம்பம்' படத்தின் விமர்சனத்தை 'ஒரே வார்த்தை'யில் கமர்ஷியல் கேசரின்னு சர்டிபிகேட் வழங்கிட்டீங்க... ரொம்ப தேங்க்ஸ்!

- தனுஸ்ரீ, முனியங்குறிச்சி.

பரிசுக் கடிதம்

கிழக்குப் பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம்:

தலைசிறந்த கத்தோலிக்கக் கடலோரக் கிராமமான 'மணப்பாடு' என்னுமிடத்தில் உள்ளது எங்கள் கத்தோலிக்கக் குடும்பம். என்றாலும், எங்கள் பாட்டியின் வீட்டை ஒவ்வொரு புத்தாண்டிலும் அலங்கரிப்பது குட்டி கிருஷ்ணனின் அழகிய படங்களுடன் கூடிய நாள்காட்டியே! சிறந்த கிறிஸ்தவரான என் பாட்டி மூலம் கிருஷ்ணனின் கதைகளைக் கேட்டு, மகிழ்ந்து வளர்ந்தவன் நான். இன்றைய 'திருமணமின்றி சேர்ந்து வாழலாம்' என்னும் முடிவை தெய்வீகமான ராதா - கிருஷ்ணன் உறவுடன் ஒப்பிட்டு, நீதிபதிகள் கூறியிருப்பது இந்து மதத்தினரை மட்டுமின்றி, மதங்களைக் கடந்து, கிருஷ்ணனிடம் பாசமுடன் பிணைக்கப்பட்டுள்ள என் போன்றவர்களையும் காயப்படுத்தி உள்ளது.

தங்களின் நேர்மையான, அறிவார்ந்த தலையங்கத்துக்கு நன்றி.

- தார்சி எஸ்.பெர்னாண்டோ, சென்னை-92

காதில் விழுந்தவை



வீரபாண்டியாரின் வீண் பிடிவாதம்!

தங்கள் கோரிக்கையில் நூறு சதம் நியாயம் இருந்தும், விவசாயத் துறை அமைச்சர் வீரபாண்டியாரின் வீண் பிடிவாதத்தால், தாங்கள் வஞ்சிக்கப்படுவதாக அழுது புலம்புகிறார்கள் தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள்.

''தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அளவில் வேளாண் விற்பனை மையங்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகமாக விளையும் விவசாயப் பொருளை விவசாயிகளிடமிருந்து பெற்று, அதைக் கிடங்குகளில் பாதுகாத்து, அவர்களுக்கு லாபம் வரும் வகையில் விற்றுத் தருவதே இந்த விற்பனை மையங்களின் வேலை. இந்தச் சேவையை அவர்களுக்குச் செய்து தருவதற்காக, விளைபொருளை வாங்கும் வியாபாரியிடம் மார்க்கெட் செஸ் (தீர்வை) என்று வசூலிக்கிறது தமிழக அரசு. இந்த வசூல் என்பது இப்போது எந்தவிதமான அடிப்படையும் இல்லாமல், சகட்டுமேனிக்கு எல்லாப் பொருள்களையும் வாங்கும் வியாபாரிகளிடம் வசூலிக்கப்படுகிறது. குறிப்பிட்ட பகுதியில் அதிகமாக விளைகிறதா இல்லையா என்று கூடப் பார்க்காமல், காய்கறி, கீரை, பழங்கள், நெல், அரிசி, கோதுமை, பயறு, பருப்பு வகைகள், எண்ணெய் முதலான முந்நூறு உணவுப் பொருள்களுக்கு இந்தத் தீர்வையை வசூலிக்கின்றனர். இதில் வேடிக்கை (வேதனை) என்னவெனில், கோதுமை, பருப்பு வகைகள் போன்றவைகளை நாம் வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்கிறோம். நம் விவசாயிகளுக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அதே சமயம், இங்குள்ள வேளாண் விற்பனை மையத்துக்கும் இந்த வெளிமாநில விவசாயப் பொருள்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. அவர்கள் இது தொடர்பாக எந்தச் சேவையும் செய்வதும் கிடையாது. அப்படியிருக்க, அவைகளைத் தருவிக்கும் எங்களிடமும் இந்தப் பொருள்களுக்காக மார்க்கெட் செஸ் வசூலிக்கப்படுகிறது. இது எவ்வகை நியாயம்? முதல்வர் உட்பட எல்லோரும் இக்கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், விவசாயத் துறை அமைச்சரின் தேவையற்ற ஈகோவால், நாங்கள் தண்டிக்கப்படுகிறோம்'' என்று கொதித்த வியாபாரிகள் நீதிமன்றம் சென்றனர்.

எந்தவிதமான விதிமுறைகளுக்கும் உட்படாமல் வசூலிக்கப்படும் இந்தத் தீர்வையைக் கண்டித்ததாம் நீதிமன்றம். ''முதல்வர் மனது வைத்தால் மட்டுமே நிவாரணம் கிடைக்கும்'' என்று பொருமுகிறார்கள் வியாபாரிகள்.

- சஞ்சயன்

"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி ஒளியாக உலகிற்கு வந்தேன்" என்று சொன்ன இயேசுவை ஓர் அரசருக்குரிய மரியாதையுடன், மக்கள் வரவேற்றார்கள். 'பாஸ்கா' என்னும் பண்டிகைக் கொண்டாட்டத்தின் போது நடந்த நிகழ்வு இது.

இயேசுவை கழுதைக் குட்டியின் மேல் அமரச் செய்து, பெருந்திரளான மக்கள் தங்கள் மேலாடைகளையும், மரக்கிளைகளையும் விரித்து, குருத்தோலைகளை ஏந்தி இயேசுவை 'ஓசன்னா' என வாழ்த்தி, அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அந்த நிகழ்வின் பிரதிபலிப்பாகவே, தேவாலயங்களில் தற்போது குருத்தோலை ஞாயிறு (palm sunday) எனக் கொண்டாடப்படுகிறது.

இப்போதும் குடும்ப உறுப்பினர் அனைவரும் கிறிஸ்தவத் தேவாலயங்களில் குருத்தோலைகளை எடுத்து வருவார்கள். தேவாலயக் குருவானவர் ஜெபித்து, புனித நீர் தெளித்தபின், அவை மக்களுக்கு வழங்கப்படுகிறது. கையில் குருத்தோலை ஏந்திய மக்கள், "ஓசன்னா" என்னும் வாழ்த்துப் பாடல்களைப் பாடியவாறு நகர தெருக்களில் ஊர்வலமாக, அவற்றை எடுத்துச் செல்கின்றனர். பின்பு, மீண்டும் தேவாலயம் திரும்பி, குருத்தோலைகள் வைக்கப்படுகின்றன. அதன் பிறகு, பைபிள் வசனங்கள் வாசிக்கப்பட்டு, மறையுரையுடன் திருப்பலி நிறைவேற்றப்படுகிறது.

பெரிய வியாழன்:

குருத்தோலை ஞாயிறைத் தொடர்ந்து வரும் வியாழன், "பெரிய வியாழன்" எனச் சிறப்பிக்கப்படுகிறது. இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி, மக்களின் சீடர்கள் பணிவாக நடந்து கொள்ள வேண்டும் என உபதேசித்த நாளாகும்.

சிலுவையில் அறையப்பட்டு இயேசு உயிர் நீத்த புனித வெள்ளிக்கு பின், இயேசு கல்லறையிலிருந்து மீண்டும் உயிர்த்து எழுந்த நாளை 'ஈஸ்டர்' பண்டிகையாக உலகமெங்கும் கொண்டாடுகின்றனர்.



குருத்தோலைத் திருவிழா!

குருத்தோலை ஞாயிறு, பெரிய வியாழன், புனித வெள்ளி, ஈஸ்டர் திருவிழா என்று கடந்த காலத்தை இறைவனின் பொருட்டு நினைவுபடுத்தி திருவிழாக்கள் சென்ற மாதம் முழுதும் கொண்டாடினோம். வழிபடும் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தே என்கின்றனர் கிறிஸ்துவர்கள்.

- ஆர்.பாலா

படம்: சாலட் மேரி ராபர்ட்

கல்வி ஸ்பெஷலாய்...

அடுத்த வாரம்

- புதுசா என்ன படிக்கலாம்?
- பெரிசா எப்படி ஜெயிக்கலாம்..?
- எங்கே இருக்கு அந்தப் படிப்பு?
- பர்ஸை நிரப்பும் பயிற்சி வகுப்புகள்
- பராக் பராக்!
  - வருது ஃபாரின் பல்கலை!

சரஸ்வதி + லக்ஷ்மி கடாக்ஷம் ததும்பும்

சித்திரைச் சிறப்பிதழ்

கல்கி வழங்கும்

அதிரடியாய் 6 வார ஆரவாரம்

கோடைக்கால கொண்டாட்டம்!

நீங்க சொன்னா... நாங்க கேட்போம்!

உங்க பங்களிப்பு என்ன?
கோடைகால யோசனைதான் என்ன?
யோசனை ஏற்கப்பட்டால் அதுக்கும் பரிசுங்க!

சொல்லுங்க: இ-மெயிலிலும், தபாலிலும்,

இ-மெயில்: kalki@kalkiweekly.com
முகவரி: கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை-32.

கூடுதல் விவரங்கள் சித்திரைச் சிறப்பிதழில்...

ஆரம்பம்... ஆரம்பம்...



வண்ணநிலவன் எழுதும்

உள்ளும் புறமும்

-தொடர்கதை

(+)ப்ளஸ் (-)மைனஸ் = பெரும்புள்ளி

- அறிந்த தலைவர்கள்... அறியாத பக்கங்கள்...

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed t
post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

